போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

MARCH 13, 1923.

ந. 6 (1).] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் வருஷம் மார்ச்மீ 13௳. [விலை, 3 அ.

சென்னை கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS.

சென்னபட்டணம் கவர்னரவர்களின் ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் ஸிலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட் முதலியவை.

BILL No. 12 OF 1922.

1922-ம் வருஷத்து 12-ம் நெ. மசோதா ஆக்ட்.

ஹிந்து மதசம்பந்தமான இனங்களைக்குறித்த 1922-ம் வருஷத்திய சென்ன பட்டணத்து மசோதா ஆக்டின்மேல் ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்.

சென்னபட்டணம் கவர்னரவர்களின்

கௌரவம்பொருந்திய சட்டநிரூபண சபையாருக்கு.

ஹிந்து மத சம்பந்தமான இனங்களைக்குறித்த (1922-ம் வருஷத்து 12-வது) மசோதா ஆக்டைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டி மெம்பர்களாகிய அடியில் கையெழுத்திட்ட நாங்கள் பின்வரும் ரிபோர்ட்டை வினயமாகச் செய்து கொள்ளுகிறோம்.

2. இந்த மசோதா ஆக்டானது - 1922-ம் வருஷம் டிஸெம்பர்மீ 5௳ இங்கிலீஷிலும், 1922-ம் வருஷம் டிஸெம்பர்மீ 12௳ தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பாஷைகளிலும் போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தம் செய்யப்பட்டது.

3. நாங்கள் மொத்தத்தில் பதின்மூன்று தடவை சபை கூடினோம். இப்பொழுது ஏற்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் சகல நபர்களுக்கும் இது விஷயத்தில் அக்கறையுள்ள சகல கூட்டத்தார்களுக்கும் இந்த மசோதா ஆக்டிற்கண்ட நிபந்தனைகளைப்பற்றி தாங்கள் தெரிவித்துக்கொள்ளும் விஷயங்களை எழுதியனுப்பவும் சாக்ஷிகளைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று விண்ணப்பங்கள் செய்துகொள்ளவும் ஜனவரிமீ 22௳ வரையில் அவகாசம் கொடுக்க எங்களுடைய முதல் சபையில் தீர்மானித்தோம். இந்தப்படி பொருள்படும்படியான ஒரு விளம்பரம் உடனே போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும், மதராஸ் மெய்ல், ஜஸ்டிஸ், நியூ இந்தியா, டேய்லி எக்ஸ்ப்ரேஸ் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படடது. குறிப்பிடப்பட்ட தேதிக்குள் 249 விண்ணப்பங்களும் இதர கடிதங்களும் எங்களுககுக் கிடைத்ததுமன்றி, 26 தொகுதிகளான சாக்ஷிகளைப் பரிசீலனைக்கு அனுப்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஜனரிமீ 27, 28, 29, 31௳களிலும் பெப்ரவரிமீ 1௳யிலும் நாங்கள் சபை கூடினபோது, இந்த சாக்ஷிகளில் பதினொரு பேரைப் பரிசீலனை செய்வதிலேயே எங்களுடைய காலமெல்லாம் செலவழிந்தது. எங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட விஷயங்களையும் நாங்கள் எடுத்துக்கொண்ட சாக்ஷியத்தையும் அனுசரித்து, நாங்கள் அவைகளில் ஏற்பட்ட பிரதான பிரசினைகளைக்குறித்து பெப்ரவரிமீ 3௳, 4௳ நாங்கள் சபை கூடினபோது ஆராய்ச்சி செய்து சில முடிவுகளுக்கு வந்தோம். பிரதமத்தில் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டில் ஷை முடிவுகள் காரணமாக சிறிது மட்டில் விஸ்தாரமாய் மாறுதல்கள் செய்யவேண்டியதாயிற்று. நாங்கள் செய்த முடிவுகளை அனுசரித்து திருத்தி யெழுதப்பட்ட மசோதா ஆக்டைப்பற்றி நாளதுமீ 11, 12, 13,

14௳களில் நாங்கள் சபை கூடினபோது விவரமாய் ஆலோசித்து, முடிவாய் எழுதப்பட்ட மசோதாவைப்பற்றியும் எங்களுடைய ரிபோர்ட்டைப்பற்றியும் ஆலோசிக்க 18௳ சபை கூடினோம்.

4. பிரதம மசோதா ஆக்டின் முக்கிய அம்சங்களை அப்படியே வைத்துக்கொண்டிருப்பதோடு, அவைகளைச் சில விஷயங்களில் விஸ்தாரமாக்கியும் மற்றும் சில விஷயங்களில் அவைகளுடன் புதிய நிபந்தனைகளை விசேஷமாய்ச் சேர்த்தும் இருக்கிறோம். இந்தப்படி விஸ்தாரப்படுத்தியிருப்பதனாலும் புதிதாய் நிபந்தனைகளைச் சேர்த்துருப்பதனாலும், பிரதமத்தில் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டில் கண்ட அத்தியாயங்களை மறுபடியும் வரிசைப்படுத்தி அமைப்பதும் அதில் கண்ட பகுதிகளை மறுபடியும் தொகுப்பதும் அவசியமாயிற்று. நாங்கள் செய்திருக்கும் மாறுதல்களைப் பிரதமத்தில் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டில் வேறேவிதமான எழுத்துக்களை உபயோகித்து வித்தியாசப்படுத்திக் காட்டுவதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லையென்று நாங்கள் நினைக்கிறோம.

5. குறிப்பிட்ட ட்ரஸ்டுகள் மூலமாய் மடாதிபதிகளிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட கோயில்களின் விஷயத்திலும் மத சம்பந்தமான இதர தருமங்களின் விஷயத்திலும் அவர்கள் ட்ரஸ்டிகள் ஹோதாவில் கண்டிப்பாய் உத்தரவாதிகளாக இருக்கவேண்டுமென்றும், அவர்கள் அப்படிப்பட்ட டரஸ்டுகளைப் பரிபாலனம் செய்துவருவதை மேல்விசாரணைக்கு உட்படுத்துவதில் ஆட்சேபணை இல்லையென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மடத்திற்கே சொந்தமாயுள்ள சொத்துக்களின் விஷயத்தில், அதன் தலைவர் ட்ரஸ்டி ஹோதாவில் இருப்பவரல்லவென்றும், அந்த சொத்தை அவர் நிர்வாகம் செய்துவருவதில் பிரவேசிப்பதானது ஒருவருடைய சொந்த சொத்து விஷயமாய்ப் பிரவேசிப்பது எப்படி நியாயமாகாதோ அப்படியே நியாயமாகாதென்றும் சொல்லப்படுகிறது. பின்னே சொல்லப்பட்டது ஒத்துக்கொள்ளத்தக்கதல்லவென்று நாங்கள் நினைக்கிறோம். ஏனென்றால் - சாதாரணமான ட்ரஸ்ட சொத்தைப் பராதீனப்படுத்துவது அநேகமாய் எந்த சந்தர்ப்பங்களில் நியாயமாகுமோ அந்த சந்தர்ப்பங்களிலன்றி மற்றப்படி மடத்துச் சொத்தின் மூலதனத்தை மடத்தின் தலைவர் பராதீனப்படுத்த அவருக்கு சுவாதீனமில்லையென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. எங்கள் முன்னிலையில் கொடுக்கப்பட்டிருக்கும் சாக்ஷியத்தின் பிரகாரம் ஷை மூலதனத்திலிருந்து கிடைக்கும் வரும்படியையும் காணிக்கைகள் மூலமாகவும் தானங்கள் மூலமாகவும் மடாதிபதிக்கே கிடைக்கக்கூடிய வரும்படியையும மடத்துக்கும் மடத்தின் தலைவர் என்னும் ஹோதாவில் தமக்கும் சம்பந்தபபட்ட காரியங்களுக்கு மாத்திரமே அவர் உபயோகிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஷை பணத்தை மற்றப்படி எம்மாதிரியாகவாகிலும் சொந்த காரியங்களுக்கு உபயோகித்துக்கொள்வது அக்கிரமமாகக் கருதப்படும். ஆகவே, யாதொரு மடமும அதைச் சேர்ந்த இனங்களும் அதன் வரும்படியும் அந்தந்த காலத்தில் மடாதிபதியாயிருப்பவருக்கே முற்றிலும் சொந்தமான சொத்தாகுமென்னும் கொள்கையை நாங்கள் ஒத்துக்கொள்ளக்கூடவில்லை. இந்தக் கொள்கை சிறிதுமட்டில் அமிதவாதக் கொள்கையாகவேயிருக்கிறது; மேலும், சரியானபடி நிர்வாகம் செய்யப்பட்டு வராத யாதொரு ஸ்தாபனத்தின் பரிபாலனத்தில் சீடர்களையும் சேர்ப்பது அவசியமென்று ஏற்படுகிற சந்தர்ப்பங்களிலே அந்தப்படியே அவர்களைச் சேர்ப்பது உசிதமாகுமென்று ஷை அமிதவாதக் கொள்கையை எடுத்துச் சொல்பவர்களும் எங்கள் முன்னிலையில் ஒத்துக்கொண்டிருககிறார்கள். இது கவனிக்கத்தக்கதாகும். மடமானது அதன் சீடர்களின் ஆத்துமார்த்தமான க்ஷேமத்தை உத்தேசித்தே ஏற்பட்ட ஸ்தாபனமாகும். மடாதிபதியோ துறவியாவார். அது காரணம்பற்றியே, கிரமமானவைகளாயும் தம்முடைய சீடர்களின் நன்மைக் கேற்றவைகளாயுமுள்ள விஷயங்களிலன்றி மற்ற விஷயங்களில் அவர் அக்கறையுடையவராயிருக்க முடியாது. அவர்களில் அனேகருடைய சுவாதீனத்தில் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. அவர்களில் பலர் தங்கள் வசத்திலிருக்கும் சொத்துக்களை சரியானபடி நிர்வாகஞ் செய்யாமற்போனது மாத்திரமேயல்லாமல், அவைகளை துர்வினியோகப்படுத்தியும் இருக்கிறார்களென்பதற்குச் சாட்சியமும் இருக்கிறது. இந்த உண்மைகளையும் சந்தர்ப்பங்களையும் யோசிக்கும்போது, இந்த மசோதா ஆக்டின் வியாபகத்தினின்றும் மடங்களை அடியோடு நிவாரணை செய்ய நாங்கள் மறுத்திருப்பதும் பெரிதும் நியாயமென்றே ஏற்படும்.

6. ஆயினும், யாதொரு மடத்தின் சொத்துவிஷயமாய், அதிலும் முக்கியமாக அதிலிருந்து கிடைக்கும் வரும்படி விஷயமாய், மடத்தின் தலைவருக்குள்ள அதிகாரங்களானவை சாதாரணமான ஒரு ட்ரஸ்டிக்கு உள்ள அதிகாரங்களைக் காட்டிலும் விரிவானவையாகுமென்பதையும் ஒரு மடாதிபதியின் சீடர்கள் ஆத்துமார்த்தமான விஷயங்களில் அவரிடத்தில் பயபக்தியுடனும் கௌரவமாகவும் நடந்துகொள்வது காரணமாக, அவருக்கு ஒரு உயர்ந்த அந்தஸ்து ஏற்பட்டிருக்கிறதென்பதையும், அதனால் விசேஷ உரிமையுள்ளவராக பாவிக்கப்படுவதற்கு அவருக்கு அர்ஹதை உண்டென்பதையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம். ஆகவே, மடங்களின் விஷயத்தில் பிரதேச கம்மிட்டிகளுக்கு எவ்வித சம்பந்தமும் இருக்கக்கூடாதென்றும், சாதாரணமாய் மடத்தின் தலைவர் வரவு செலவு திட்டக்கணக்கு (பட்ஜெட்), வருஷவாரி கணக்கு ஆகிய இவைகளை அனுப்பினால் போதுமென்றும், அவர் சரியான கணக்குகள் வைத்து வருவதோடு அவைகளைத் தணிக்கை செய்விக்கவேண்டுமென்றும் நிபந்தனை ஏற்படுத்தி யிருக்கிறோம். சரியானபடி நிர்வாகம் செய்யப்படவில்லையென்று ருஜுவாகிற அல்லது சீடர்களில பலர் இப்போதைக் காட்டிலும் அதிகமாய் மேல்விசாரணை செய்வதற்கு ஏற்பாடுகள் பண்ணவேண்டுமென்று விரும்புகிற விஷயங்களில் மாத்திரமே அந்தப்படி ஏற்பாடுகள் செய்யக்கூடும்.

7. சில கோயில்களையும் மேலே கண்டபடி விசேஷ உரிமையுள்ள ஸ்தாபனங்களாக பாவிக்கத் தீர்மானித்து, அவைகளுக்கு 'விலக்கப்பட்ட கோயில்கள்' என்று பெயர் கொடுத்திருக்கிறோம். மேலும், இந்த மசோதா ஆக்டின் 5-வது பகுதியைச் சேர்ந்த (5) அடையாளமிட்ட உட்பகுதியில் அவைகளுக்கு அர்த்தம் சொல்லியிருக்கிறது. எந்தக் கோயில்களின் ட்ரஸ்டிகள் சகலருமாவது அவைகளில் எவராவது பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டிகளா யிருக்கிறார்களோ அந்தக் கோயில்களை பிரதம மசோதா ஆக்டில் 'பரம்பரையாய் ஏற்பட்ட கோயில்கள்' என்று விவரித்திருந்தோம். அந்த சொற்றொடரை நாங்கள் இப்போது விட்டுவிட்டிருக்கிறோம். எந்தக் கோயில் ட்ரஸ்டிகளில் ஒருவராகிலும் பரம் பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டியா யில்லையோ அந்தக் கோயில்கள் விலக்கப்பட்ட கோயில் என்னும் சொற்றொடரின் அர்த்தத்தில் அடங்காது. பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டி களின் விசாரணையிலிருக்கும் கோயில்களின் விஷயத்திலுங்கூட, எந்தக் கோயில்களின் ட்ரஸ்டிகளுக்கு பரம்பரை ஹோதா 1842-ம் ௵த்துக்குப் பிறகு முதல் தடவையாய் உண்டாயிருக்கிறதோ அப்படிப்பட்ட கோயில்களும் ௸ அர்த்தத்திலிருந்து விலக்கப்படும். இங்கு 1842-ம் வருஷமென்று ஏன் சொல்லியிருக்கிறதென்றால், அந்த வருஷத்தில் தான் விக்கிரகாராதனை செய்யும் சகல ஸ்தாபனங்களுடனும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று கோர்ட் ஆவ் டைரெக்டெர்ஸ் என்னும் அத்தியக்ஷ சபையார் பிறப்பித்த உத்தரவுகளை அனுசரித்து கவர்ன்மெண்டார் கோயில்களைத் தாங் கள் மேல்விசாரணை செய்வதை விட்டுவிட்டார்கள். அதற்கு முந்தி பரம்பரையாய் ஏற் பட்ட ட்ரஸ்டிகள் இராத ஸ்தாபனங்களை ஒப்பித்துவிடும்போது, கவர்ன்மெண்டார் - 1842-ம் ௵த்துக்குப் பிறகு பரம்பரையாய் வரக்கூடிய ட்ரஸ்டிகளென்று சிலரைப் புதி தாய் ஏற்படுத்தினார்கள். அப்படிப்பட்ட ட்ரஸ்டிகளின் விசாரணையிலேயே யிருக்கும் ஸ்தாபனங்கள் எவ்விதமாகவும் விசேஷ உரிமை யுள்ளவைகளென்று பாவிக்கப் பெறுவ தற்கு அர்ஹதை யுள்ளவைகளல்லவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். 'விலக்கப் பட்ட கோயில்களில்' பெரும்பான்மையானவைகளின் ட்ரஸ்டிகளோ ஜமீன்தார்களாக வும் விசேஷ திரவியம் படைத்த நிலத்துக் குடையவர்களாகவும் அல்லது மற்றவர்களாக வும் இருப்பதுமல்லாமல், அந்தக் கோயில்களின் சம்ரக்ஷணைக்காகத் தாங்களாகவே திரவிய சகாயம் செய்தும் இருக்கிறார்கள்; சில விஷயங்களில் இன்னும் செய்துகொண்டும் வருகி றார்கள். பிரதேச கம்மிட்டிகள் மேல்விசாரணை புரிவதற்கு அவர்கள் பலமாய் ஆட்சே பணை செய்கிறபடியால், அந்தக் கோயில்கள் விஷயத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அனுதாபத்துக்கு எவ்விதமாகவேனும் பாதகம் உண்டாகிற பட்சத்திலே, அவர்களிட மிருந்து அவைகளுக்குக் கிடைத்திருக்கும் திரவிய சகாயத்துக்கும் இன்னும் கிடைத்து வருகிற திரவிய சகாயத்துக்கும் பிரதிகூலமாய் பாதகம் ஏற்படக்கூடும்.

8. மேல்விசாரணை புரிவதற்காக பிரதம மசோதா ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த அதிகாரிகளுடன் கூட இங்கிலாந்தில் சாரிடி கம்மிஷனர்கள் என்று சொல்லப்படும் தரும பரிபாலன கம்மிஷனர்களைப்போல் ஒரு பிரதான போர்ட் அல்லது போர்டுகளைச் சேர்க்க எங்களில் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்பட்டு நாங்கள் அந்தப்படியே தீர்மானித் திருக்கிறோம். ௸ போர்டானது முக்கியாம்சத்தில் பரிபாலனம் செய்யும் சபையேயாகும். 1863-ம் ௵த்து 20-வது ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட பிரதேச கம்மிட்டிகள் தங்கள் இஷ்டப்படியே சகல காரியங்களையும் நடத்திக்கொள்ளும்படி விட்டுவிடப்பட்டன. இது அவ்வளவு உசிதமா யில்லை. இன்ன முறைப்படி நடவடிக்கை நடத்தவேண்டுமென்று சொல்பவர்கள் இராதது காரணமாகவும், மேல்விசாரணை புரிபவர்கள் இராதது காரண மாகவும், சம அதிகாரம் ஏற்பட்டிராதது காரணமாகவும், அந்தக் கம்மிட்டிகளின் வேலை சரிவர நடைபெறவில்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காகவே ௸ போர்டை ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது. கம்மிட்டியாரின் மேல்விசாரணையினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கும் மடங்களின் விஷயத்திலும் விலக்கப்பட்ட கோயில்களின் விஷயத்தி லும் ௸. போர்டார் நேரே பிரவர்த்திப்பார்கள்; மேலும், அவர்கள் - கம்மிட்டிகளின் தீர் மானங்களின்மேல் செய்யப்படும் அப்பீல்களை விசாரணை செய்வது மாத்திரமே யல்லாமல், 1817-ம் ௵த்திய சென்னபட்டணத்து 7-வது ரெகுலேஷன்படி ரெவினியு போர்டார் செலுத்துவதைப் போலவே, சகல மத ஸ்தாபனங்களின் விஷயத்திலும் பொதுவாய் மேற் பார்வை செலுத்தி வருவார்கள் (பகுதி 14). ஆரம்பத்தில் இந்த ராஜதானி முழுவதுக் கும் ஒரு போர்ட் போதுமானதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆனால், அந்த போர்டார் விசாரணை வகிக்கும் வேலையானது பெருகிப்போய், பரிபாலனம் திறமையாய் நடைபெறும் பொருட்டு சிற்சில ஜில்லாக்களை ஒன்றாய்ச் சேர்த்து அப்படிப்பட்ட ஒவ் வொரு தொகுதியின் மேல்விசாரணை அதிகாரம் செலுத்தும்படியாக பல போர்டுகளை சீக்கிரத்திலேயே ஏற்படுத்தவேண்டிய அவசியம் நேராமற் போகாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதற்காகவும் இந்த மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருக் கிறது.

9. ட்ரஸ்டிகள் தங்களுடைய கணக்குகளை ஸெர்டிபிகேட் பெற்ற ஆடிட்டர்கள் (தணிக்கை உத்தியோகஸ்தர்கள்) மூலமாய்த் தணிக்கை செய்வித்துக்கொள்ள வேண்டு மென்று பிரதம மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருந்தது. ஆனால், ஆடிட்டர்கள் எந்த நபர்களுடைய கணக்குகளைத் தணிக்கை செய்கிறார்களோ அவர்களிடமிருந்து பிரதி பலன் ரூபமாகத் தொகை பெறவேண்டியதா யிருக்கும் பட்சத்தில், அவர்களை முற்றிலும் சுவேச் சையாய் வேலை செய்வார்களென்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே, கவர்ன்மெண்டா

ரால் நியமிக்கப்பட்டு அவர்களால் நேரில் மேல் விசாரணை செய்யப்பட்டு வரும் நபர்களைக் கொண்டு ஷை தணிக்கை வேலையை நடத்தவேண்டுமென்று நாங்கள் அனைவரும் ஒரு மனதாய்த் தீர்மானித்திருக்கிறோம்.

10. இந்த மசோதா ஆக்டில் நாங்கள் சேர்த்திருக்கும் பிரதான அம்சங்களும் செய்திருக்கும் பிரதான திருத்தங்களும் பின்வரும் பாராக்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

11. பகுதி 2.—(1) குறிப்பிட்ட உட்பகுதியில் சென்னை ராஜதானிப் பட்டணத்துக்கு இந்த ஆக்ட் பிரயோகப்படாதபடி விலக்கிய வார்த்தைகளை விட்டுவிட்டிருக்கிறோம். பிரதம மசோதா ஆக்டின் 40-வது பகுதியில் கண்டிருக்கும் நிவாரணையையே (3) குறிப்பிட்ட உட்பகுதியில் திருத்தி எழுதியிருக்கிறது. ஆனால் 500 ரூபாய்க்குக் குறைந்த வரும்படியுள்ள மடங்களையும் அதில் சேர்த்திருக்கிறது.

12. பகுதி 3.—இந்தப் பகுதியில் அட்வொகேட் ஜெனரலுக்குச் சம்பந்தப்பட்டிருக்கும் பாகமானது பிரதம மசோதா ஆக்டின் 37-வது பகுதியைச் சேர்ந்த (6) அடையாளமிட்ட உட்பகுதியைப் போன்றதேயாகும். மேலும், ஹைகோர்ட்டுக்குச் சம்பந்தப்பட்ட பாகமானது - சென்னை ராஜதானிப் பட்டணம் சம்பந்தப்பட்ட மட்டில் இந்த ஆக்டின்படிக்கான விசாரணை அதிகாரத்தை ஸிடி ஸிவில் கோர்ட்டாருக்கு நாங்கள் கொடுத்திருப்பது காரணமாக அவசியமாகிறது.

13. பகுதி 4.—ரத்து செய்யப்பட்ட சட்ட திட்டங்களில் 1817-ம் ௵த்திய சென்னபட்டணத்து 7-வது ரெகுலேஷனும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

14. பகுதி 5.—'பரம்பரையாய் ஏற்பட்ட இனம்', 'பரம்பரையாய் ஏற்பட்டிராத இனம்' என்பவைகளுக்குச் சொல்லியிருக்கும் அர்த்தத்தை நாங்கள் விட்டுவிட்டு 'தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணம்', 'விலக்கப்பட்ட கோயில்', 'மடம்', 'கோயில்' என்பவைகளுக்கு அர்த்தங்களைச் சேர்த்திருக்கிறோம். 'கோர்ட்' என்பதில் ஸிடி ஸிவில்கோர்ட் என்பதும் அடங்கும்படியாக அதன் அர்த்தத்தை மாற்றியிருக்கிறோம். 'பற்றுள்ள நபர்' என்பதன் அர்த்தமானது - ஏறக்குறைய பிரதம மசோதா ஆக்டின் 38-வது பகுதியில் சொல்லியிருப்பதேயாகும்.

2-ம் அத்தியாயம.

கம்மிஷனர்களின் போர்டுகள்.

15. பகுதி 7.—யாதொரு போர்டில் மூன்று மெம்பர்களுக்குக் குறைந்திருக்கக்கூடாதென்றும் ஐந்து மெம்பர்களுக்கு மேற்பட்டிருக்கக்கூடாதென்றும் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறது.

16. பகுதி 8.—ஒவ்வொரு கம்மிஷனரும் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவராயிருக்கவேண்டுமென்பது அவசியமாகும். கம்மிஷனர்களை நியமிக்கும் அதிகாரமானது கவர்ன்மென்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கவேண்டுமென்பது எங்களில் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்பட்டு நாங்கள் அப்படியே தீர்மானித்திருக்கிறோம். பயிற்சி பெற்ற யாதொரு லாயராவது (நியாயவாதியாவது) ஜட்ஜாவது ஷை போர்டின் ப்ரெஸிடென்டாயிருக்கும்படி அவருடைய யோக்கியதாம்சங்களை நிஷ்கரிஷை செய்திருக்கிறோம். ஏனென்றால், அந்த உத்தியோகத்துக்கு அப்படிப்பட்ட பயிற்சியும் அனுபவமும் அத்தியாவசியமாகும்.

17. பகுதி 10.—ஷை போர்டானது அதன் அலுவல்களைத் திறமையாய்ச் செய்ய வேண்டுமானால், அதில் சம்பளம் பெறும் கம்மிஷனர்கள் இருக்கவேண்டுமென்றும், அவர்களுடைய சம்பளங்கள் யோக்கியதையுடைய நபர்கள் அந்த உத்தியோகத்துக்கு வரக்கூடிய அளவுக்குப் போதுமானவையாயிருக்கவேண்டுமென்றும் நாங்கள் எண்ணுகிறோம். அப்பிரகாரமே, ப்ரெஸிடென்டின் உச்ச சம்பளம் 1,200 ரூபாயாகவும், இதர கம்மிஷனர்களின் சம்பளம் 800 ரூபாயாகவும் இருக்கவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்திருக்கிறோம்.

18. பகுதி 15.—ஷை போர்டாருக்குத் தங்களுடைய வேலையைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்குமாத்திரமேயல்லாமல், கம்மிட்டிகள் ட்ரஸ்டிகள் ஆகிய இவர்களின் வேலையைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்கும் சகாயச் சட்டங்கள் செய்ய அதிகாரம் இருக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

3-ம் அத்தியாயம்.

கோயில் கம்மிட்டிகள்.

19. பகுதி 16.—கம்மிட்டிகளிலுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையையாவது அவைகளின் விசாரணை அதிகாரத்தையாவது மாற்றும்போதாகிலும் கம்மிட்டிகளை எடுத்

துவிடும்போதாகிலும் ஷை போர்டாருடன் கலந்து ஆலோசிக்கவேண்டுமென்றும், (2) அடையாளமிட்ட உட்பகுதியின்படிக்கான ஆஸ்திகளையும் கடன்களையும் ஒருவகை செய்வதைக்குறித்து கவர்ன்மென்டாருக்கு பார்த்தியாக ஷை போர்டார் உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்றும் நாங்கள் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறோம்.

20. பகுதி 17.—யாதொரு கம்மிட்டியிலுள்ள நியமிக்கப்பட்ட மெம்பர்களின் உச்ச சங்கியா பரிமாணத்தை நாலில் ஒரு பங்காக நாங்கள் குறைத்திருப்பதுடன், அவர்களை நியமிக்கும் அதிகாரத்தையும் கவர்ன்மென்டாரிடமிருந்து ஷை போர்டாருக்கு ட்ரான்ஸ்பர் செய்திருக்கிறோம்

21. பகுதி 19.—16-வது பகுதியிலும் இந்தப் பகுதியிலும் நாங்கள் செய்திருக்கும் மாறுதல்களின்படி, யாதொரு கோயிலுக்காகவாவது யாதொரு வகுப்பைச் சேர்ந்த கோயில்களுக்காகவாவது சகல கோயில்களுக்காகவுமாவது ஒரு கம்மிட்டி ஏற்படுத்தப்படலாம். ஒவ்வொரு கம்மிட்டிக்கும் தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணம் இன்னதென்று கவர்ன்மென்டார் அறிக்கை செய்யவேண்டும்.

22. பகுதி 21.—தெரிந்தெடுப்பவர்களுக்குரிய சகல யோக்கியதாம்சங்களும் யோக்கியதைக்குறைவுகளும் 1-வது ஷெட்யூலில் சேர்த்துவிடப்பட்டிருக்கின்றன. அவை ஏறக்குறைய இந்திய சட்டநிரூபண சபைக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பவர்களுக்குரிய யோக்கியதாம்சங்களும் யோக்கியதைக் குறைவுகளுமேயாகும்.

23. பகுதி 22.—(3) குறிப்பிட்ட உட்பகுதியில் (f) அடையாளமிட்ட ஒரு புதிய நிபந்தனையைச் சேர்த்திருக்கிறோம். கம்மிட்டியின் சபைகளுக்குத் தொடர்ச்சியாய் வராமலிருப்பது காரணமாக ஏற்படும் யோக்கியதைக்குறைவு விஷயமாய் அதில் நிபந்தனை கண்டிருக்கிறது.

24. பகுதி 24.—வைஸ் ப்ரெஸிடென்ட் ஒருவர் இருக்கவேண்டுமென்று நாங்கள் நிபந்தனை கண்டிருப்பதுடன், ப்ரெஸிடென்டின் உத்தியோக கால அளவை(யும் வைஸ் ப்ரெஸிடென்டின் உத்தியோக கால அளவையும்) ஒரு வருஷத்திலிருந்து மூன்று வருஷத்துக்கு உயர்த்தியிருக்கிறோம்.

25. பகுதி 25.—மெம்பர்கள் ப்ரெஸிடென்ட் ஆகிய இவர்கள் செய்யும் ராஜிநாமாக்களை அங்கீகரிப்பது அவசியமாகுமென்று பொருள்படும் வார்த்தைகளை நாங்கள் விட்டுவிட்டிருப்பது மாத்திரமேயல்லாமல், இன்ன தேதியிலிருந்து அந்த ராஜிநாமாக்கள் செலாவணியாகுமென்று ஸ்பஷ்டமாக்கியும் இருக்கிறோம்.

26. பகுதி 26.—இந்தப் பகுதி திருத்தியெழுதப்பட்டிருக்கிறது. மெம்பர்களைத் தெரிந்தெடுப்பவர்கள் அந்தப்படி தெரிந்தெடுக்கத் தவறிப்போய் காலி ஸ்தானத்தை நேமக மூலமாய்ப்பூர்த்தி செய்வதற்குமுன், அவர்கள் இன்னபடி செய்ய விரும்புகிறார்கள் என்பதைத் தெரிவிக்க அவர்களுக்குக் குறைந்தது இரண்டு முறையாவது அவகாசம் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ப்ரெஸிடென்டின் விஷயத்தில், அவரைத் தெரிந்தெடுக்கத் தவறிப்போகிறபட்சத்திலே காலி ஸ்தானத்தை நேமக மூலமாய்ப் பூர்த்தி செய்வதற்குள்ள அதிகாரத்தை நாங்கள் எடுத்துவிட்டிருக்கிறதுமல்லாமல், வைஸ் ப்ரெஸிடென்ட் ஒருவர் இராமற்போகிற விஷயத்திலே, ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுக்கும் காரியத்துக்காக எந்த மூன்று கம்மிட்டி மெம்பர்களாவது சபைகூட்டுவது சாத்தியமாயிருக்கும்படியும் செய்திருக்கிறோம்.

27. பகுதி 31.—கம்மிட்டிகளின் விசாரணையிலிருக்கும் கோயில்களைப் பொதுவாய் மேற்பார்வையிடுவதற்கு அவைகளுக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்றும், இந்த அதிகாரமானது இது விஷயமாய் போர்டாருக்குள்ள அதிகாரத்துக்கு மாத்திரமே உட்பட்டிருக்கவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

28. பகுதி 33.—கம்மிட்டிகள் மடங்களின் விஷயத்திலாவது விலக்கப்பட்ட கோயில்களின் விஷயத்திலாவது எவ்விதமாகவும் தலையிட்டுக்கொள்ளக்கூடாதென்று நாங்கள் திட்டமாய் நிர்ணயித்திருக்கிறோம்.

4-ம் அத்தியாயம்.

பொதுவில் மதசம்பந்தமான இனுங்கள்.

29. பகுதிகள் 34, 35.—பிரதம மசோதா ஆக்ட் 19-வது பகுதியின்படி, இனுங்களைக் குறித்து சரியான ரெகார்டைத் தயார் செய்யும் வேலை கம்மிட்டிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. 34-வது, 35-வது பகுதிகளில் இந்த நிபந்தனையானது மிகவும் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. மடங்கள் அல்லது கோயில்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் சகல இனுங்களைப்பற்றியும் சங்கதி தெரிவிப்பதற்கு ட்ரஸ்டி உத்தரவாதியாவார். மேலும், இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கின பிறகு போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்குள் அந்தப்படி சங்கதி தெரிவிக்கப்படவேண்டும். கம்மிட்டியார் எவராவது

இருந்தால் அவர்கள் ட்ரஸ்டியால் தெரிவிக்கப்பட்ட சங்கதியைச் சரிபார்ப்பார்கள். அதன் மேல் போர்டார் - ஒவ்வொரு இனாமுக்கும் சம்பந்தப்பட்ட ரெஜிஸ்டரில்கண்ட விஷயங்களை முடிவாய்த் தீர்மானம் செய்வார்கள். மேலும், ரெஜிஸ்டரை வருஷாவருஷம் சரிபார்த்து அது வரையில் அதில் எழுதவேண்டிய சங்கதிகளைப் பூர்த்தியாய் எழுதவேண்டுமென்றும் நாங்கள் நிபந்தனைகண்டிருக்கிறோம். மதசம்பந்தமான இனாங்களைப்பற்றி போதுமான அல்லது சரியான சங்கதி கிடைக்காதிருப்பதனால் திறமையான மேல் விசாரணை புரிவதற்கு இப்போது பெரிதும் அசௌகரியம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த இரண்டு பகுதிகளும் மிகவும் முக்கியமானவை என்று நாங்கள் நினைக்கிறோம்.

30. பகுதி 36.—இனாங்களின் ட்ரஸ்டிகளுடைய அதிகாரங்களும் அலுவல்களும் இன்னவையாகுமென்று காட்டுவது பொதுவாய் அவசியமாகும். இந்துதேசத்து ட்ரஸ்டுகளைக் குறித்த ஆக்ட் 15-வது பிரிவில் விவரித்திருக்கும் பொதுக் கொள்கையே (1) குறிப்பிட்ட உட்பகுதியில் அடங்கியிருக்கிறது.

31. பகுதி 37.—யாதொரு மடத்திலாவது கோயிலிலாவது யாதொரு தருமம் அல்லது கைங்கரியம் செய்வதற்காகவென்று குறிப்பிட்டு ஏற்படுத்தியிருக்கும் இனாங்களின் ட்ரஸ்டிகள் அந்த மடம் அல்லது கோயிலின் பொது ட்ரஸ்டியின் அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்ட அந்தஸ்துடையவராவாரென்பதை நாங்கள் ஸ்பஷ்டமாக்கியிருக்கிறோம்.

32. பகுதி 38.—பிரதம மசோதா ஆக்ட் 20-வது பகுதியைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பகுதியானது இந்தப் பகுதியின் (1) குறிப்பிட்ட உட்பகுதியாக விரிவாக்கி எழுதப்பட்டிருக்கிறது. உரிமை வழியாய் இன்னார் ட்ரஸ்டி ஸ்தானத்துக்கு வரவேண்டுமென்பது விஷயமாக விவாதம் ஏற்பட்டிருந்தாலும், அந்தப்படி உரிமை வழியாய் ட்ரஸ்டி ஏற்படுவது சிறிது காலம் நின்றுபோயிருந்தாலும், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இடைக்கால ட்ரஸ்டிகளை நியமிப்பதற்கு இந்த உட்பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. உரிமை வழியாய் ட்ரஸ்டி ஸ்தானத்துக்கு வருவதானது பாம்பரையை அனுசரித்தாகிலும் மாமூலை அனுசரித்தாகிலும் எந்தக் குடும்பம் அல்லது வேறே தொகுப்பைச் சேர்ந்ததாயிருக்கிறதோ அந்தக் குடும்பம் அல்லது தொகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கு ஷை இடைக்கால உத்தியோகங்களைப் பெற சிலாக்கியமான பாத்தியதை இருக்கிறதென்பதை (2) குறிப்பிட்ட உட்பகுதியில் எடுத்துக்காட்டியிருக்கிறது.

33. 39 முதல் 42 வரையிலுள்ள பகுதிகள்.—இவை தணிக்கை செய்வதற்குச் சம்பந்தப்பட்டவைகளாகும். ஏதோ யந்திர முறையாய்ச் செய்யும் வேலையைப்போல் செய்யாமல் தணிக்கை வேலையை ஆலோசனையுடன் செய்யவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படும்படியாக 41-வது பகுதியில் சொற்களை அமைத்திருக்கிறது.

5-ம் அத்தியாயம்.

கோயில்கள்.

34. இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகள் விலக்கப்பட்ட கோயில்களல்லாத இதர கோயில்களுக்கு மாத்திரம் பிரயோகப்படும்படி செய்திருக்கிறோம். அதாவது, 16-வது பகுதியின்படி ஏற்படுத்தப்பட்ட கம்மிட்டிகளின் வேலைக்கும் அந்தக் கம்மிட்டிகளுக்கு எந்த இனாங்களின்மேல் விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்த இனாங்களின் பரிபாலனத்துக்கும் இந்த அத்தியாயம் வாஸ்தவத்தில் சம்பந்தப்படுகிறது.

35. பகுதி 45.—பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகளை நியமிக்கும்போது சம்பந்தப்பட்ட கோயிலில் எந்த வகுப்பார் விசேஷமாய்ப் பற்றுடையவர்களாயிருக்கிறார்களோ அந்த வகுப்பாருக்குள்ள சுதந்தரங்களை மற்றவர்களுக்குள்ள சுதந்தரங்களைக் காட்டிலும் சிலாக்கியமானவையாக பாவிப்பது உசிதமாகுமென்று நாங்கள் இந்தப் பகுதியில் செவ்வையாய் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம்.

36. பகுதி 47.—இந்தப் பகுதிக்குப் பொருத்தமாயுள்ள பிரதம மசோதா ஆக்டின் 22-வது பகுதியின்படி, பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகளுக்கு மாத்திரமே தண்டனை விதிக்கும் அதிகாரம் கம்மிட்டிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. விலக்கப்பட்டிராத கோயில்களின் பரம்பரையாய் ஏற்பட்டிருக்கும் ட்ரஸ்டிகள் விஷயத்திலும் இந்த அதிகாரம் வியாபிக்கும்படி இப்போது ஏற்படுத்தியிருக்கும் பகுதியில், செய்யப்பட்டிருக்கிறது. பரிபாலனம் திறமையாய் நடத்தப்படுவதை உத்தேசிக்கையில் இந்தப்படி வியாபிக்கச் செய்வது அவசியமாயிருக்கிறது. தண்டனை விதிப்பதற்காகப் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின்மேல் அப்பீல் செய்து கொள்வதற்குப் போதுமானபடி நாங்கள் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறோம். பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டி போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டியோ போர்டாருக்காகிலும் கோர்ட்டாருக்காகிலும் அப்பீல் செய்துகொள்ளலாம். ஆனபோதிலும், பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டியைக் கம்மிட்டியார் நீக்கிவிட அல்லது தள்ளிவிடக்கூடுமாயினும், அந்த உத்தியோகத்துக்கு நபர்கள் உரிமை வழியாய் வரும் முறையைத் தடுக்க இந்த மசோதா ஆக்டின்படி அந்தக் கம்மிட்டியாருக்கு அதிகாரம் இல்லை. பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டி கம்மிட்டியாரால் நீக்கிவிடப்பட்டாலும் தள்ளிவிடப்பட்டாலும்,

38-வது பகுதியில் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கும் பட்சத்திலே, கம்மிட்டியார் இடைக்காலத்தில் ஒருவரை நியமிக்கக்கூடுமாயினும், உரிமை வழியில் ஷை ட்ரஸ்டிக்கு அடுத்தபடியிலுள்ளவர் அவருக்குப் பின் அந்த ஸ்தானத்தைப் பெற பாத்தியதையுள்ளவராவார்.

37. பகுதி 48.—பிரதம மசோதா ஆக்டின் 23-வது பகுதியை விரிவாக்கி இந்தப் பகுதியில் எழுதியிருக்கிறது. இந்தப் பிரிவின்படி யோக்கியதைக் குறைவுகள் விஷயமாய் ஏற்படும் சந்தேகத்துக்கிடமான அல்லது விவாதத்துக்கிடமான விஷயங்களைத் தீர்மானம் செய்யும் அதிகாரம் கம்மிட்டியாருக்கு பர்த்தியாக போர்டாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

38. பகுதி 49.—யாதொரு கோயிலில் திட்டத்தையாகிலும் ஸ்திரமாய் ஏற்படுத்தியிருக்கும் செலவு வீதத்தையாகிலும் மாற்றும் விஷயத்தில், ட்ரஸ்டிகளும் கம்மிட்டிகளும் மாத்திரமேயன்றி ஆராதனை செய்பவர்களும் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அப்பிரகாரமே, அவர்கள் கம்மிட்டியார் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன் ஆட்சேபனைகளையாவது அபிப்பிராயக் குறிப்புகளையாவது கம்மிட்டியாருக்கு அனுப்ப அவர்களுக்கு அவகாசம் கொடுப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறோம். கம்மிட்டியாருடைய உத்தரவின்மேல் கோர்ட்டாரிடத்தில் அப்பீல் செய்துகொள்ள ட்ரஸ்டியுடன்கூட அவர்களுக்கும் பாத்தியதை உண்டு.

39. பகுதி 50.—ட்ரஸ்டிகள் கம்மிட்டியாருக்கு வருஷவாரி பட்ஜெட்டுகள் அனுப்ப வேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனையானது - கோயில்களின் செலவு ஒழுங்கு பிசகாமலே செய்யப்பட்டுவருகிறதென்று பார்த்துக்கொள்வதற்கேற்ற ஒரு முக்கியமான நிபந்தனையாகும். யாதொரு ட்ரஸ்டியானவர் பட்ஜெட்டில் கண்டிருக்கிறபடி செலவு செய்யத் தொடங்குமுன் கம்மிட்டியாரின் அனுமதியைப் பெறுவது அனுவசியமென்று நாங்கள் அபிப்பிராயப்பட்டபோதிலும், பணம் அமிதமாய்ச் செலவு செய்யப்படுவதைத் தடுப்பதற்கும், சிக்கனமாய்ச் செலவு செய்யும்படி நிர்ப்பந்தப்படுவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி தவறாமல் செலவு செய்யப்படும்படி பார்த்துக்கொள்வதற்கும், கடன் வாங்கப்பட்ட தொகைகளைத் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்திவிடும்படி வற்புறுத்துவதற்கும் கம்மிட்டியாருக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். கம்மிட்டியார் செய்யும் உத்தரவுகளின்மேல் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ள ட்ரஸ்டிக்குக் கொடுத்திருக்கும் உரிமையானது - (3) குறிப்பிட்ட உட்பகுதியின்படி கம்மிட்டியாருக்குக் கொடுத்திருக்கும் அதிகாரங்களை அவர்கள் துர்விநியோகப்படுத்தாதிருக்கப் போதுமான பாதுகாப்பாகுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

40. பகுதி 51.—விலக்கப்பட்டிராத கோயில்களுக்குள்ளும், உரிமைகள் மிகவும் முக்கியமானவையாகவோ ட்ரஸ்டி கையாளும் பணம் மிகவும் அதிகமாகவோவுள்ள கோயில்கள் இருக்கின்றன. அவைகளின் விஷயத்தில், பரிபாலன சம்பந்தமாய் ஒரு பிரத்தியேகமான ஏற்பாடு செய்தால், இந்த ஆக்டின்படி கம்மிட்டியார் மேல்விசாரணை பண்ணுவதைவிட திறமையாய் மேல்விசாரணை செய்வது சாத்தியமாயிருக்கும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி நாங்கள் இந்தப் பகுதியில் நிபந்தனைகண்டிருக்கிறோம். ஷை ஏற்பாட்டை போர்டார் - கம்மிட்டியாருடனும் ட்ரஸ்டிகளுடனும் பிரஸ்தாப கோயில் விஷயத்தில் அக்கறையுள்ளவர்களாயுள்ள இதர நபர்களுடனும் கலந்து ஆலோசித்து நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். ஆயினும், ட்ரஸ்டியாவது அக்கறையுள்ள யாதொரு நபராவது போர்டாரால் நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாட்டைத் திருத்தவேண்டுமென்று கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாகும்.

41. பகுதிகள் 52, 53.—கோயில்களில் உத்தியோகம் செய்பவர்கள்மேலும், அங்குள்ள ஊழியக்காரர்கள்மேலும், முக்கியமாய்ப் பாரம்பரையான பாத்தியதைகள் பெற்றிருப்பவர்கள்மேலும் அந்தக் கோயில்களின் ட்ரஸ்டிகள் இன்ன அதிகாரங்கள் செலுத்தலாமென்பது விஷயமாய் இப்போதிருக்கும் சட்டம் ஸ்பஷ்டமாய் இராமலிருப்பதனால், இதுவரையில் வழக்குகள் விசேஷமாய் ஏற்படுவதற்கு இடம் உண்டாயிருந்தது. இந்தப் பகுதிகளில் அந்த அதிகாரங்கள் இன்னவையென்று தெளிவாய் எடுத்துச்சொல்ல முயற்சி செய்திருக்கிறது. பாரம்பரையாய் ஏற்பட்டவர்களாயிருந்தாலுஞ்சரி பாரம்பரையாய் ஏற்படாதவராயிருந்தாலுஞ்சரி, எல்லா வகுப்புகளையும் சேர்ந்த ஊழியக்காரர்களும் ஒழுங்காய் நடந்துகொள்ளும்படிச் செய்வதற்கு ட்ரஸ்டிக்குப் பூர்த்தியான அதிகாரம் கொடுத்திருக்கிறது. ஆனபோதிலும், அவர் பாரம்பரையாய் ஏற்பட்ட உத்தியோகங்களுக்கு அங்காமியாகவன்றி மற்றப்படி எவரையும் நியமிக்கக்கூடாது. அதுவும், 53-வது பகுதியைச் சேர்ந்த (2), (3) குறிப்பிட்ட உட்பகுதிகளில் கண்டிருக்கும் சந்தர்ப்பங்களிலும் திட்டங்களுக்குட்பட்டும் மாத்திரமே அவர் அந்தப்படி நியமிக்கலாம்.

42. பகுதி 54.—யாதொரு கோயிலில் கைங்கரியம் செய்வதற்காக ஏற்படுத்தியிருக்கும் இனமானது சில விஷயங்களில் சொத்தின்மேல் ஏற்பட்ட ஒரு பொறுப்பாக மாத்திரமே இருக்கிறது. அந்த சொத்து தானம் செய்தவருடைய குடும்பத்தாரின் சுவாதீனத்திலேயே இருந்துவருவதுமல்லாமல், அந்த சொத்திலிருந்து கிடைக்கும் வரும்படியில் செலவு

போக மிகுதி நிற்கும் தொகையை ஷெ குடும்பத்தார் சொந்த காரியங்களுக்காக உபயோகித்துகொள்ளக்கூடியவர்களாயும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விஷயத்தில் ஷெ கைங்கரியம் செய்வது தவறிப்போகும்பட்சத்திலே, ட்ரஸ்டியானவர் மேலே கண்டபடி பொறுப்பேற்படுத்தப்பெற்றிருக்கும் சொத்தை சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற நபரிடமிருந்து அந்த கைங்கரியததைச் செய்வதற்குப் பிடிக்கும் செலவை மாத்திரம் வசூல் செய்ய பிரயத்தனம் பண்ணவேண்டுமென்பதை நாங்கள் ஸ்பஷ்டமாக்கியிருக்கிறோம்.

6-ம் அத்தியாயம்.

மடங்களும் விலக்கப்பட்ட கோயில்களும்.

43. 57 முதல் 61 வரையிலுள்ள பகுதிகள்.—மடங்கள், விலக்கப்பட்ட கோயில்கள் ஆகிய இவைகளின் பட்ஜெட்டுகளையும் வருஷவாரி கணக்குகளையும் போர்டுக்கு அனுப்பவேண்டுமென்று 57-வது பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. சாதாரண காலங்களில் இந்த மசோதா ஆக்டின்படி ஷெ ஸ்தாபனங்களுக்கு ஏற்படும் பொறுப்புகள் - தோராயமாய்ச் சொல்லுமிடத்து, 34-வது, 35-வது பகுதிகளின்படி சொத்து ஜாபிதா ஒன்று அனுப்புவதோடும், அவைகளின் கணக்குகளை கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ஆடிட்டர்களைக் கொண்டு தணிக்கை செய்விப்பதோடும் முடிந்துபோகின்றன. மேலும், போர்டாராகிலும் வேறெவராகிலும் 58-வது பிரிவை அனுசரித்தன்றி மற்றப்படி பரிபாலன காரியங்களில் ஒழுங்கேற்படுத்த உத்தேசிக்கப்பட்டதாயுள்ள எந்த நடவடிக்கையையும் ட்ரஸ்டிகள் விஷயத்தில் நடத்தக்கூடாதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். யாதொரு ட்ரஸ்டி சரியாய் நிர்வாகஞ்செய்கிறதில்லையென்று விசாரணையில் ஸ்தாபிக்கப்பட்டாலும், இனாமின் நன்மையை உத்தேசித்து பிரத்தியேகமாய் பரிபாலன ஏற்பாடு ஒன்று செய்வது அவசியமென்று எண்பிக்கப்பட்டாலும், யாதொரு மடத்துக்காகவாவது விலக்கப்பட்ட கோயிலுக்காகவாவது அப்படிப்பட்ட ஏற்பாடு ஒன்று செய்வதற்கு இந்தப் பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. போர்டார் விசாரணைசெய்து, மடத்தின் சீடர்களுடனும் யாதொரு கோயிலின் விஷயத்தில் அதில் பற்றுள்ள நபர்களுடனும் கலந்து ஆலோசித்து ஷெ ஏற்பாட்டைத் தயார் செய்யவேண்டும். யாதொரு மடத்தின் விஷயத்தில் மேல்விசாரணைசெய்யும் அல்லது ஆலோசனை சொல்லும் அதிகார சபை இருப்பது அவசியமென்று தோற்றினால், அந்த சபையின் மெம்பர்கள் ஷெ மடத்தைச் சேர்ந்த சீடர்களாகவே யிருக்கவேண்டுமென்று 58-வது பகுதியைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பகுதியில் நிர்ப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறது. போர்டாரால் தயார் செய்யப்பட்ட யாதொரு ஏற்பாடு செலாவணியாகத் தொடங்குவதற்குமுன், அதைக் கோர்ட்டார் டிக்ரிமூலமாய் ஜாரிசெய்யவேண்டும். அந்தப்படி டிக்ரி பிறப்பிப்பதற்குமுன், பற்றுள்ள நபர்கள் தங்களுடைய ஆட்சேபனைகளையும் அபிப்பிராயங்களையும் தெரிவிக்க அவர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டும். விவரமாய் விசாரணை செய்த பிறகும் 58-வது பகுதியில் விவரித்திருக்கும் சந்தப்பங்களிலுமன்றி மற்றப்படி, மடங்களுக்காகப் புதிய ஏற்பாடு எதுவும் செய்யக்கூடாதென்று நாங்கள் ஒரேமனதாய் அபிப்பிராயப்பட்டபோதிலும், சைவசித்தாந்த மடங்களை உடனே கண்டிப்பான மேல்விசாரணையின்கீழ் கொண்டுவரவேண்டுமென்றும், அந்த மடங்களை இப்போதைக்காட்டிலும் நன்றாய்ப் பரிபாலனம் செய்வதற்காக ஒரு ஏற்பாட்டை விரிவாய்த் தயார்செய்து அதை இந்த மசோதா ஆக்டைச் சேர்ந்த ஒரு ஷெட்யூலில் சேர்க்கவேண்டுமென்றும் கம்மிட்டி மெம்பர்களில் சிலர் பலமாய் வற்புறுத்திச் சொன்னார்கள். ஆயினும், அந்தப்படி சில மடங்களைமாத்திரம் ஷெட்யூலில் சேர்ப்பதனால் துவேஷமுண்டாவதற்கு இடமேற்படுமென்றும், இந்த மசோதா ஆக்டில் அடங்கியுள்ள கொள்கைகளை மீறி நடப்பதாகச் சொல்வது நியாயமென்று ஏற்படும்படியான அளவுக்குப் போதுமான ஆதாரங்கள் எங்களுக்குக் கிடைக்கவில்லையென்றும், இந்த மடங்களின் பரிபாலன விஷயமாய் மேல்விசாரணை செய்யப்படவேண்டுமென்று விரும்பும் அவைகளின் சீடர்கள் இந்த மசோதா ஆக்ட் சட்டமானதக்ஷணமே யாதொரு எறபாடு செய்யப்படவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்வதுதான் கிரமமான வழியாகுமென்றும் எங்களில் பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்பட்டது. சைவசித்தாந்த மடங்களுக்காக ஒரு ஏற்பாட்டை ஷெட்யூலில் சேர்ப்பதற்கான பிரேரேபணை அப்பிரகாரமே தள்ளிவிடப்பட்டது.

7-ம் அத்தியாயம்.

இனாங்களின் நிதிகளை உபயோகிப்பது.

44. பகுதி 62.—பிரதம மசோதா ஆக்டின் 32-வது பகுதியிலே, டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபாலிடிகளாக்டிலும் லோகல் போர்டுகளாக்டிலும் அதற்குப் பொருத்தமாயிருந்த நிபந்தனைகளை முக்கியாம்சத்தில் மறுபடியும் எடுத்துச்சொல்லியிருந்தது. இந்தப்படி மறுபடியும் எடுத்துச்சொல்வது அனாவசியமென்றும், யாத்திரைக்காரர்கள், ஆராதனை செய்பவர்கள் ஆகிய இவர்களின் சௌகரியத்துக்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளுக்குப் பணம் செலவழிப்பது யுக்தமென்று ட்ரஸ்டிக்குத் தோற்றி அவர் அந்தப்படியே செலவு செய்கிற பட்சத்திலே, அவ்விதம் செலவு செய்வதற்கு அதிகாரம் கொடுப்பது போதுமானதென்

றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ட்ரஸ்ட் நிதியை யாதொரு ட்ரஸ்டியானவர் அப்படிப்பட்ட காரியங்களுக்காக அக்கிரமமாகவாவது அமிதமாகவாவது செலவு செய்யாதபடி பாதுகாப்பு ஏற்படுத்துவதே விலக்கு நிபந்தனையின் உத்தேசமாகும்.

45. பகுதி 63.—பிரதம மசோதா ஆக்டில் இதற்குப் பொருத்தமாயுள்ள பகுதி (33-வது பகுதி) மிகவும் பலமாய்க் கண்டிக்கப்பட்டது. இது சம்பந்தமாய் பொது ஜனங்கள் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெளிவாகவே வெளியிட்டிருக்கிறார்களென்று நாங்கள் எண்ணுகிறோம்.

'ஸிப்ரே டாக்ட்ரின்' என்னும் கோட்பாட்டைப் பிரயோகிப்பது விஷயமாய்ப் பிரதம மசோதா ஆக்டில் சொல்லியிருந்ததை நாங்கள் விசேஷமாய்ச் சுருக்கியிருக்கிறோம். இப்போது திருத்தியெழுதப்பட்டிருக்கும் பகுதியின்படி, இனிமேல் நிதியை, ஷை கோட்பாட்டை அனுசரித்து உபயோகிக்கவேண்டுமென்று ட்ரஸ்டி அல்லது போர்டார் மாத்திரமே விண்ணப்பம் செய்துகொள்ளலாம். எந்தக் கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அந்தக் கோர்ட்டார் - மிகுதியாய்ப் பணம் இருக்கிறதா என்பதை முதலில் நிச்சயிக்கவேண்டும்; பிறகு, அவர்கள் - அந்த மிகுதிப்பணத்தில் எவ்வளவையாவது சம்பந்தப்பட்ட மதசம்பந்தமான ஸ்தாபனத்தின் சேம நிதியாக வைத்துவைக்கவேண்டுமோ என்பதை நிச்சயிக்கவேண்டும். ஆதியில் உத்தேசிக்கப்பட்ட காரியங்களுக்காகவும் பிரஸ்தாப ஸ்தாபனத்தின் சேம நிதிக்காகவும் போதுமானவரையில் ஏற்பாடு செய்த பிறகு, இதர காரியங்களுக்காக உபயோகிக்கப் பணம் இருக்கிறதென்று அவர்களுக்கு முடிவாய் ஏற்படும் பட்சத்தில், அந்தப்படி உபயோகிக்க அவர்கள் அனுமதி கொடுக்கலாம். ஆனால், ''மடம் அல்லது கோயிலின் நோக்கங்களுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத மதசம்பந்தமான வித்தியாசம்பந்தமான அல்லது வேறே தருமசம்பந்தமான காரியங்கள்'' என்னும் சொற்றொடரின் தாற்பரியத்துக்குள் அடங்கும் காரியங்களுக்காக மாத்திரமே உபயோகிக்க அந்தப்படி அனுமதி கொடுக்கலாம்.

8-ம் அத்தியாயம்.

திரவிய விஷயம்.

46. பகுதி 65.—திரவிய சம்பந்தமான விஷயங்கள் சம்பந்தப்பட்டமட்டில் போர்டும் கம்மிட்டிகளும் பிரத்யேகமான சபைகளாகும். போர்டார் - மடங்களும் விலக்கப்பட்ட கோயில்களும் உட்பட சகல ஸ்தாபனங்களின் வரும்படியின்மேலும் நூற்றுக்கு ஒன்றரை வீதத்துக்கு மேற்படாமல் சகாயத் தொகை விதித்து வாங்கலாம். விலக்கப்பட்டிராத கோயில்களின் வரும்படியின்மேல் கம்மிட்டிகளும் தங்களுடைய சொந்த காரியங்களுக்காக அதே வீதப்படி சகாயத் தொகை விதித்து வாங்க அர்ஹராவார்கள். ஆகவே, விலக்கப்பட்டிராத கோயில்கள் மொத்தத்தில் செலுத்தவேண்டிய தொகை நூற்றுக்கு மூன்று வீதமாகும். இதுவே பிரதம மசோதா ஆக்டிலும் ஏற்படுத்தப்பட்ட உச்ச வீதமாகும். பிரதம மசோதா ஆக்டின்படி, நூற்றுக்கு மூன்று வீதம் சகாயத் தொகை செலுத்துவதுடன் ஸெர்டிபிகேட் பெற்றிருக்கும் ஆடிட்டருக்குக் கொடுக்கவேண்டிய தொகையையும் ஒவ்வொரு கோயிலிலிருந்தும் செலுத்தவேண்டியிருந்தது. தணிக்கை செய்வதற்காகப் பிடிக்கும் செலவை நூற்றுக்கு இவ்வளவென்னும் வீதப்படி போர்டுகளும் கம்மிட்டிகளும் பெறும் சகாயத் தொகையிலிருந்து கவர்ன்மெண்டார் வசூலிக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். கோர்ட்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படும் ஏற்பாடுகளின்படி நிர்வாகம் செய்யப்பட்டுவரும் ஸ்தாபனங்களும் இந்த சகாயத் தொகைகள் செலுத்துவதற்கு உட்பட்டவையாகும்.

9-ம் அத்தியாயம்.

பலவகைப்பட்டவை.

47. பகுதிகள் 69, 70.—இந்த மசோதா ஆக்டில் நாங்கள் செய்திருக்கும் மாறுதல்களை அனுசரித்து வியாஜ்ஜியங்களுக்குச் சம்பந்தப்பட்ட பகுதியைத் திருத்தியெழுதியிருக்கிறோம். செலவுகளுக்குச் சம்பந்தப்பட்ட (70-வது) பகுதி - மதசம்பந்தமான ட்ரஸ்டுகளையும் தரும சம்பந்தமான ட்ரஸ்டுகளையும் குறித்த 1920-ம்௵த்து ஆக்ட் 8-வது பிரிவைப் பின்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

48. பகுதி 71.—ஸிவில் ப்ரோஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 92-வது பிரிவின்படி கோர்ட்டுகளால் ஏற்கனவே நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட ஸ்தாபனங்களுக்கு இந்த ஆக்டைப் பிரயோகப்படுத்தும் விஷயத்தைக் குறித்து நாங்கள் கவலையுடன் ஆலோசித்தோம். மதசம்பந்தமான இனங்களின் பரிபாலனத்துக்குப் பிரயோகப்படக்கூடிய ஒரு விரிவான சட்டத்தை ஏற்படுத்தவே இந்த மசோதா ஆக்டில் பிரயத்தனம் செய்திருக்கிறது. மேலும், ஏற்பாடுகள் செய்யவும் அவைகளில் மாறுதல்கள் செய்யவும் இந்த மசோதா ஆக்டிலேயே நிபந்தனை கண்டிருக்கிறது. ஏற்கனவே பல ஸ்தாபனங்கள் சம்பந்தமாய் கோர்ட்டுகளால் ஏற்பாடுகள் தயார் செய்யப்பட்டிருந்தும், அந்த ஸ்தாபனங்களின் நிர்வாகமாவது மேல் விசாரணையாவது திறமையாய் நடைபெறாமற்போய்விட்டது. ஆகவே, கோர்ட்டுகளால் ஏற்படுத்தப்பட்ட எந்த ஏற்பாடுகளை அனுசரித்து வேலைசெய்வது சாத்தியமாயில்லையோ அல்லது எந்த ஏற்பாடுகள் திருப்தியற்றவைகளென்று தெரியவந்திருக்கிறதோ அந்த ஏற்பாடுகளை ரத்து செய்யவாகிலும் திருத்தவாகிலும் அதிகாரம் ஏற்படுத்துவது அவசியமென்று நாங்

கள் அபிப்பிராயப்படுகிறோம். அப்படிப்பட்ட ஏற்பாடுகள் புதிய சட்டத்தின்படி செய்யப்பட்ட ஏற்பாடுகளாயிருப்பதாக இந்தப் பகுதியில் நிர்ணயிக்கபபடுவதுமல்லாமல், அதில் சொல்லப்பட்டிருக்கும் நடவடிக்கை முறைப்படி அவைகளைத் திருத்தவோ அல்லது ரத்து செய்யவோ அதில் நிபந்தனை கண்டும் இருக்கிறது.

49. பகுதி 72.—ட்ரஸ்ட் சொத்தாயிருக்கும் அசையாப் பொருளை முக்கியாம்சத்தில் பராதீனப்படுத்தும் ஒவ்வொரு விஷயத்திலும் ட்ரஸ்டியானவர் போர்டாரின் அல்லது கம்மிட்டியாரின் அனுமதியைப் பெறவேண்டுமென்றும், இது விஷயமாய் யாதொரு போர்ட்டாரால் அல்லது கம்மிட்டியாரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின்மேல் கோர்ட்டாரிடத்தில் அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

50. பகுதி 73.—1863-ம் வருஷத்து 20-வது ஆக்ட் 21-வது பிரிவில் கண்டிருக்கும் சொல்லமைப்பு இந்தப் பகுதியில் தக்கபடி பொருத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும், கலப்பாயுள்ள இனாமில் மதத்துக்கு சம்பந்தப்பட்ட பாகத்தை தருமத்துக்கு சம்பந்தப்பட்ட பாகத்தினின்றும் பிரிப்பதற்கு இந்தப் பகுதி அவசியமாகும்.

51. பகுதி 74.—கொள்கையைப் பொருத்தமட்டில், இந்தப்பகுதி பிரதம மசோதா ஆக்டின் 24-வது பகுதியைச் சேர்ந்த (2) அடையாளமிட்ட உட்பகுதியைப் போன்றதேயாகும். ஆனால், அந்த உட்பகுதியின் சொல்லமைப்பைக்காட்டிலும் இந்தப் பகுதியின் சொல்லமைப்பு மிகவும் விரிவாயிருக்கிறது.

52. பகுதி 77.—இந்த மசோதா ஆக்டின்படிக்கான சில விண்ணப்பங்களுக்கும் இதர தஸ்தவேஜுகளுக்கும் கோர்ட் கட்டண விதங்களின்படி பிரத்தியேகமாய் இருக்கவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம்

53. பிரதம மசோதா ஆக்ட் எழுதப்பட்டிருக்த முறையைக் காட்டிலும் அதிக விரிவாயும் அதில் அனுசரிக்கப்பட்ட ஏற்பாட்டினின்றும் ஒருவாறு வித்தியாசமாயுமுள்ள ரூபத்தில் இந்த மசோதா ஆக்டைத் திருத்தி யெழுதியிருப்பதால், அதன் சொல்லமைப்பிலும் சாராம்சத்திலும் அனேக மாறுதல்களைச் செய்வதும் அனேக அம்சங்களைப் புதிதாய்ச் சேர்ப்பதும் அவசியமாயிற்று. ஆனால், 1863-ம் வருஷத்து 20-வது ஆக்டைப் புனர் நிர்மாணம் செய்வதற்காக இந்த ராஜதானியில் தொடர்ச்சியாய் முயற்சி செயயப்பட்டு வந்த சென்ற ஐம்பது வருஷ காலத்திலே அனேக தடவைகளில் இப்போது நாங்கள் செய்திருக்கும் திருத்தங்களைப்பற்றி, ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஆகவே, அவைகளில் சில திருத்தங்கள்தான் பொது ஜனங்களுக்கு முற்றிலும் தெரிந்திராத திருத்தங்களாகும். ஆனபோதிலும், நாங்கள் செய்திருக்கும் மாறுதல்கள் விஸ்தாரமாயிருப்பதை உத்தேசித்து, இப்போது திருத்தப்பட்டபடியுள்ள இந்த மசோதா ஆக்டை போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ கெஜெட்டில் மறுபடியும் பிரசித்தம செய்யவேண்டுமென்று நாங்கள் சிபாரிசுசெய்கிறோம்.

பி. ராமராயநிங்கர்.
வி. பி. ராமஸ்வாமி ஐயர்.
என். கோபாலஸ்வாமி.
டி. தேசிகாச்சாரி.
பி. முனிசாமி நாயுடு.
ஏ. ராமஸ்வாமி முதலியார்.
இ. பெரியநாயகம்.
எம். கிருஷ்ணன் நாயர்.
ஓ. தணிகாசல செட்டியார்.
டி. இராஜராஜேஸ்வரன்.
வி. வி. எஸ். நரசிம்ம ராஜு.
வி. பொன்னுசாமி நாயுடு.
எஸ். முத்துமாணிக்க ஆசாரியார்.
எம. வி. மதுரை பிள்ளை.
கே. கோபாலகிருஷ்ணைய.
வி. ஆர். ரெட்டி.
பி. வி. என். எதிராஜலு நாயுடு.
எஸ். ஆர். ஒய். அங்கிணேடு பிரஸாத்.
வி. நடேசன்.
* எம். வி. முத்தைய செட்டியார்.
* டி. என். சிவஞானம் பிள்ளை.
* எம். ராமசந்திர ராவ்.
* டி. சோமசுந்தர முதலியார்.
* வி. அருணசல முதலியார்.
* எல். ஏ. கோவிந்தராகவ ஐயர்.
* டி. ஏ. ராமலிங்கம்.

* அபிப்பிராய பேதக்குறிப்புக்குட்பட்டு.

அபிப்பிராயபேதக் குறிப்புகள்.

(1)

அடியிற்கண்டபடி (h) அடையாளமிட்ட மற்றொரு உட்பகுதி சேர்க்கவேண்டுமென்பது மாத்திரமே என்னுடைய அபிப்பிராயமாகும்:—

1-வது ஷெட்யூலின் 1-ம் பாகத்திற்கண்ட (g) அடையாளமிட்ட உட்பகுதிக்குப் பிறகு: “(h) ஐம்பது ரூபாய் வருஷவாரி மதிப்புள்ளதாய் தாம் சொந்தமாகவாவது தம்முடைய குடும்பத்தைச்சேர்ந்த முன்னோர்களாவது ஏற்படுத்தியிருக்கும் யாதொரு கைங்கரியம் அல்லது கட்டளைக்கான இனாமின் ட்ரஸ்டியாயிருந்தாலும்”

இங்க்லிஷில் ‘மடங்கள்’ என்னும் வார்த்தையில் எழுத்துக்கள் ஒழுங்காய் அமைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வார்த்தையின் சப்தானுசாரமாய் எழுத்துக்களை அமைத்து ‘மடம்’ என்று வாசிக்கும்படி அச்சிட்டு அதை அங்கீகரிக்கவேண்டுமென்று நான் கோருகிறேன்.

எம். ஸி. டி. முத்தைய செட்டி.

(2)

17-வது பாரா.—போர்டின் ப்ரெஸிடெண்டுக்காவது மெம்பர்களுக்காவது சம்பளம் கொடுக்கவேண்டுமென்று பிரேரேபித்திருக்கும் முறைக்கு நான் முற்றிலும் ஆட்சேபிக்கிறேன்.

அவசியமான யோக்கியதாம்சங்கள் பெற்று இலவசமாய்த் தங்கள் நாட்டுக்கு ஊழியம் செய்ய விருப்பமுள்ள நபர்கள அனேகர் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நபர்கள் சட்ட நிரூபண சபையில் இருப்பதே இதற்கு அத்தாட்சியாகும். போர்டின் மெம்பர்களும் ப்ரெஸிடெண்டும் சுற்றுப பிரயாணம் போகும்போது அவர்களுக்குப் பிரயாண வர்த்தனை கொடுத்தால் அதுவே போதுமானது.

45-வது பாரா.—திருநெல்வேலி சிவதேவஸ்தானம் கமிட்டியார் தங்களுடைய மேல்விசாரணையிலிருக்கும் கோயிலினிடமிருந்து இப்போது நூற்றுக்கு $2\frac{1}{2}$ வீதம் சகாயத்தொகை விதித்து வாங்குகிறார்கள். அந்தப்படி வசூலிக்கப்படும் தொர்கையானது - கோயில்களைத் திறமையாய் மேற்பார்வையிடும் காரியத்துக்குப் போதுமானதாகவேயில்லை. ஆகவே, சகாயத்தொகை சம்பந்தமாய் இப்போது ஏற்பட்டிருக்கும் வீதத்தை எவ்வளவாகிலும் குறைப்பதற்கு நான் ஆட்சேபனை செய்கிறேன்.

1923-ம்௵ பெப்ரவரி௴ 22௳. டி. என். சிவஞானம்.

(3)

ஸெலெக்ட் கமிட்டியாரால் திருத்தப்பட்டபடிக்குள்ள மசோதா ஆக்டில் சேர்த்திருக்கும் சில நிபந்தனைகளைப்பற்றி என் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்குட்பட்டு நான் ஷை கம்மிட்டியாரின் ரிபோர்ட்டில் கையெழுத்து போட்டிருக்கிறேன். ரிபோர்ட்டின் 53-வது பாராவில் சொல்லியிருக்கிறபடி இந்த மசோதா ஆக்டை முக்கியாம்சத்தில் மிகவும் அதிகமாய் மாற்றியிருக்கிறபடியாலும் அதைத் திருத்தி எழுதுவதிலும் அதில் கண்டிருக்கும் விஷயத்திலும் புதிய அம்சங்கள் விசேஷமாய்ச் சேர்த்திருக்கிறபடியாலும், அது முற்றிலும் புதிய மசோதாவென்றே நான் அபிப்பிராயப்படுகிறேன். ராபின்ஸன் கம்மிட்டியாராலும், அதற்குப் பிறகு சபை கூடிய இதர கம்மிட்டியார்களாலும் செய்யப்பட்ட பிரேரபனைகள் சம்பந்தமாய் இந்த மசோதா ஆக்டில் இப்போது சேர்த்திருக்கும் நிபந்தனைகளில் சிலவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்யப்பட்டதென்பது உண்மையே. ஆனால், ஷை பிரேரபனைகள் இதுவரையில் பிரசுரிக்கப்படவில்லையென்றும், அதிலும் அவைகளைப் பற்றி பஹிரங்கமாய் ஆராய்ச்சி செய்யப்படவில்லையென்றும் நான் நம்புகிறேன். மசோதா ஆக்டிலுள்ள இந்த நிபந்தனைகளைக்குறித்து கம்மிட்டியார் தகுதியான ஜாக்கிரதையுடனும் முன்யோசனையுடனும் ஆலோசிக்கவில்லையென நான் நினைக்கிறேன். இந்த மசோதா ஆக்ட் ஸெலெக்ட் கம்மிட்டியாரால் ஆலோசிக்கப்பட்டபொழுது அதில் செய்யப்பட்ட மாறுதல்கள் எவ்வளவு விரிவானவையென்று விவரித்துச் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால், முக்கியமான எந்த மாறுதல்கள் விஷயத்தில் என் சகாக்களுடைய அபிப்பிராயத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லையோ அவைகளில் சிலவற்றைக்குறித்துமாத்திரம் எடுத்துச்சொல்வதோடு திருப்தியடைவேன்.

2. பிரதமத்தில் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டின்படி, யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்காகவாகிலும் யாதொரு மத சம்பந்தமான இனாம் அல்லது எவையேனும் வகைகளைச்சேர்ந்த இனாங்களுக்காகவாகிலும் கம்மிட்டிகளை அமைக்கும்படி கட்டளையிட பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் ஏற்படுத்தியிருந்தது. மேலும், அந்தப்படி அமைக்கப்பட்ட கம்மிட்டிகள் அவைகளின் விசாரணை அதிகாரத்துக்குட்பட்ட மத சம்பந்தமான இனாங்களை மேல்விசாரணை செய்யவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருந்தது. மத

சம்பந்தமான இனாங்களைப் பார்வையிடவும், செலவின் பரிமாண வீதங்களை அங்கீகரிக்கவும், ட்ரஸ்டிகள் உரிமைவழியாய் வருவது விஷயமாய் விவாதம் ஏற்படும் விஷயங்களில் அவர்களுடைய பாத்தியதைகள் நீதி விசாரணைக் கோர்ட்டில் ஸ்தாபிக்கப்படுகிற வரையிலே ட்ரஸ்டிகளை நியமிக்கவும், கணக்குகளை ஹாஜர்ப்படுத்தும்படி செய்யவும், இவைகளைப்போன்ற இதர காரியங்களைச் செய்யவும் ஷை கம்மிட்டிகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று உத்தேசித்திருந்தது. பிரதமத்தில் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டின்படிக்கான கம்மிட்டிகள் வாஸ்தவத்திலே மேற்பார்வை சம்பந்தமாகவும் மேல் விசாரணை சமபந்தமாகவும் குறிப்பிட்ட சில அலுவல்களைச் செய்யவேண்டியிருந்தது. இங்கிலாந்திலுள்ள சாரிடி கம்மிஷனர்கள் என்னும் சபையை மாதிரியாகக் கொண்டு மத்திய போர்ட் ஒன்றை ஏற்படுத்துவதனால், மேற்பார்வை சம்பந்தமான ஷை அதிகார சபையானது மிகவும் பெரிதாக்கப்பட்டிருக்கிறது. இந்த போர்டாருக்கு சகல மத சம்பந்தமான இனாங்களையும் மேற்பார்வையிடும் உரிமையும் அவைகள் சரியாய்ப் பரிபாலம் செய்யப்பட்டு வரும்படி பார்த்துக்கொள்வதற்காக பொதுவாய் மேல்விசாரணை செய்யும் உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கம்மிஷனர்களின் போர்ட் ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று நிபந்தனை கண்டிருப்பதானது முக்கியாம்சமான மாறுதல் ஆவது மாத்திரமேயல்லாமல், அதனால் இந்த மசோதா ஆக்டின் நோக்கம் முழுவதும் மாறியிருக்கிறது. பிரதம மசோதா ஆக்டின் நோக்கம் என்னவென்றால், ட்ரஸ்டிகளின் கடமைகள் இன்னவையென்று நிர்ணயிப்பதும் அவர்களின் காரியங்கள் விஷயமாய் கம்மிட்டிகள் மூலமாக குறிப்பிட்ட அளவுக்கு மேல்விசாரணை அதிகாரம் செலுத்துவதற்காக ஏற்பாடு செய்வதுமாகும். இப்பொழுது திருத்தி யெழுதப்பட்டுள்ள மசோதா ஆக்டின்படி, முற்றிலும் புதிதாய் ஒரு சபை ஏற்படுத்தி, அதற்கு சகல மத சம்பந்தமான இனாங்களையும் 'பொதுவாய் மேற்பார்வையிடுவதற்கு'ம், 'மடங்களும் கோயில்களும் தவறாமல் சரியாய்ப் பாராமரிக்கப்படுகின்றனவென்றும் மதசம்பந்தமான சகல இனாங்களும் கிரமமாய்ப் பரிபாலிக்கப்பட்டு அவை எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டனவோ அல்லது இருக்கின்றனவோ அந்தக் காரியங்களுக்கே அவை தவறாமல் கிரமமாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றனவென்றும் பார்த்துக்கொள்வதற்கு நியாயமாகவும் அவசியமாகவும் இருக்கிற சகல காரியங்களையும் செய்ய'வும் அதிகாரம் கொடுத்திருக்கிறது. என் சகாக்களால் பிரேரேபிக்கப்பட்டபடிக்குள்ள மத்திய அதிகார சபை ஒன்றை ஏற்படுத்துவது எனக்கு முற்றிலும் சம்மதமில்லை. பிரதமத்தில் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டினால் இந்த இராஜதானி முழுவதிலும் அச்சம் ஏற்பட்டு, அதிற்கண்ட நிபந்தனைகளை அனேகர் கண்டித்திருக்கிறார்கள். இப்பொழுது திருத்தப்பட்டபடிக்குள்ள மசோதா ஆக்டிற்கண்ட நிபந்தனைகளினாலும் மேலே கண்ட விரோதபாவமே அதிகப்படும். இப்படிப்பட்ட சட்டம் பலிதமாவது - அதில் கண்டிருக்கும் நிபந்தனைகள் அவசியமானவையென்றும் விரும்பக்கூடியவையென்றும் ஜனங்கள் யாவரும் எவ்வளவுவரையில் அங்கீகரிக்கிறார்களோ அதையே பெரிதும் பொருத்ததாகும். மத சம்பந்தமான இனாங்களை மேல் விசாரணை செய்யும் விஷயத்தில், செய்யப்படும் காரியங்கள் எம்மட்டில் அங்கீகரிக்கப்படுகின்றனவென்று தெரிந்துகொண்டு, முதலில் ஜாக்கிரதையாய் ஆரம்பித்து, பிறகு ஏற்படும் அனுபவத்தை அனுசரித்து மேல்விசாரணை செய்வதற்கான அதிகாரசபைகளை படிப்படியாய் விருத்திசெய்யவே சட்டநிரூபணம் செய்கையில் அனுசரிக்கக்கூடிய நல்ல உபாயமாகும். ஆகவே, அதிவிரிவான சட்டம ஒன்று ஏற்படுத்தி, இந்த ஸ்தாபனங்களை மேல் விசாரணைக்கு உட்படுத்துவதற்காக ஆரம்பத்திலேயே கடினமான பரிகாரங்கள் தேடுவது அவசியமுமல்ல, விரும்பக்கூடியதுமல்ல. இதை உத்தேசித்து, இனாங்களைக்குறித்து சரியான ரெஜிஸ்டர் ஏற்படும்படிச் செய்வதும் கணக்குகளைச் சரியாய்வைத்து அவை பிரத்தியேகமாய்த் தணிக்கை செய்யப்படும்படி பார்ப்பதும் அந்தந்த இடத்திலுள்ள அதிகாரிகள் மதசம்பந்தமான இனாங்களை இதுவரையில் மேலவிசாரணை செய்துவந்ததைக்காட்டிலும் திறமையாய் மேல்விசாரணை புரியும்படிச் செய்வதும் இந்த மசோதா ஆக்டின் எந்த பாகங்களின் நோக்கமயிருக்கிறதோ அந்த பாகங்களைப் பொதுபட நான் ஒத்துக்கொள்ளுகிறேன். இந்த மசோதா ஆக்டின் 6-வது பகுதியில் பிரேரேபிக்கப்பட்டபடிக்குள்ள மத்திய அதிகாரசபை ஒன்றை இன்ன அவசரம்பற்றி இப்போது ஏற்படுத்தவேண்டுமென்று ஸ்தாபிக்கப்படவில்லை. மேலும், அப்படிப்பட்ட போர்டுக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கும் விஸ்தாரமான விசாரணை அதிகாரமும் இதர அதிகாரங்களும் அது பெற்றிருக்கும் பட்சத்தில், இந்த நிலைமையிலே அதனால் அதிக தீங்கு விளையக்கூடுமேயன்றி அவ்வளவு நன்மை உண்டாகாது. கம்மிஷனர்களின் போர்டைப்போன்ற சகல மத்திய அதிகார சபைகளிடத்திலுமிருக்கும் தவிர்க்கமுடியாத குணம் என்னவென்றால், அந்தந்தப் பிரதேசத்திலுள்ள அதிகாரிகள் மேல்விசாரணை செய்யமுடியாதபடி அசௌகரியம் விளைப்பது மாத்திரமேயல்லாமல் அதைத் தடுத்து தங்களுடைய சொந்த மேல்விசாரணையை அதிகப்படுத்திக் கொள்வதேயாகும். மேலும், இப்படிப்பட்ட ஒரு விஷயத்தில் அந்தந்த இடத்திலுள்ள அதிகாரிகள் திறமையாய் மேல்விசாரணை செய்வதை விருத்தி செய்வது மிகவும் முக்கியமேயல்லாமல் கம்மிஷனர்களின் சபை ஒன்று சென்னபட்டணத்திலிருந்து மேல்விசாரணை செய்துவருவது முக்கியமல்ல. கம்மிஷனர்களின் போர்டானது சென்னபட்டணத்திலிருந்து தனது அலுவலைச் செய்துவரக்கூடாதென்பதற்கு இதைப்போலவே மற்றொரு முக்கியமான காரணம் என்னவென்றால் அந்தப்படி செயவதனால் பணச் செலவும் மிகவும் அதிகமாய் ஏற்படும். ப்ரெஸிடென்டுக்கும் நான்கு கம்மிஷனர்களுக்கும் இவர்களுடைய ஆபிஸ் சிப்பந்திகளுக்கும் ஒரு வருஷத்தில் குறைந்தது ஒரு லக்ஷம் ரூபாயாவது

பிடிக்கக்கூடும். மேலும், போர்டார் தங்களுடைய கடமைகளைத் திறமையாகச் செய்ய வேண்டுமானால், தங்களிடத்தில் சங்கிரமிக்கச் செய்திருக்கும் பொதுவாய் மேற்பார்வையிடும் அதிகாரத்தைச் செலுத்த இந்த இராஜதானி முழுவதும் போவதற்காக அவர்களுக்கு இன்ஸ்பெக்டர்கள் வேண்டும். வாஸ்தவமாகவே, இந்த பிரேரபணையை உற்சாகத்துடன் எடுத்துச் சொல்லியவர்களில் ஒருவர் - கம்மிட்டிக்குமுன் சாட்சியம் கொடுக்கும்போது, மசோதா ஆக்டில் பிரேரேபிக்கப்பட்டபடிக்குள்ள மத்திய போர்ட் ஒன்றுக்கு வருஷத்தில் இரண்டு முதல் மூன்று லக்ஷம் ரூபாய் வரையில் பிடிக்குமென்று ஒத்துக்கொள்ளவேண்டியதாய் ஏற்பட்டது. இந்தத் தொகையை மடங்களிலிருந்தும் கோயில்களிலிருந்தும் சேகரிக்கவேண்டும்.

3. மத்திய போர்ட் ஒன்றை ஏற்படுத்துவது நியாயமாகுமென்பதற்குள்ள காரணங்களை ரிபோர்ட்டின் 8-வது பாராவில் என் சகாக்கள் சொல்லியிருக்கிறார்கள் ; அந்தக் காரணங்கள் எவை யென்றால், 1863-ம் ௵த்து 20-வது ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட கம்மிட்டிகள் மேற்பார்வையின்றி வேலையைத் தமதிஷ்டம்போல் செய்துவந்திருக்கின்றனவென்பதும், அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறையும் மேல்விசாரணையும் சம அதிகாரமும் ஏற்பட்டிராததனால் அவைகளுடைய வேலை சரிவர செய்யப்படவில்லையென்பதும், இந்தக் குறையை நிவர்த்திசெய்வதே உத்தேசிக்கப்பட்ட போர்டின் நோக்கமாகுமென்பதுமே. இதை நான் கொஞ்சங்கூட ஒப்புக்கொள்ளவில்லை. பிரஸ்தாப மசோதா ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி ஜில்லாவிலுள்ள கோர்ட்டாரே நடவடிக்கைமுறையை நிச்சயிப்பதும் மேல்விசாரணை செய்வதும் சம அதிகாரம் உண்டாகும்படி செய்வதும் அவசியமென்றும், ஷை கோர்ட்டார் பிரவர்த்திப்பதனால் வேலை வெகுசாய்த் திறமையாக நடந்தேறுவது மாத்திரமல்லாமல் செலவும் மிகவும் குறைவாய்ப் பிடிக்குமென்றும், விவகாரம் நீதி விசாரணை ரீதியை அனுசரித்திருக்குமென்றும் நான் அபிப்பிராயப் படுகிறேன். சென்னபட்டணத்தில் ஒரு மத்திய அதிகாரசபை இருப்பதற்கு பர்த்தியாக, இந்த ஜில்லா கம்மிட்டிகள் ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள கோர்ட்டார் நிர்ணயிக்கும் நடவடிக்கைமுறையை அனுசரித்து நடந்துகொள்ளும்படிச் செய்வதும் அவைகளை அந்த கோர்ட்டுகளின் மேல் விசாரணைக்கு உட்படுத்துவதும் வாஸ்தவத்தில் விரும்பக்கூடியதாகும். மத்திய போர்ட் ஒன்றை அமைப்பதனால் ஏற்படுவதைக்காட்டிலும் இதனால் அதிக திறமையான மேல்விசாரணை ஏற்படும். 1894-ம் ௵த்தில் முத்துசாமி ஐயர் கம்மிட்டியாரால் தயார் செய்யப்பட்ட மசோதா ஆக்டில் இம்மாதிரியான மேல்விசாரணை விஷயமாக நிபந்தனை கண்டிருந்தது. இதற்கு முன் ராபின்ஸன் கம்மிட்டியார் தயார்செய்த மசோதா ஆக்ட், ஸல்லிவன் துரை தயார்செய்த மசோதா ஆக்ட் முதலியவைகளைப்போன்ற சில மசோதாக்களில் மத்திய போர்ட் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நிபந்தனை கண்டிருந்ததென்பதையும், ஆனால் 1893-ம் ௵த்தில் முத்துசாமி ஐயர் கம்மிட்டியாரால் பிரேரேபிக்கப்பட்டபடி கம்மிட்டிகளை டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகள் மேல் விசாரணைசெய்வதே சிலாக்கியமானது என்று நினைத்து ஆதி பிரேரபணைகள் பிறகு விட்டுவிடப்பட்டனவென்பதையும் இங்கே எடுத்துக் காட்டலாம். இந்த மசோதா ஆக்டில் கண்டபடி பரிபாலன சம்பந்தமான இந்த புதிய அதிகார சபை ஏற்படுத்துவதற்காகப் பிடிக்கும் செலவு காரணமாக, இந்த மசோதா ஆக்டினால் பாதிக்கப்படும் சமூகத்தார் அதை ஸ்பஷ்டமாய் விரும்பாமற் போகலாம் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். 8-ம் அத்தியாயத்தில் கண்டிருக்கும் நிபந்தனைகளின்படி மடங்களும் கோயில்களும் போர்டாருக்கு அல்லது கம்மிட்டிகளுக்கு வருஷவாரி சகாயத்தொகைகள் கொடுக்கவேண்டும். அவை - தங்களுடைய கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கான கட்டணங்களைச் செலுத்தவேண்டியிருப்பதுடன், போர்டாராவது கம்மிட்டியாராவது தொடங்கும் சட்ட சம்பந்தமான நடவடிக்கைகளுக்காகப் பிடிக்கும் சகல கோர்ட் செலவுகளையும் இதர செலவுகளையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. மேலும், 2-வது ஷெட்யூலின்படி விதிக்கப்படக்கூடிய கோர்ட் கட்டணங்களையும் பெரும்பாலான விஷயங்களில் இனாங்களின் நிதிகளிலிருந்தே கொடுக்கவேண்டியதாகும். மற்ற சகல நிபந்தனைகளும் நீங்கலாக, இந்த நிபந்தனைகள் எல்லாவற்றின் ஒன்று சேர்ந்தபயன் என்னவாயிருக்கக்கூடுமென்று எனக்குத் தோன்றுகிறதென்றால் - அமித செலவு ஏற்படுகிறதென்னும் முகாந்தரத்தினால், இந்த மசோதா ஆக்டின்படி இனாங்கள் பரிபாலிக்கப்படுவதை வெகுசாய் ஜனங்கள் ஒத்துக்கொள்ளாமற் போகக்கூடுமென்பதே. இந்த ராஜதானியிலுள்ள மத சம்பந்தமான இனாங்களை முதல் தடவையாய்த் திறமையான மேல்விசாரணைக்குட்படுத்துவதே இந்த சட்டத்தின் நோக்கமாகும். ஆகவே, அதிக பணச்செலவில் அதிகார சபைகளை ஏற்படுத்தி நடத்துவதற்காக கோயில்கள், மடங்கள் ஆகிய இவைகளின் நிதிகள் உபயோகிக்கப்படுகிறதென்று எவரும குற்றங் கூறுவதற்கு சாத்தியமானமட்டில் இடங்கொடாமலிருப்பதே உசிதமாகும். மேலும், ஷை அதிகார சபைகள் அவசியமென்று பூர்த்தியாய் ஸ்தாபிக்கப்படவில்லை.

4. மசோதா ஆக்டில் கண்டபடிக்குள்ள மேல் விசாரணை ஏற்பாட்டிற்குத் திரவியம் கிடைக்கும்படிச் செய்வதில் இன்னொரு கஷ்டம் இருக்கிறது. இப்போதைய மசோதா ஆக்டில் கண்டிருக்கும் ஏற்பாடு என்னவென்றால், மத்தியபோர்டுக்கும் கம்மிட்டிகளுக்கும்

திரவியம் கிடைக்கும்படிச் செய்வதற்காக சகல கோயில்களிடமிருந்தும் மடங்களிடமிருந்தும் நூற்றுக்கு 3 வீதத்துக்கு மேற்படாமல் சகாயத்தொகை விதித்து வாங்கவேண்டுமென்பதே. அப்படிப்பட்ட சகாயத்தொகை விதித்து வாங்கினால் எவ்வளவு கிடைக்கக்கூடுமென்று முன்னதாய்த் தெரிந்துகொள்வதற்கு இப்போது சரியான ஆதாரங்கள் கிடையாது. சகல கோயில்கள், மடங்கள், ஆகிய இவைகளின் மொத்த வரும்படி ஒருகோடி ரூபாயென்றும் அந்த வரும்படியின்மேல் நூற்றுக்கு 3 வீதம் வாங்கினால் வெகுசாய் மூன்று லக்ஷம் ரூபாய் கிடைக்கக்கூடுமென்றும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மதிப்புக்கு நம்பக்கூடிய ஆதாரம் எதுவும் இல்லை. இதுவிஷயமாய் இன்னும் சரியாய் சங்கதி தெரிந்தாலன்றி செலவு அதிகமாய்ப் பிடிக்கத்தக்க அதிகார சபைகளை ஏற்படுத்திவிட்டு பிறகு பணம் எங்கேயெங்கேயென்று தேடப்போவது விரும்பக்கூடியதல்ல. மத்திய சபையை நடதிவருவதற்காக பணம் சேகரிக்கவேண்டியிருக்கிறதென்னும் காரணத்தைக்கொண்டன்றி மற்றப்படி, எந்த கோயில்களுக்காக கோர்ட்டாரால் ஏற்பாடுகள் (ஸ்கீம்கள்) தயார் செய்யப்பட்டிருக்கின்றனவோ அந்தக் கோயில்களுக்கு 65-வது பகுதியின்படி சகாயத்தொகை விதிக்க உத்தேசிப்பது வாஸ்தவத்தில் நியாயமாகாது.

5. மத்திய சபையின் அலுவல்கள் குறிப்பாய் இன்னவையென்றும் இன்ன தன்மையனவென்றும் ஜாக்கிரதையாய் ஆராய்ச்சி செய்யப்படாதது மற்றொரு ஆட்சேபணையாகும். மத்திய சபையார் பரிபாலனம் செய்யும் ஸ்தாபனமாக மாத்திரமேயிருக்கமாட்டார்கள். மடங்களுக்கும் விலக்கப்பட்ட கோயில்களுக்கும ஏற்பாடுகள் தயார் செய்யவும், இனங்களை துர்நிர்வாகஞ் செய்யும் விஷயங்களைப்பற்றி விசாரணைகள் நடத்தவும், விலக்கப்பட்டிராத கோயில்களுக்கு ஏற்பாடுகள் தயார் செய்யவும், கமிட்டிகளிடமிருந்துவரும் வெவ்வேறு அப்பீல்களை விசாரிக்கவும் போர்டாருக்கு அதிகாரம் இருக்கும். இம்மாதிரியான பற்பல அலுவல்களைச் செய்கையில் போர்டார் சாட்சியம் எடுத்துக்கொள்ளவும் ரெகார்டுகள் ஹாஜர்ப்படுத்தப்படும்படி உத்தரவு செய்யவும் சாட்சிகளையும் சம்பந்தப்பட்ட நபர்களையும் ஹாஜராகும்படி நிர்ப்பந்திக்கவும் வேண்டியிருக்குமென்பதில் எனக்கு சந்தேகமில்லை. அந்த போர்டார் தங்களுடைய அலுவல்களைத் திறமையாய் செய்யவேண்டுமானால், 1872-ம்௵த்திய இந்துதேசத்து சாட்சிய ஆக்டின்படி 'கோர்ட்டாருக்'குள்ள அதிகாரங்கள் அவர்களுக்கு இருக்கவேண்டும். மேலும், 1873-ம்௵த்திய இந்துதேசத்து பிரமாண ஆக்டின்படி பிரமாணம் செய்விக்கவும் அவர்களுக்கு அதிகாரம் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நிபந்தனைகள் எதுவும் மசோதா ஆக்டில் கண்டிருக்கவில்லை. ஆகவே, மசோதா ஆக்டின்படி அமைக்கப்படும் போர்டானது - ஒரு திறமையற்ற சபையாக இருக்குமென்று நான் நம்புகிறேன். மேலும், அனேக விஷயங்களில் போர்டாரின் உத்தரவுகள் முடிவானவையாயிருக்கவேண்டுமென்றும் மசோதா ஆக்டில் உத்தேசித்திருக்கிறது. இது விரும்பத்தக்கதல்ல. சங்கிரமித்துள்ள உரிமைகளை பாதிக்கிறவையாய் போர்டாரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின் விஷயத்திலாவது சாதாரண கோர்ட்டுகளில் நியாயந் தேடுவதற்கு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உரிமையிருக்கவேண்டும் ; ஆனால் இந்த அதிகாரம் துர்விநியோகப்படுத்தப்படாமலிருப்பதற்கு அவசியமாயிருக்கக்கூடிய தகுந்த பாதுகாப்புகள் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

மதசம்பந்தமான இனங்களின் பரிபாலனத்துக்குச் சம்பந்தப்பட்ட அனேக விஷயங்களில் சாதாரண கோர்ட்டுகளுக்கு விசாரணை அதிகாரம் இல்லாமற் செய்து அந்த அதிகாரத்தை மத்திய போர்டினிடத்திலும் கம்மிட்டிகளிடத்திலும் சங்கிரமிக்கச் செய்ய என் சகாக்கள் விருப்பமுடையவர்களாயிருந்தபோதிலும், போர்டுகளுக்காவது கம்மிட்டிகளுக்காவது செய்துகொள்ளப்படக்கூடிய வெவ்வேறு விண்ணப்பங்களுக்கும் அப்பீல்களுக்கும் 2-வது ஷெட்யூலில் நிபந்தனை கண்டிருக்கிறபடி உயர்ந்த கோர்ட் கட்டணங்கள் விதிக்கும் விஷயத்தில் அவைகளை கோர்ட்டுகளாகவே பாவிக்க அவர்களுக்கு யாதொரு ஆட்சேபணையும் காணோம்.

6. இந்த மசோதா ஆக்டில் நான் ஒத்துக்கொள்ளாதவையாயிருக்கும் இதர பிரேரேபணைகளைப்பற்றி விவரித்துச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. இந்த மசோதா ஆக்டில் மடங்களையும் சேர்த்திருப்பதைக் குறித்து எனக்கு அனுமானமும் சந்தேகமும் இருக்கிறது. தென் இந்தியாவிலுள்ள மடாதிபதிகளில சிலருடைய நிர்வாகத்தைப்பற்றி அப்போதைக்கப்போது ஏற்பட்டிருககும் பெருத்த புகார்களை நான் மட்டுப்படுத்தவில்லை. அவர்களின் பரிபாலனத்தைச் சீர்திருத்தவேண்டுமென்று கவலைகொள்ளும் என் சகாக்களிடத்தில் நான் அனுதாபமுள்ளவனாயிருக்கிறேன். ஆனபோதிலும், அந்த மடங்கள் ஏற்பட்டதன் மூலகாரணத்தையும் அவைகளின் பரிபாலனத்தில சம்பந்தப்பட்டிருப்பவர்களெல்லோரும் எம்மாதிரியாக அவை மேல்விசாரணை செய்யப்படவேண்டுமென விரும்புகிறார்களென்பதையும் தீரவிசாரித்தான பிறகு அவைகளுக்காக பிரத்தியேகமாய் சட்டம் விதிக்கத் தொடங்குவது இதைவிட திருப்திகரமாயிருக்குமென்று நான் நினைக்கிறேன்.

மடாதிபதிகளின் பதவி இன்னதென்று வரையறுத்து இந்த ராஜதானியில் நெடுநாளாய் தீர்ப்புகள் செய்யப்பட்டு வந்ததை கவனிக்கும்போது, அவர்கள் தங்கள் பதவிக்கு

ஏற்காதவிதமாய் அடிக்கடி நடந்திருக்கிறார்களென்னும் விஷயமே - சம்பந்தப்பபட்ட பிரசினைகளை கிரமமாய் ஆராய்ச்சிசெய்யாமலும் வேண்டிய சங்கதிகளையெல்லாம் நாம் சேகரித்துக் கொள்ளாமலும் மடங்களை இந்த மசோதா ஆக்டில் சேர்ப்பதற்குப்போதுமான காரணமாகாது. ‘மடம்’ என்பதன் அர்த்தத்தையும ‘மதசம்பந்தமான இனாம்’ என்பதன் அர்த்தத்தையும் சேர்த்துவாசித்தால ‘குருபூஜையை’ப்போல் சீடர்கள் தாங்களாகவே கொடுக்கும் காணிக்கைகள் அல்லது ‘பாதபூஜையை’ப்போல சீடர்கள் மடங்களின் தலைவர்களுக்குக் கொடுக்கும் காணிக்கைகளுக்குகூட அவர்கள் கணக்கு சொல்லவேண்டியிருக்குமென்பது மிகவும் ஸ்பஷ்டமாய் விளங்கும். இந்த விஷயத்தில மசோதா ஆக்ட் அமிதமாய்ப் பிரவர்த்தித்திருக்கிறதென்றும் அதனால் ஆத்துமார்த்தமான விஷயங்களில் இந்த ஸ்தாபனங்களுக்குத் தலைவர்களாயிருப்பவர்களின் பதவிக்கு அனேகமாய்க் குறைவு ஏற்படலாமென்றும் நான் எண்ணுகிறேன். இந்த விஷயத்தில் அனேக கஷ்டங்கள் இருக்கின்றன. அவசரப்பட்டு சகல மடங்களையும் இந்த மசோதா ஆக்டில் சேர்த்து அவைகளை லௌகீகர்களின் மேல்விசாரணைக்கு உட்படுத்துவதும் இஷ்டானுசாரமாய்க் கொடுக்கப்படும் காணிக்கைகளை மடாதிபதிகள் கணக்கு சொல்லுவதற்குட்பட்டிருக்கும் சொத்துக்களில் சேர்ப்பதும் மசோதாவில் நியாயமாய் ஆட்சேபிக்கக்கூடிய இரண்டு அம்சங்களாகும்.

7. கோயில் கம்மிட்டிகளின் விஷயத்திலும் மேற்பார்வை விஷயமாகவும் மேல்விசாரணை விஷயமாகவும் அவைகளுக்கு குறிப்பிட்ட அதிகாரங்கள் கொடுப்பதற்கு பர்த்தியாக பொதுவாய் மேற்பார்வையிடும அதிகாரம் கொடுத்திருப்பதில் மசோதா ஆக்டானது தவறான வழியில் பிரவர்த்தித்திருப்பதாக நான் அபிப்பிராயப்படுகிறேன். ‘விலக்கப்பட்ட கோயில்கள்’, இதர கோயில்கள் என்று வித்தியாசப்படுத்தியிருப்பது கோயில் பரிபாலனத்தில் அனேக விபரீதங்களுக்கு இடந்தரும். அவைகளுக்கு சமாதானம் சொல்வது கஷ்டமாயிருக்கும். ஏற்கனவே யிருக்கும ஏற்பாடுகளுக்குட்பட்டிருக்கும் இனாங்கள் சம்பந்தமாய் 71-வது பகுதியில கண்டுள்ள நிபந்தனைகள் ஸ்பஷ்டமாகவுமில்லை விரும்பத்தக்கவையாகவுமில்லை. பிரஸ்தாப ஏற்பாட்டைத் திருத்தவேண்டுமென்றாவது ரத்துசெய்ய வேண்டுமென்றாவது மத்திய போர்டார் கோர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது சாத்தியமாயிருக்கும்படிச் செய்தால், இந்த விஷயத்தில அவசியமான நிபந்தனை கண்டதாகும்.

மேலும், பொது தருமங்கள் விஷயமாய் அட்வொகேட் ஜெனரலுக்குள்ள அதிகாரங்களுக்குச் சம்பந்தப்பட்ட ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 92-வது பிரிவையும், 1-வது அத்தியாயத்தைச் சேர்ந்த 8-வது விதியையும் ரத்துசெய்வது எனக்கு இஷ்டமில்லை. கோயில்களில் மிகுதியாயிருக்கும் பணத்தை உபயோகிப்பதற்குச் சம்பந்தப்பட்ட 62-வது, 63-வது பகுதிகளில் கண்டிருக்கும் நிபந்தனைகள் பிரதமத்தில் கொண்டுவரப்பட்டபடிக்குள்ள மசோதா ஆக்டில் அடங்கியுள்ள நிபந்தனைகளைக்காட்டிலும் சிலாக்கியமானவைகளே. ஆனாலும், பொது ஜனங்கள் செய்திருக்கும் குணதோஷ ஆராய்ச்சியை அனுசரித்து அவைகளைப்பின்னும் திருத்துவது சாத்தியமாகும். இன்னும் பல நுட்பமான விஷயங்கள் சம்பந்தமாய் மசோதா ஆக்டில் கண்டிருக்கும் நிபந்தனைகளைப் பின்னும் பரிசீலனைசெய்து திருத்துவது அவசியமாகும். மேலும், இதைப்போன்ற சட்டத்தை ஒரே தடவையாய் இராஜதானி முழுவதிலும மொத்தமாய் அமுலுக்குக் கொண்டுவரக்கூடாதென்று நான் நினைக்கிறேன். இந்த ராஜதானியைச் சேர்ந்த சில ஜில்லாக்களில் மதசம்பந்தமான இனாங்கள் சரிவர பரிபாலனம் செய்யப்படுவதில்லையென்று கூக்குரல் ஏற்பட்டிருக்கிறது. மற்ற ஜில்லாக்களில் அப்படிப்பட்ட முறைப்பாடு மிகவும் கொஞ்சமாகவோ முறைப்பாடே இல்லாமலோ இருக்கிறது. முறைப்பாடு ஏற்பட்டிருக்கிற விஸ்தீர்ணங்களில மாத்திரமே மசோதா ஆக்டில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், அதுவும் அந்தப் பிரதேசத்துக்கு சமீபத்திலுள்ள ஸ்தாபனங்களுக்கு இந்த ஆக்டைப் பிரயோகிக்கவேண்டுமென்று ஷை பிரதேசத்தில் இருக்கிற ஜனங்கள் கேட்டுக்கொள்வதன்மேல் மாத்திரமே அப்படி செய்யவேண்டுமென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன். சென்னபட்டணத்திலுள்ள ஒரு மத்திய போர்டின் மேற்பார்வையின் கீழ் வேலைசெய்யும் கம்மிட்டிகளை மொத்தமாய் சகல ஜில்லாக்களிலும் ஏற்படுத்துவது அவசியமுமல்ல யுக்தமுமல்ல. பிரதேச அதிகார சபைகள் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலும் இந்த மசோதா ஆக்டின்படி அறிக்கை செய்யப்படும் விஸ்தீர்ணங்களிலும் மசோத ஆக்டை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான நிபந்தனைகளை அதில் சேர்ப்பது மிகவும் விரும்பக்கூடியதாகும்.

1923-ம்ஸூ பெப்ரவரிமீ 23உ. எம். ராமசந்திர ராவ்.

(4)

1. 5-வது பகுதியைச் சேர்ந்த (5) அடையாளமிட்ட உட்பகுதியில் ‘விலக்கப்பட்ட கோயில்’ என்பதற்குச் சொல்லியிருக்கும் அர்த்தம் சரியாயில்லை. மேலும், (a), (b) அடையாளமிட்ட பகுதிகளை ஒன்றாய்ச் சேர்த்துவிடலாம். கோயில்களை சுவாதீனத்தில் வைத்

துக்கொள்ளாமல் விட்டுவிடுவது 1842-ம் ஹ௵த்தில்தான் ஆரம்பித்தபடியாலும் சகல கோயில்களும் 1842-ம் ஹ௵த்திலேயே ஒப்புவித்துவிடப்பட்டனவென்று அழுத்தமாய்ச் சொல்லமுடியாததனாலும், அதற்கு நீண்டகாலம் பிற்பட்டு கோயில்களின் சொத்துக்கள் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றனவென்று நன்ருய்த் தெரிந்திருக்கிறபடியாலும், பிற்பட்ட ஒரு தேதியைக் குறிப்பிடுவது அவசியமாகிறது. அர்த்தம் கூறும் இதர பகுதிகளிலும்கூட சில மாறுதல்கள் செய்யவேண்டியதாயிருக்கும். ஆனால், அவை விவரங்களைக்குறித்த விஷயங்களாதலால், அவைகளைப்பற்றி இங்கே கூறுவது அவசியமல்ல.

2. போர்டானது பிரதானமாய்ப் பரிபாலனம் செய்வதற்கான சபையாகுமென்று ரிபோர்டின் 8-வது பாராவில் சொல்லியிருக்கிறது. இப்போது அனுப்பியிருக்கும் மசோதா ஆக்டின்படி போர்டானது அப்படிப்பட்ட சபையாகுமென்று சொல்லக்கூடு மாயினும், போர்டின் அலுவல்கள் பலவகைப்பட்டவையாயும் இன்னும் விரிவாயும் இருக்க வேண்டும். மேலும், கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்று மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கும் பல சந்தர்ப்பங்களில் பெரும்பான்மையானவைகளின் விஷயத்திலாவது போர்டார் நீதி விசாரணை சபையைப்போல் தீர்ப்புசொல்லவேண்டும். மத சம்பந்தமான ட்ரஸ்டுகள் விஷயமாய் வழக்குகள் ஏற்படுத்துவதைக் குறைப்பதும் சீக்கிரத்தில் பரிகாரம் கிடைக்கும்படிச் செய்வதுமே மத்திய போர்ட் அமைப்பதற்குள்ள பிரதானகாரணங்களில் ஒன்ருகும். ஆகவே, இவை கைகூடாவிட்டால், போர்டினால் ஏற்படக்கூடிய பிரயோ ஜனம் வரையறுக்கப்பட்டுபோகும். மேலும், இப்போதுள்ள மசோதா ஆக்டின்படி போர்டுக்கு ஏற்படுத்தியிருக்கும் வரையறுக்கப்பட்ட சில அலுவல்களைச் செய்வதற்காக போர்ட் ஒன்று இருக்கவேண்டுமோ என்ற பிரசினை ஏற்படலாம். 6-வது பகுதி அவ்வளவு தெளிவாயில்லை. குறைந்தது ஒரு போர்டாவது இருக்கவேண்டுமென்பதும் பலபோர்டு களும் இருக்கலாமென்பதும் உத்தேசமாகும். ஆகவே 6-வது பகுதியிலிருக்கும் 'கட்டளை யிடலாம்', 'மாற்றலாம்', 'எடுத்துவிடலாம்' 'பிறப்பிக்கலாம்' என்னும் வார்த்தை களுக்குமுறையே கட்டளையிடவேண்டும்', 'மாற்றவேண்டும்', 'எடுத்துவிடவேண் டும்', 'பிறப்பிக்கவேண்டும்' என்று பொருளாகுமென்று சொன்னலன்றி மற்றப்படி அந்த வார்த்தைகள் தகுந்தவையாகா. இதை ஸ்பஷ்டமாக்கி அவசியமான மாறுதல்களைச் செய்யவேண்டும். கம்மிஷனர்களின் உத்தியோக கால அளவு ஐந்து வருஷமாகுமென்று வரையறுப்பது விரும்பக்கூடியதல்ல. ஏனென்றால், அவர்கள் ஒருகால் மீண்டும் நியமிக் கப்படலாமென்று ஒருவாறு நம்பக்கூடுமாயினும், குறைந்த கால அளவுக்கு திறமை வாய்ந்த நபர்கள் கிடைப்பது அசாத்தியம். எவ்வகை சந்தர்ப்பங்களிலாகிலும், கம்மிஷ னர்கள் தாங்கள் உத்தியோகம் பார்த்துவரும் காலத்தில் வேறெந்த வர்த்தகமாவது தொழி லாவது செய்யக்கூடாது. ஆகவே, 10-வது பகுதியிலுள்ள 'பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியைப் பெருமல்' என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும். ப்ரெஸிடென் டின் யோக்கியதாம்சங்களும் இதர கம்மிஷனர்களின் யோக்கியதாம்சங்களும் ஒன்ருகவே யிருக்கும்.

3. 1863-ம் ஹ௵த்து ஆக்டின்படிக்கான கம்மிட்டிகள் வேலைசெய்துவந்தது மிகவும் அதிருப்திகாமாயிருந்ததென்று தெரியவந்திருக்கிறது. ஆகவே, இந்த மசோதா ஆக்டில் கண்டிருக்கும் மாறுதல்கள் செய்தாலுங்கூட அவைகளை அப்படியே வைத்திருத்தல் உசிதமாவென்பது சந்தேகிக்கக்கூடியதாயிருக்கிறது. பல மத்திய போர்டுகள் இருக்கலா மென்று மசோதா ஆக்டில் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கும்பொழுது கம்மிட்டிகளை அடி யோடு எடுத்துவிடுவது விரும்பத்தக்கதாகும். இந்தப்படி செய்வதனால் இந்த ராஜதானியி லுள்ள சகல மதசம்பதமான ஸ்தாபனங்களின் பரிபாலனமும், ஒரேவிதமான முறைகளை அனுசரித்ததாயிருக்கக்கூடும். மேலும் வெவ்வேறு ஜில்லா கம்மிட்டிகள் தங்களுக்கென்று வெவ்வேறு பரிபாலனமுறைகளை ஏற்படுத்திக்கொள்ளும்படி விட்டுவிடவேண்டியதில்லை. மேற்படி கம்மிட்டிகள் இருந்தே வரவேண்டுமானால், தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர் ணத்தை ஸர்க்கில்களாகப் பிரிக்கவேண்டுமென்று 19-வது பகுதியைச் சேர்ந்த (2) குறிப் பிட்ட உட்பகுதியில் கண்டிருக்கும் நிபந்தனை விரும்பக்கூடியதல்ல.

4. ஒவ்வொரு வகுப்பைச்சேர்ந்த மடங்களையும் அந்த வகுப்பைச் சேர்ந்த மடங்களின் சீடர்கள் அடங்கிய ஒரு பிரத்தியேகமான கம்மிட்டியின் மேல்விசாரணையில் வைக்க வேண்டும். மேலும், பற்பல சமூகங்களைச் சேர்ந்த கனவான்களடங்கிய ஒரு மத்திய போர்டார் நேரில் அவைகளை மேல்விசாரணை செய்யும்படிச் செய்வது விரும்பக்கூடியது மல்ல, அதனால் மடாதிபதிகளின் பதவிக்குக் குறைவு ஏற்படுவதுமல்லாமல் அந்த மடங் களின் சீடர்களுக்குக் மனத்தாங்கலும் உண்டாகலாம். 6-ம் அத்தியாயத்தின்படி போர் டாருக்குக் கொடுத்திருக்கும் அதிகாரங்களை முதலில் சீடர்களடங்கிய கம்மிட்டிக்குக் கொடுத்து; அந்த கம்மிட்டியாருக்குமேல் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ள இட் மிருக்கும்படி செய்யவேண்டும். சைவமத மடங்களின் விஷயத்திலாவது மேலேகண்ட படி செய்யலாகும்.

5. 38-வது பகுதியைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பகுதியிலே, நேமகம் செய்யும் விஷயத்தில் சீடர்கள், குடும்பத்தார் ஆகிய இவர்களின் சுதந்தரங்கள் கிரமமாய் கவனிக்கப் படவேண்டுமென்று சொல்வதற்கு பர்த்தியாக சீடர்கள் அல்லது குடும்பத்தைச் சேர்ந்த

வர்கள் அல்லது கடைசியாய் ட்ரஸ்டியாக இருந்தவரின் பந்துக்களிலிருந்து பிரஸ்தாப உத்தியோகத்துக்கு நபரை நியமிக்கவேண்டுமென்று காணவேண்டும்.

6. ட்ரஸ்டிகளின் யோக்கியதாம்சங்களை நிர்ணயித்துச் சொல்லும் 44-வது பகுதியில், யாதொரு வகுப்பு அல்லது சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பிரஸ்தாப கோயிலில் பிரவேசிக்க ஆசாரம் அல்லது மாமூலின்படி பாத்தியதையிராதிருந்தால் அப்படிப்பட்ட யாதொரு வகுப்பு அல்லது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ட்ரஸ்டியாயிருக்கக்கூடாதென்று காணவேண்டும். இல்லாவிட்டால் விசேஷ சச்சரவும் வெறுப்புக்கிடமான கலகமும் ஏற்படும். நாங்கள் ஆலோசனை சொல்லுகிறபடி கம்மிட்டிகளை எடுத்துவிட்டால், ஒவ்வொரு கோயிலுக்காகவும் தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணம் ஏற்படுத்தி ஒவ்வொரு கோயிலின் ட்ரஸ்டிகளும் அதிலுள்ள வோட்டர்களால் தெரிந்தெடுக்கப்படலாம்.

7. 59-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பகுதியில், 'சரியாய்ப் பரிபாலனம் செய்யப்படும்பொருட்டு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'சரியாய்ப் பரிபாலனம் செய்யப்படும் பொருட்டாகிலும் பணத்தைச் சரியாய் உபயோகிக்கும்படி செய்யப்படும் பொருட்டாகிலும்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும். 6-ம் அத்தியாயத்தில் கண்டிருக்கும் நிபந்தனைகள் - ட்ரஸ்ட் பணத்தை அக்கிரமமாய் உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிற குற்றவாளிகளான ட்ரஸ்டிகள் விஷயத்தில் தகுந்தபடி நடவடிக்கை நடத்துவதற்குப் போதுமானவையாயில்லை. அவர்களை தள்ளிவிடுவதற்காகவும் அக்கிரமமாய் உபயோகித்துக்கொள்ளப்பட்ட பணத்தை வசூலிப்பதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்தவேண்டும்.

63-வது பகுதியில் கண்டிருக்கிறபடி, பணத்தை உபயோகிப்பதற்கான விண்ணப்பத்தைக் கோர்ட்டாருக்குச் செய்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. ஷை விண்ணப்பத்தை போர்டாருக்கே செய்துகொள்ளவேண்டும். மேலும், தங்களுக்கு இஷ்டமானால் அந்தப்படி விண்ணப்பம் செய்துகொள்ள பற்றுள்ள நபர்களுக்கும் இடம் கொடுக்கவேண்டும்.

8. 69-வது பகுதியின்படி, அட்வொகேட் ஜெனரலுக்குள்ள அதிகாரங்களைப்போன்ற அதிகாரங்கள் போர்டுக்கும் கொடுத்து, 3-வது பகுதியில், அட்வொகேட் ஜெனரலுக்குள்ள அதிகாரங்களுக்கு பாதகமேற்படாதென்று வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிறது. ஏககாலத்தில் அலுவல் பார்க்கும் இரண்டு அதிகாரிகளுக்கு ஒரேமாதிரியான அதிகாரங்கள் கொடுத்து, ஒருவர் பரிகாரம் செய்துகொடுக்க மறுத்திருக்கையில் அதே விஷயத்தில் மற்றொருவருடைய உதவியை நாடுவதற்கு இடங்கொடுப்பது உசிதமாவென்பது சந்தேகத்துக்கிடமான விஷயமாகும்.

9. 92-வது பிரிவின்படிக்கான வியாஜ்ஜியங்களில் கோர்ட்டுகளால் ஏற்பாடுகள் தயார் செய்யப்பட்டிருக்கும் ஸ்தாபனங்களை குறித்து 71-வது பகுதியில் சொல்லியிருக்கிறது. ஆனபோதிலும் அவைகளின் பரிபாலனத்துக்கு இந்த மசோதா ஆக்டினால் என்ன நேரிடுமென்று அதனின்றும் ஸ்பஷ்டமாய் ஏற்படவில்லை. இது விஷயத்தில் யாதொரு சந்தேகமுமில்லாமல் செய்யவேண்டும்.

10. இந்த மசோதா ஆக்ட் அனேக தடவை திருத்தி எழுதப்பட்டது. ஒவ்வொரு தடவையும் அதில் முக்கியமான மாறுதல்கள் அடுத்தடுத்து மிகவும் விரைவாய் செய்யப்பட்டன. ஆகவே, கடைசியாய் எழுதப்பட்ட மசோதாவை முதல் தடவையாய் வாசிப்பவருக்கு அது மிகவும் சுலபமாயிருக்கக்கூடுமானாலும், பிரதம மசோதாக்களினால் ஏற்பட்ட அபிப்பிராயங்களை முற்றிலும் மறந்து இந்த மசோதாவிலுள்ளதை மாத்திரம் பூர்த்தியாய் கிரகிப்பது எங்களுக்குக் கஷ்டமாயிருக்கிறது. இந்தப்படி நாங்கள் சொல்லுவதற்காக மன்னிக்கவேண்டுமாய்க் கோருகிறோம். ஆகையால், மேலே நாங்கள் சொல்லியிருப்பது மாத்திரமேயல்லாமல், இதர விஷயங்களிலும் மாறுதல்கள் அவசியமாயிருக்கக்கூடும். அந்த மாறுதல்களைத் தெரிவிக்கும் சுதந்தரம் ஸெலெக்ட் கம்மிட்டியின் மெம்பர்களுக்குக்கூட இருக்கும்படி செய்யலாம்.

டி. சோமசுந்தர முதலியார்.

1923-ம் வருஷம் பெப்ரவரிமீ 23உ. ஸி. அருணாசல முதலியார்.

(5)

1863-ம் வருஷத்திய மதசம்பந்தமான இனாம்களைக் குறித்த ஆக்ட் ஜாரி செய்யப்பட்ட பிறகு அதிசீக்கிரத்திலேயே, அதிற்கண்ட நிபந்தனைகள் இந்த ராஜதானியிலுள்ள கோயில்களின் அவசியங்களுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்றவையாயில்லையெனத் தெரியவந்தது. ஆகவே, இந்த ராஜதானி சம்பந்தப்பட்ட வரையிலாவது எவ்விதமாகவேனும் அந்த ஆக்டைத் தகுந்தபடி திருத்த அப்போதைக்கப்போது முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மதசம்பந்தமான இனாம்களைக் குறித்த மசோதா ஆக்ட் சென்ற டிஸெம்பர் மாதத்தில் முதவில் பிரசுரிக்கப்பட்டபோது இந்த ராஜதானியிலுள்ள பொதுஜனங்கள் அதில் மிகவும் சிரத்தையெடுத்துக்கொண்டது ஸகஜமேயாகும்; மேலும், பொது ஜனங்களில் அனேகர்

இந்த மசோதா ஆக்டிற்கண்ட நிபந்தனைகளைப்பற்றி நுட்பமாய் ஆலோசித்து குணதோஷ விஷயமாய்த் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க கூடியவரையில் அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். கொடுக்கப்பட்ட கொஞ்ச காலத்திலேயே, பலர் அதை ஆட்சேபித்ததுமன்றி, மசோதா ஆக்டில் கண்டிருக்கும் முக்கியமான நிபந்தனைகளை அங்கீகரிக்க முடியாதென்று கண்டு இருநூறுக்கு அதிகமாய் விண்ணப்பங்கள் சட்டநிருபண சபையாருக்கும் ஸெலெக்ட் கம்மிட்டியாருக்கும் அனுப்பப்பட்டன. ஸெலெக்ட் கம்மிட்டியாரால் திருத்தி எழுதப்பட்ட மசோதா ஆக்டுக்கும் அவர்களுக்கு அனுப்பப்பட்ட மசோதா ஆக்டுக்கும் அதிக பேதமிருக்கிறது. மேலும், திருத்தி எழுதப்பட்ட மசோதா ஆக்டினால இப்போதுள்ள ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் அனேகமாய் முழுவதும் மாற்றப்பட்டிருப்பதுமல்லாமல் பல நிபந்தனைகளை பாதிக்கக்கூடிய விதமாய்த் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மத சம்பந்தமான இனாங்களைக் குறித்த விஷயம் டிரான்ஸ்பர் செய்யப்பட்ட விஷயமாய் ஒரு மந்திரி அவர்களின் மேல்விசாரணையில் இருக்கிறதென்றாலும், அதன்காரணமாக அவர்கள் எம்மட்டில் பிரவர்த்திக்கலாமென்பதற்கும் இன்னது விளையும் என்பதற்கும் ஒரு அளவு இருக்கிறது. மேற்படி சங்கதிகளை நான் எடுத்து சொல்வதனால், பொதுஜனங்களில் பெரும்பாலோரால் கண்டிக்கப்பட்ட முக்கியமான ஒரு விஷயதில், அதாவது, மத சம்பந்தமான இனாங்களின் மிகுதிப்பணத்தை உபயோகிக்கும் அல்லது வேறு காரியங்களுக்கு வினியோகிக்கும் விஷயத்தில் பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைப் பெரிதும் அனுசரித்தே பிரதமத்திலே மசோதா ஆக்டில் கண்டிருந்த நிபந்தனைகள் திருத்தப்பட்டிருக்கின்றனவென்பதை நான் மறந்துவிடவில்லை. எனினும், திருத்தப்பட்டபடியுள்ள நிபந்தனைகள் சட்டத்தின் ஒருபாகமாக்கப்படுவதற்குமுன் அதைக் குறித்து பொது ஜனங்கள் சொல்ல விரும்பும் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்வது உசிதமாகுமென்று நான் சொல்லவேண்டியிருக்கிறது.

மதசம்பந்தமான இனாங்களைக் குறித்த 1863-ம் ௵த்து 20-வது ஆக்டை முழுவதும் ரத்து செய்வது அவசியமாகும்படி அதன் நிபந்தனைகளை அனேகமாய் ஒவ்வொன்றிலும் திருத்துவதைவிட ஷை ஆக்டிலுள்ள எந்த நிபந்தனைகள் அனுஷ்டானத்தில திருப்திகரமற்றவைகளாயிருப்பதாகத் தெரியவந்ததோ அந்த நிபந்தனைகளை மாத்திரம் தகுந்தபடி மாற்றி மிகுதியாயிருக்கும் பணத்தை உபயோகிப்பது விஷயமாய் அந்த ஆக்டில் ஒரு நிபந்தனையை சேர்த்துவிடுவதே இப்போதைய நிலைமையின் ஆவசியகங்களுக்கு போதுமானதாகுமென்பது எனது அபிப்பிராயமாகும். இந்தச் சட்டத்தினால், ஜனங்களில் பெரும்பாலோருடைய மனதுக்கு வெகுசாய் வருத்தம் ஏற்படக்கூடும். ஆகவே, விரோதம் ஏற்படாத முறையை அனுசரிப்பது சட்டநிருபண சபையாரின் கடமையாகும்.

இந்த மசோதா ஆக்டில் பிரதானமாயுள்ள ஒரு விஷயத்தைப்பற்றி நான் பிரத்தியேகமாய் ஆட்சேபிக்க வேண்டியவனாயிருக்கிறேன். அதென்னவென்றால், சாதாரண கோர்ட்டுகள் பிரவேசிப்பது விஷயமாய் மிதமிஞ்சி பயப்படுவதாகக் காட்டிக்கொண்டிருப்பதும் அவைகளுக்கு விசாரணை அதிகாரம் இராதபடி செய்ய கஷ்டப்பட்டு முயற்சி செய்திருப்பதுமேயாம்.

கம்மிஷனர்களின் போர்ட் ஒன்றை ஏற்படுத்துவதற்கு திருத்தப்பட்ட மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறது. மசோதா ஆக்டின்படி அவர்கள செய்யவேண்டிய அலுவல்கள் அனேகமாய் நீதிவிசாரணைக்கு சம்பந்தப்பட்டவையாய் இருக்கின்றனவேயொழிய பரிபாலனத்துக்கு சம்பந்தப்பட்டவையாயில்லை. அப்படியல்லவென்றாலும், பரிபாலனத்தைவிட அதிகமாய் நீதி விசாரணைக்கே சம்பந்தப்பட்டவையாயிருக்கின்றன. இங்கிலாந்தில் சாரிடி கம்மிஷனர்களின் போர்ட் என்னும் சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னதாக, அது விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட கம்மிஷன்கள் (சபைகள்) நீண்டகாலம் நிதானமாக விசாரணை செய்து 32 ரிபோர்ட்டுகள் அனுப்பினார்கள். அவைகளை ஆதாரமாகக்கொண்டு ஹௌஸ் ஆவ் காமன்ஸ் என்னும் சபையைச் சேர்ந்த ஒரு ஸெலெக்ட் கம்மிட்டியும் பிற்பட்டு, அதாவது 1849-ம் ௵த்தில், ஒரு ராஜாங்க கம்மிஷனும் இதுவிஷயமாய் சிபாரிசுகள் செய்யும்பொருட்டு நியமிக்கப்பட்டன. இந்த சிபாரிசுகளே கடைசியில் 1853-ம் ௵த்திய தரும சம்பந்தமான ட்ரஸ்டுகளைக்குறித்த ஆக்டில் எடுத்தெழுதப்பட்டன. மேலும், பிரதம ஆக்டின்படியும் பிற்பாடு செய்யப்பட்ட திருத்தங்களின்படியும் கம்மிஷனர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் - ஸெலெக்ட் கம்மிட்டியாரால் திருத்தப்பட்டபடிக்குள்ள இந்த மசோதா ஆக்டின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களைப்போல அவ்வளவு விரிவானவையாகவாகிலும் பிரத்தியேகமானவையாகவாகிலும் இல்லையென்பதையும் கவனிக்கவேண்டும்.

சட்டநிருபண சபையில் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டில் ஷை போர்டைக் குறித்து சொல்லப்படவேயில்லை. ஆகவே, சாரிடி கம்மிஷனர்களின் போர்டை ஏற்படுத்த உத்தேசித்திருப்பதை அறிந்து, முக்கியமாய் அவைகளுக்குக் கொடுக்க எண்ணியிருக்கும் அதிகாரங்கள் பெற்றவையாய் அப்படிப்பட்ட போர்டுகள் இருப்பது உசிதமா என்பதைப்பற்றி தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க பொது ஜனங்களுக்கு அவகாசம் கொடுக்கப்படவில்லை. போர்டார் செய்யவேண்டியதாய் ஏற்படக்கூடிய வேலையின்

அளவை உத்தேசித்தால், ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறபடி, ஐந்தைந்து கம்மிஷனர்களடங்கிய போர்டுகள் இரண்டையாவது ஏற்படுத்துவது அவசியமாகும். சிப்பந்தியும் வர்த்தனைகளும் உட்பட அவைகளுக்கு வருஷம் ஒன்றில் 125 ஆயிரமுதல் 150 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகும். இனங்களிலிருந்து கிடைக்கும் மொத்த வரும்படியின்மேல் நூற்றுக்கு $1\frac{1}{2}$ வீதத்துக்கு மேற்படாத ஒரு வீதப்படி மதசம்பந்தமான இனங்கள் சகாயத்தொகை கொடுக்கவேண்டியிருக்கிறது. சகாயத்தொகை கொடுக்கவேண்டிய ஸ்தாபனங்களுக்கு ஒரு கோடி ரூபாயிராவிட்டாலும் வருஷத்தில் 80 லக்ஷம் ரூபாயாவது மொத்தத்தில் வரும்படி கிடைக்கிறதென்று நிச்சயமாய்த் தெரியவேண்டியிருக்கிறது. இவ்வளவு வருமானம் தவறாமல் கிடைக்குமென்று நம்புவதற்கு கம்மிட்டியாருக்கு ஆதாரங்கள் எவையும் காட்டப்படவில்லை. 65-வது பகுதியைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பகுதியின்படி, புதிய ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும்போது ஏற்கனவே கோர்ட்டுகளால் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின்படி பரிபாலிக்கப்பட்டுவரும் மதசம்பந்தமான இனங்கள்கூட, அவைகள் விஷயமாய் போர்டுகள் செய்ய வேண்டிய வேலை எதுவுமிராவிட்டாலும், ஷை போர்டுகளுடைய செலவுகளின் நிமித்தம் நூற்றுக்கு $1\frac{1}{2}$ வீதம் சகாயத்தொகை செலுத்தவேண்டியதாகிறது. இது ஒரு நியாயமற்ற நிபந்தனையாகும். மடங்களுக்காகவாவது விலக்கப்பட்ட கோயில்களுக்காகவாவது போர்டார் ஏற்பாடுகள் தயார் செய்யவேண்டியிருக்கிற விஷயங்களிலன்றி மற்றப்படி பரிபாலன சம்பந்தமானவையாயிருந்தாலுஞ்சரி நீதிவிசாரணை சம்பந்தமானவையாயிருந்தாலுஞ்சரி போர்டாரின் உத்தரவுகள் முடிவானவையாகும். மசோதா ஆக்டில் உத்தேசித்திருக்கிறபடி போர்டாரின் உத்தரவுகள் முடிவானவையாயிருக்கும்படிச் செய்வது விரும்பக்கூடியதல்லவென்றும், அந்த உத்தரவுகள் சங்கிரமித்திருக்கும் உரிமைகளை பாதிக்கும் விஷயத்திலாவது, சாதாரண கோர்ட்டுகளுக்குப் போக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பாத்தியதையிருக்கவேண்டுமென்றும், ஷை அதிகாரத்தை வீண்வழிகளில் உபயோகிக்காதிருப்பதற்கு அவசியமாய்த் தோற்றக்கூடிய பாதுகாப்புகள் ஏற்படுத்தவேண்டுமென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

கம்மிட்டிகளின் அமைப்பு விஷயத்திலே, கம்மிட்டியில் இருக்கும் மொத்த மெம்பர்களில் நாலில் ஒரு பங்கு மெம்பர்களை போர்டார் நியமிக்கவேண்டுமென்று மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறது. 1863-ம் ௵த்து ஆக்டில், ஆரம்பத்திலே கம்மிட்டியின் மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டியவர்களாவார்களென்று நிபந்தனை கண்டிருக்கிறது. இந்த விஷயத்தில் அந்த நிபந்தனைக்குமாறாக நிபந்தனை ஏற்படுத்துவதற்குப் போதுமான காரணம் காட்டப்படவில்லையென்று நான் நினைக்கிறேன். மெம்பர்களை நேமகம் செய்வதற்கான அதிகாரம் ஏற்படுத்துவது அவசியமென்று நினைத்தாலும், அந்த அதிகாரத்தை ஜில்லா கோர்ட்டார் செலுத்தவேண்டுமேயொழிய போர்டார் செலுத்தக்கூடாதென்பது என்னுடைய அபிப்பிராயமாகும்.

தெரிந்தெடுப்பவர்களுக்கிருக்கவேண்டிய யோக்கியதாம்சங்களின் விஷயத்திலே, ரெவினியு போர்டாரின் 77-ம் நெ. ஸ்டாண்டிங் ஆர்டர் என்னும் நிலையான உத்தரவிலும் பிரதம மசோதா ஆக்டின் 1-வது ஷெட்யூலிலும் சேர்க்கப்பட்டு இப்போது செலாவணியாய்க்கொண்டிருக்கும் விதிகளுக்கு மாறாக விதிகள் செய்வதற்குப் போதுமான காரணம் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. அந்த விதிகளில் கண்டிருக்கும் யோக்கியதாம்சங்களையுடைய தெரிந்தெடுப்பவர்களின் சங்கியை பெரியதாயிருக்குமென்பது உண்மையே. ஆனால், எலெக்ஷன்கள் நடத்துவதில் ஏற்படக்கூடிய ஏதேனும் அசௌகரியம் அல்லது கஷ்டமானது - 19-வது பகுதியைச் சேர்ந்த 2-வது உட்பகுதியில் உத்தேசித்திருக்கிறபடி தெரிந்தெடுப்பவர்களின் வட்டங்கள் அமைப்பதனால் முற்றிலும் நிவர்த்தியாகாவிட்டாலும் விசேஷமாய்க் குறையும்.

முதல் தடவையாய் மசோதா ஆக்டில் கண்டிருக்கும் ஏற்பாட்டின்படி விசேஷ சட்டத்துக்குட்படுத்தப்படும் மடங்களும் விலக்கப்பட்டிருக்கும் கோயில்களும் ஒரேமாதிரியாய் பாவிக்கப்படுகின்றன. மேலும், எந்தக் கோயில்களின் மானேஜர்கள் 1842-ம் ௵த்திலாவது 1801-ம் ௵த்துக்கு முன்பாவது கவர்ன்மெண்டார் தலையிடாமலாகிலும் அதிகாரம் செலுத்தாமலாகிலும் மானேஜர் ஸ்தானத்தை உரிமைவழியாய் பெற்றுவந்தார்களோ அல்லது 1842-ம் ௵த்துக்குப் பின் ஸ்தாபிக்கப்பட்ட கோயில்களின் விஷயத்தில் பரம்பரை பாத்தியதையை அனுசரித்து ஒருவருக்குப்பின் ஒருவராய் அந்த ஸ்தானத்தை அடைந்துவந்திருக்கிறார்களோ அந்தக் கோயில்கள் விலக்கப்பட்ட கோயில்களாக பாவிக்கப்படுகின்றன. ஆகவே, எந்தக் கோயில்களின் விஷயத்தில், அவை 1842-ம் ௵த்துக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் 1842-ம் ௵த்திலிருந்தாவது அதற்குப் பிறகாவது அவைகளின் ட்ரஸ்டிகள் பரம்பரை பாத்தியதையை அனுசரித்து ஒருவருக்குப்பின் ஒருவர் வந்துகொண்டிருக்கிறார்களோ அந்தக் கோயில்கள் விலக்கப்பட்டவையாக பாவிக்கப்படவில்லை. 1842-ம் ௵த்திலிருந்து பரம்பரை மானேஜர்கள் ஏற்பட்டிருக்கும் கோயில்களை விலக்கப்பட்ட கோயில்களிலிருந்தும் வேறொருவகுப்பில் சேர்ப்பதற்குள்ள காரணம் விளங்கவில்லை. விலக்கப்பட்ட கோயில்களின் விஷயத்தில் நடந்துகொள்வதைபோலவே அவைகள் விஷயத்திலும் நடந்துகொள்வது தகுமென்பதற்கு எண்பதுவருஷம் போதுமான கால அளவாகும். தாங்கள் தலைமை வகிக்கும்

ஸ்தாபனங்களின் வரும்படி விஷயத்தில் மாடாதிபதிகளுக்கு தர்மகர்த்தாக்கள் அல்லது மானேஜர்களுக்கிருப்பதைக்காட்டிலும் அதிகமாய் அதிகாரம் ஏற்பட்டிருக்கிறது. இது சங்கதி பெரும்பான்மையோரின் ரிபோர்ட்டில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. உரிமை வழியாய் வரும் பிரசினை விஷயத்தில் தவிர, பாம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டிகளுக்கும் பாம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகளுக்கும பாத்தியதைகள் சம்பந்தமாயும் கடமைகள் சம்பந்தமாயும் பேதமில்லை. விலக்கப்பட்ட கோயில்களையும் மடங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரே நிபந்தனைகள் அவைகள் இரண்டுக்கும் பிரயோகப்படும்படி செய்வது முக்கியாம்சத்தில் பிசகான கொள்கையாகும். பாம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகளுக்கும், பாம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டிகளுக்கும் மடங்களுக்கும் தனித்தனியாய் நிபந்தனைகள் ஏற்படுத்தி, ஒரு வகுப்புக்குப் பிரயோகப்படக்கூடிய நிபந்தனைகள் தகுதியான சந்தர்ப்பங்களிலெல்லாம் மற்ற வகுப்பு அல்லது வகுப்புகளுக்கும் பிரயோகப்படும்படி செய்வது என்னைப் பொருத்தமட்டில் நலமாயிருக்கும். மடத்தின் வரும்படியை ஒருவகை செய்யும் விஷயத்தில் மடத்தின் தலைவருக்கு விசேஷ அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தப்படி ஒருவகை செய்வது மடத்தின் அவசரத்தை கவனிக்கும்போது அவசியமாயிராமற் போனபோதிலும் மடத்தின் நோக்கங்களுக்குப் பொருத்தமற்றவையாயிருக்கக்கூடாது. இந்த விஷயத்தைப்பற்றி மசோதா ஆக்டில் சரியாய் சொல்லப்படவில்லை. இதற்கு அனேகமாய் மடங்களையும் கோயில்களையும் ஒன்றாய்ச் சேர்த்திருக்கிறதே காரணமாகும். இந்த ராஜதானியிலுள்ள சில மடங்களின் வரலாற்றை கவனிக்கையில் சென்ற காலத்தில் அவை பெரிதும் துர்நிர்வாகம் செய்யப்பட்டு வந்ததாகத் தெரியவருகிறதென்பது உண்மையே. ஆனால், இது காரணத்தைப்பற்றியே சகல மடங்களின் விஷயத்திலும் ஒரேவிதமாய் நடந்துகொள்வது நியாயமல்ல. குறித்த ஸ்தாபனங்களுக்காவது குறித்த வகைகளைச் சேர்ந்த ஸ்தாபனங்களுக்காவது இந்த மசோதா ஆக்ட் பிரயோகப்படாதபடி செய்ய அதிகாரம் ஏற்படுத்திக்கொள்வது அவசியமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ராஜதானியிலுள்ள சகல மடங்களுக்கும் ஒரே நிபந்தனைகள் பிரயோகப்படும்படி செய்வது நியாயமாகுமென்று சொல்வதற்குப் போதுமான சங்கதிகள் ஸெலெக்ட் கம்மிட்டியாருக்குத் தெரிவிக்கப்படவில்லை. கம்மிட்டியாருக்குத் தெரிவிக்கப்பட்ட சங்கதிகளிலிருந்து வாஸ்தவத்தில் இதற்கு விரோதமான முடிவுக்கு வருவதே நியாயமாகிறது. மடங்களின் விஷயத்தில் ஏதாவது பரிகாரம் செய்யவேண்டியது அவசியமாயிருந்தால், அந்த விவகாரத்தை போர்டார் அதில் பிரவேசிக்காமலே சம்பந்தப்பட்ட மடங்களின் சீடர்களே தொடங்கவேண்டுமென்றும், முற்றிலும் நீதிவிசாரணை சம்பந்தமான அலுவல்களையுடைய கோர்ட்டாரே அந்த மடங்களுக்கு எவ்வகை பரிபாலன சம்பந்தமான ஏற்பாடுகள் அவசியமாகுமென்று நிச்சயிக்க போர்டாரைக்காட்டிலும் அதிக தகுதியுடையவர்களென்றும் சக்தியுடையவர்களென்றும் நான் அபிப்பிராயப்படுவதுமல்லாமல் மடங்களுக்கு ஏற்பாடுகள் நிஷ்கரிஷை செய்யும் விஷயத்தில் போர்டாருக்கு ஒருவித அலுவலும் ஏற்படுத்தவேண்டியதில்லையென்றும் அபிப்பிராயப்படுகிறேன். மடங்கள் சம்பந்தமாய், தகுதியாயுள்ள விஷயங்களில் ஏற்பாடுகளைத் தயார்செய்ய கோர்ட்டுகளுக்கு அதிகாரம் ஏற்படுத்துவதே அவசியமானது. இப்பொழுது தான் மடங்கள் முதல் தடவையாய் பிரத்தியேக சட்டத்துக்கு உட்படுத்தப்படுகின்றனவென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் அவைகளுடைய தற்கால நிர்வாகத்தில் எவ்வளவு வரையில் தலையிடலாமென்றும், அந்தப்படி தலையிடுவதற்காக எவ்வித அதிகார சபைகளை ஏற்படுத்தவேண்டுமென்றும் நிச்சயிப்பதில் வெகு ஜாக்கிரதையிருப்பதே விவேகமாகும்.

எந்த ஸ்தாபனங்களுக்காக ஏற்கனவே கோர்ட்டாரால் ஏற்பாடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றனவோ அந்த ஸ்தாபனங்கள் விஷயத்தில், அவைகளை ரத்து செய்விக்க போர்டாருக்கு அதிகாரம் இருக்கக்கூடாதென்று நான் எண்ணுகிறேன். யாதொரு மத சம்பந்தமான இனமுக்காக கோர்ட்டாரால் ஒரு ஏற்பாடு நிஷ்கரிஷை செய்யப்பட்டிருந்தால், அது, 71-வது பிரிவின்படி புதிய ஆக்டின் பிரகாரம் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதாகவாவது டிக்ரி செய்யப்பட்டிருக்கிறதாகவாவது கருதப்படவேண்டும்; அப்படி செய்தால் ஆக்டின் இதர நிபந்தனைகள் அவைகளுக்குப் பிரயோகப்படும்; அதாவது, போர்டாரும் தங்களுடைய மேல்விசாரணையிலிருக்கும் கோயில்களின் விஷயத்தில் கம்மிட்டியாரும் அந்த ஏற்பாட்டைத் திருத்தலாம் அல்லது ரத்து செய்யலாம். ஏற்கனவே கோர்ட்டுகளால் ஏற்பாடுகள் நிஷ்கரிஷை செய்யப்பெற்றிருக்கும் அனேக கோயில்கள் புதிய ஆக்டின்படி கம்மிட்டியின் மேல் விசாரணையிலுள்ள கோர்ட்டுகளாக ஏற்படும். ஆகவே, கோர்ட்டுகள் தலையிடுவதற்கு சிறிதும் ஹேதுவில்லை. இந்த விபரீதமான நிபந்தனை ஏற்படுத்துவது எப்படி நியாயமாகுமென்று எடுத்துக்காட்டப்படவில்லை. யாதொரு ஏற்பாட்டைத் திருத்துவது அவசியமென்று சந்தர்ப்பத்துக்கேற்றபடி போர்டாராவது கம்மிட்டியாராவது அபிப்பிராயப்படும்போதெல்லாம் அதிற்கண்ட நிபந்தனைகளைத் திருத்தும்படி அதை நிஷ்கரிஷைசெய்த கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது போர்டார் அல்லது கம்மிட்டியாருக்கு சாத்தியமாயிருக்கும்படிச் செய்வதே இந்த விஷயத்தில் போதுமானதாகுமென்று நான் நினைக்கிறேன். பொதுவாய் மதசம்பந்தமான இனங்களின் விஷயத்தில், 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 92-வது பிரிவையும் 1-ம் அத்தியாயத்தைச் சேர்ந்த 8-வது விதியையும்

முற்றிலும் ரத்துசெய்து எழுதியிருக்கும் 69-வது பகுதியைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பகுதியைக்கூட நான் அங்கீகரிக்கவில்லை. ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 92-வது பிரிவின்படி அட்வொகேட் ஜெனரலுக்குள்ள அதிகாரங்களையும் அப்படியே வைத்துவைக்கவேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன.

ஸெலெக்ட் கம்மிட்டியாரால் ஆலோசிக்கப்பட்டுவந்த தசையில் இந்த மசோதா ஆக்டிலே முக்கியாம்சத்தன்மையுடைய பல மாறுதல் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே அதில் கண்டிருக்கும் விவரங்கள் விஷயமாய்ப் பொது ஜனங்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்வதற்காக அதை இந்த ராஜதானியின் வெவ்வேறு பாஷைகளில் விஸ்தாரமாய்ப் பிரசித்தம் செய்யவேண்டும். மேலும், இது காரியத்துக்காகப் போதுமான அவகாசம் கொடுக்கவேண்டும்.

1923-ம௵ பெப்ரவரி௴ 25௳. எல். ஏ. கோவிந்தராகவ ஐயர்.

(6)

ஒரு முக்கியமான விஷயத்திலும், சில சில்லறை விஷயங்களிலும் நான் பெரும்பாலாரோடு ஒத்துப் போகமுடியாததைப் பற்றி வருந்துகிறேன். சைவ சித்தாந்த மடங்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவைகளின் பரிபாலன விஷயத்தில் சீடர்களும் மடாதிபதிகளுடன் ஏதாவதொரு வழியில் கலந்து கொள்ளவேண்டுமென்று அம்மடங்களில் பற்றுள்ள ஜனங்களில் அனேகமாய் எல்லோரும் விரும்புகிறார்கள். ஸெலெக்ட் கமிட்டியிலும் இந்த அபிப்பிராயம் 11 மெம்பர்களால் நிராகரிக்கப்பட்டபோதிலும், 9 மெம்பர்களால் ஆதரிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலோர் - இந்த விஷயத்தில் பிரத்தியேகமான முறையை அனுசரிக்கவேண்டுமென்று கேட்பது அசம்பாவிதமென்றும், சிறுபான்மையோர் பிரேரேபித்த மார்க்கத்தில் நடவடிக்கை நடத்துவதற்குத் தங்களுக்குப் போதுமான ஆதாரங்களில்லையென்றும் கருதினார்கள். சிறுபான்மையோர் தங்கள் அபிப்பிராயத்தை நன்கு எடுத்துக்கூறியும், அந்த அபிப்பிராயத்தினால், எவை விஷயமாய் பிரத்தியேகமான முறை அனுசரிக்கப்படவேண்டுமென்று கேட்கப்பட்டதோ அந்த மடங்களுக்கு ஒரு வித இடையூறே ஏற்படுமென்கிற உணர்ச்சிதான் பெரும்பாலோரின் முடிவுக்கு ஆதாரமாயிற்று. இந்த மடங்களில் பல இதுவரையிலும் நிர்வகிக்கப்பட்டு வந்த விதத்தைக் கவனிக்குமிடத்து, இவைகளின் நிர்வாக விஷயமாய் இன்னும் அதிகமாயும் கண்டிப்பாயும் மேல்விசாரணை புரிவதற்கான ஏற்பாடு செய்வது நியாயமென்றே விளங்கும். ஆனால், சிறுபான்மையோர் தாங்கள் சேர்க்கவேண்டுமென்று கோரிய விசேஷ நிபந்தனையினால் பற்றுள்ள ஜனங்களுக்கு அதிகப் படியான உரிமை ஏற்படுமென்று நினைத்தார்கள். மதம், கல்வி இவைகளை அபிவிருத்தி செய்வதற்கான ஸ்தாபனங்களாகவே இந்த மடங்கள் முதல் முதலில் ஸ்தாபிக்கப்பட்டனவென்பதும், மதப்பிரசாரம் முற்காலத்து மடாதிபதிகளில் அனேகரின் நடத்தைக்கு மூலாதாரக் கொள்கையாயிருந்ததென்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. இந்த மடங்களுக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்களும் பெரும்பாலான விஷயங்களில் அவைகள் செய்துவந்த வேலையை உத்தேசித்தும், அவை எந்த நோக்கத்துடன் வேலைசெய்து வந்தனவோ அந்த நோக்கங்களின் பொருட்டுமே கொடுக்கப்பட்டன. இனும் சொத்துக்களை மடாதிபதியின் சொந்த சொத்தெனக் கூறுவது தகாது. ஒரு விஷயத்திலாகிலும், அதாவது திருப்பனந்தாள் மடம் சம்பந்தப்பட்டவரையிலாகிலும், மடாதிபதிக்குச் சீடர்களே கிடையாது. அவரே தர்மபுர மடத்தின் சீடர்; அவர் திருப்பனந்தாள் மடாதிபதியான பிறகும் அப்படிப்பட்ட சீடராகவே இருந்து வருகிறார். அந்தந்த காலத்திலுள்ள மடாதிபதியானவர் மடத்துக்குரிய சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைத் தமது இஷ்டப்படி செலவு செய்ய பூர்ண பாத்தியதையுடையவரென்று வாதாடினவர்களின் அபிப்பிராயத்தையும் மடங்களுக்கு மசோதா ஆக்ட் பிரயோகப்படாமலே முழுவதும் நிவாரணை செய்யவேண்டுமென்ற அபிப்பிராயத்தையும் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, அவர்கள் மடாதிபதி ஒரு ட்ரஸ்டியே யாவர் என்ற சித்தாந்தத்தை பரம்பரையாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த சித்தாந்தத்தை ஒப்புக்கொண்டபின், அதை அனுசரித்து டிரஸ்டின் நன்மைக்கான சிறந்த ஏற்பாடு இன்னதென்பதையும், அதனால் பிரயோஜனமடைகிறவர்களின் பொதுவான தீர்மானம் இன்னதென்பதையும் அவர்கள் கவனிக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள். ஸ்மார்த்த மடங்களின் விஷயத்திலும், உடுப்பி மடங்களின் விஷயத்திலும் அவைகளில் பற்றுள்ளவர்கள் விசேஷ நிபந்தனைகள் எவையும் வேண்டவில்லை. ஆகவே சைவசித்தாந்த மடங்கள் விஷயமாய்க் கோரப்பட்ட விசேஷ நிபந்தனைகள் எல்லா மடங்களுக்கும் பிரயோகப்படவேண்டுமென்று சிறுபான்மையோர் கேட்கவில்லை. சைவசித்தாந்த மடங்கள விஷயத்தில் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் கொடுக்கப்பட்ட சாட்சியங்களெல்லாம், மடத்தின் பரிபாலனத்தில் சீடர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயத்தையே தழுவியிருக்கிறது. பெரும்பான்மையரோடு வோட் கொடுத்த திவான்பஹதூர் டி. என். சிவஞானம் பிள்ளை அவர்கள்கூட விசேஷ நிபந்தனை ஏற்படுத்துவதையே பொதுஜனங்கள் விரும்புவதாகவும், ஆனால் அந்த விசேஷ நிபந்தனை மற்ற மடங்களுக்கெல்லாம் பிரயோகப்படாமல் சைவமடங்களுக்கு மாத்திரம் பிரயோகப்படுவதானால் சைவர்கள் அந்த நிபந்தனை இருக்கவேண்டுமெனக் கேட்பார்களா என்று தாம் நிச்சயமாய்ச் சொல்ல முடியாதென்றும சொன்னார். செல்

வாக்குள்ள பல பிரமுகர்கள் கையொப்பமிட்டு சமீபத்தில் அனுப்பப்பட்ட ஒரு மகஜரிலிருந்து திருநெல்வேலியில்கூட விசேஷ நிபந்தனைக்கு அனுகூலமாகவே பெரும்பான்மையரின் அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிகிறது.

பிறகு தேவையானால் போர்டாரை இவ்விஷயத்தைக் கவனிக்கும்படி செய்துகொள்ளலாம் என்று வாதிப்பது பொருத்தமாகாது. இனாங்களின் பரிபாலனத்திற்காக திருப்திகரமான நிபந்தனைகள் ஏற்படுத்துவதும், அதிக செலவு பிடிக்கும் வியாஜ்ஜியங்களைத் தவிர்ப்பதுமே மசோதாவின் நோக்கமாகும். சிறுபான்மையோர் கேட்ட நிபந்தனை இல்லாதபட்சத்தில், இந்த மடங்கள் சம்பந்தப்பட்டவரையில் இந்த இரண்டு நோக்கங்களும் பூர்த்தியாக இடமிராது.

திருப்பதி மடத்திலும் சீடர்களின் பஞ்சாயத்து ஒன்று இருப்பதாகவும், முக்கிய விஷயங்களில் மகந்து ஷை பஞ்சாயத்தாருடன் கலந்து ஆலோசிப்பதாகவும் சாட்சியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும் நான் இங்கே எடுத்துச்சொல்லலாம்.

1923-ம் ௵ பெப்ரவரி ௴ 27௳. டி. ஏ. ராமலிங்கம்.

THE MADRAS HINDU RELIGIOUS ENDOWMENTS BILL, 1922 [AS AMENDED BY THE SELECT COMMITTEE].

ஸெலெக்ட் கமிட்டியாரால் திருத்தப்பட்டபடிக்குள்ள ஹிந்து மதசம்பந்தமான இனாங்களைக்குறித்த 1922-ம் ௵த்திய சென்னபட்டணத்து மசோதா ஆக்ட்.

[ஸெலெக்ட் கம்மிட்டியாரால் திருத்தப்பட்டபடி.]

BILL No. 12 OF 1922.

1922-ம் ௵த்து 12-வது மசோதா ஆக்ட்.

பீடிகை.

சில மதசம்பந்தமான இனாங்களை முன்னிலும் நன்றாய்ப் பரிபாலனம் செய்வதற்காகவும் நிர்வாகம் செய்வதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரிசெய்வதற்கு கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :— [ஓரத்தில் கண்டிருக்கும் இலக்கங்கள் பிரதம மசோதா ஆக்டின் பகுதிகளைக் குறிக்கின்றன.]

1-ம் அத்தியாயம்.

பீடிகாவிதிகள்.

பெயர்.

1. இந்த ஆக்டை, "ஹிந்து மதசம்பந்தமான இனாங்களைக் குறித்த 1923-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட்" என்று சொல்லலாம். [1.]

வியாபாகம்.

2. (1) இது - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுவதுக்கும் வியாபிப்பதுமல்லாமல், இதில் பின்னால் நிபந்தனை கண்டபடிக்கன்றி மற்றப்படி ஜைன மதசம்பந்தமான இனாங்களல்லாத ஹிந்து மதசம்பந்தமான சகல இனாங்களுக்கும் பிரயோகப்படுகிறது.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் - இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளையும் அதன்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகளில் கண்ட நிபந்தனைகளையும் ஜைன மதசம்பந்தமான இனாங்களுக்கும் விளம்பரமூலமாய் வியாபிக்கும்படிச் செய்யலாம்; மேலும், அவர்கள் அந்தப்படி வியாபிக்கச்செய்யும்போது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற நிர்ப்பந்தங்களுக்கும் திருத்தங்களுக்கும் உட்பட்டு அந்த நிபந்தனைகள் வியாபிக்குமென்று பிரசித்தம் செய்யலாம். [2.]

(3) இந்த ஆக்டில் கண்டதெதுவும் - எந்த மடம் அல்லது கோயிலுக்குச் சம்பந்தபட்ட இனாங்களிலிருந்து கிடைக்கும் வரும்படி உட்பட, அந்த மடம் அல்லது கோயிலுக்கு இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு அடுத்து முன்னதாக ஐந்து வருஷகாலத்துக்கு வருஷந்தோறும் கிடைத்துவந்த சராசரி மொத்த வரும்படி மடங்களின் விஷயத்தில் ஐந்நூறு ரூபாய்க்குக் குறைவாகவும் கோயில்களின் விஷயத்தில் இருநூற்றைம்பது ரூபாயக்குக் குறைவாகவும் இருந்ததோ அப்படிப்பட்ட யாதொரு மடம் அல்லது கோயிலுக்குப் பிரயோகப்படமாட்டாது : [40.]

ஆனால், இந்த ஆக்டிற்கண்ட எல்லா நிபந்தனைகளுமாவது அவைகளில் எவையாவது அப்படிப்பட்ட யாதொரு மடம் அல்லது கோயிலுக்குப் பிரயோகப்படுமென்று நிர்ணயித்து பிரதேச கவர்ன்மென்டார் எப்போதாகிலும் விளம்பரம் பிரசுரிக்கலாம்.

[37 (6).]

அட்வொகேட் ஜெனரலின் அதிகாரத்துக்கும் ஹைகோர்ட்டாரின் அதிகாரத்துக்கும் பாதக மேற்படாதென்பது.

3. மதசம்பந்தமான இனுங்களின் விஷயமாய் இந்தியா கவர்ன்மென்ட் ஆக்ட் 114-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அட்வொகேட் ஜெனரலவர்கள் செலுத்தக்கூடிய அல்லது ஹைகோர்ட்டார் தங்களுடைய அசல் ஸிவில் விசாரணை அதிகாரத்தைச் செலுத்துகையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை இந்த ஆக்டிலுள்ளதெதுவும் பாதிப்பதாகவோ அவைகளை எந்த விதமாயாவது குறைப்பதாகவோ கொள்ளக்கூடாது.

[3.]

சட்ட திட்டங்கள் ரத்தாவது

4. 1863-ம் வருஷத்து 20-வது ஆக்டும் 1817-ம் வருஷத்திய சென்னபட்டணத்து 7-வது ரெகுலேஷனும் ஹிந்து மதசம்பந்தமான இனுங்களுக்குப் பிரயோகப்படுகிறமட்டில் இதனால் ரத்து செய்யப்படுகின்றன.

அர்த்தம்.

5. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதம் ஒன்றும் இல்லாவிட்டால்,—

(1) 'போர்ட்' என்பது - 6-வது பிரிவின்படி அமைக்கப்பட்ட போர்ட் (சபை) என்று அர்த்தமாகும்.

[4 (1).] (2) 'கம்மிட்டி' என்பது - 16-வது பிரிவின்படி அமைக்கப்பட்ட கம்மிட்டி என்று என்று அர்த்தமாகும்.

[4 (2).] (3) 'கோர்ட்' என்பது டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜின் கோர்ட் என்றாவது எதன் பிரதேச அதிகார எல்லைகளுக்குள் ஒரு கம்மிட்டியார் விசாரணை அதிகாரம் செலுத்துகிறார்களோ அல்லது ஒரு மடமாவது கோயிலாவது இருக்கிறதோ அந்த ஸிடி ஸிவில் கோர்ட் என்றாவது அர்த்தமாகும்.

(4) 'தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணம்' என்பது - யாதொரு கம்மிட்டியின் (மெம்பர்களைத்) தெரிந்தெடுப்பவர்கள் அடங்கிய விஸ்தீர்ணம் என்று அர்த்தமாகும்.

(5) 'விலக்கப்பட்ட கோயில்' என்பது—

(a) எது 1842-ம் வருஷத்தில் முற்றிலும் ஒரு ட்ரஸ்டியின் நிர்வாகத்தில் இருந்து, அவருடைய நியமன அதிகாரம் கவர்ன்மென்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கவில்லையோ அல்லது அவர்களால் செலுத்தப்படவில்லையோ அல்லது கவர்ன்மென்டாராலாவது யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தராலாவது ஊர்ஜிதப்படுத்துவதற்கு உட்பட்டிருக்கவில்லையோ அப்படிப்பட்ட கோயில், அல்லது,

(b) 1801-ம் வருஷத்துக்குமுன் அப்படிப்பட்ட யாதொரு ட்ரஸ்டியின் ஏகதேச நிர்வாகத்திலிருந்ததுமல்லாமல் 1842-ம் வருஷத்துக்குப் பிறகும் அப்படியே இருந்துவரும் ஒரு கோயில், அல்லது,

(c) 1842-ம் வருஷத்துக்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்ட எந்தக் கோயிலின் ட்ரஸ்டி உத்தியோகத்தை உரிமை வழியாய் அடையும் பாத்தியதையானது பரம்பரையாய் ஏற்பட்டிருக்கிறதோ அல்லது அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவது விஷயமாய் அதை ஏற்படுத்தியவரால் பிரத்தியேகமான நிபந்தனை கண்டிருக்கிறதோ அந்தக் கோயில்,

என்று அர்த்தமாகும்.

[4 (4).] (6) 'பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டி' என்பது - உரிமை வழியாய்ப் பெறுவது சம்பந்தமான திட்டம் செலாவணியாய்க்கொண்டிருக்கிறவரையிலே, மதசம்பந்தமான இனுமைச் சேர்ந்த எந்த ட்ரஸ்டிக்குப்பின் அந்த உத்தியோகத்துக்கு வருபவர் பரம்பரை உரிமை மூலமாகவோ அந்தந்த காலத்திலுள்ள ட்ரஸ்டியினால் நேமகம் செய்யப்படுவது மூலமாகவோ அந்த உத்தியோகத்துக்கு வரவேண்டியிருக்கிறதோ, அல்லது அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவதைக்குறித்து மாமூலை அனுசரித்து மற்றப்படி ஒழுங்கேற்படுத்தப்பட்டிருக்கிறதோ, அல்லது அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவது விஷயமாய் பிரஸ்தாப இனும் ஏற்படுத்தியவர் பிரத்தியேகமாய் நிபந்தனை கண்டிருக்கிறாரோ அப்படிப்பட்ட யாதொரு ட்ரஸ்டி என்று அர்த்தமாகும்.

(7) 'மடம்' என்பது - ஹிந்து மதத்தை அபிவிருத்தி செயவதற்கான எந்த ஸ்தாபனத்துக்கு, பாரமார்த்திக ஊழியத்தில் அமர்ந்திருப்பதையே தமது கடமையாகக் கொண்ட அல்லது ஒரு சிஷ்ய வர்க்கத்துக்கு ஆத்துமார்த்த விஷயங்களில் தலைமை வகிக்கிற அல்லது வகிப்பதாய்ச் சுதந்தரம் கொண்டாடுகிற யாதொரு நபர் அக்ராஸ்தானத்தில் இருப்பதுமல்லாமல், அவருடைய உத்தியோகத்தை உரிமை வழியாய் அடைவதானது பிரஸ்தாப ஸ்தாபனத்தை ஏற்படுத்தியவரின் கட்டளைகளை அனுசரித்தாவது மாமூல்படி ஒழுங்குபடுத்தப்பட்டாவது இருக்கிறதோ அப்படிப்பட்ட ஸ்தாபனமென்று அர்த்தமாகும்; மேலும்,

கோயிலல்லாமல் மதசம்பந்தமான ஆராதனை நடக்கும் இதர இடங்கள் அல்லது பிரஸ்தாபஸ்தாபனத்தைச் சேர்ந்துள்ளவையாய் மதசம்பந்தமான போதனை செய்யப்படும் இடங்கள் என்பதும் அதில் அடங்கும்.

(8) 'பரம்பரையாய் ஏற்பட்டிராத டிரஸ்டி' என்பது - பரம்பரையாய் ஏற்பட்ட டிரஸ்டியாயிராத யாதொரு டிரஸ்டி என்று அர்த்தமாகும். (4 6)].

(9) 'பற்றுள்ளவராயிருக்கும் நபர்' என்பது - ஒரு மடத்தின் சிடர் என்றாயினும் யாதொரு மடத்திலாவது கோயிலிலாவது ஆராதனை நடக்கும்போதாயினும் கைங்கரியம் செய்யப்படும்போதாயினும் வந்திருக்க உரிமையுள்ளவராயிருக்கிற யாதொரு நபர் என்றாயினும், அப்படிப்பட்ட ஆராதனை அல்லது கைங்கரியம் நடக்கும்போது வழக்கமாய் வந்துகொண்டிருக்கிற அல்லது அங்கே ஏதேனும் தானம் செய்யப்படும்போது அதில் ஒரு பாகத்தைப் பெற்று வழக்கமாய்ப் பலன் அடைந்துவருகிற யாதொரு நபர் என்றாயினும் அர்த்தமாகும். [88].

(10) 'நிர்ணயிக்கப்பட்ட' என்பது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளைக் கொண்டு பிரதேச கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும். [(7)].

(11) 'மதசம்பந்தமான இனாம்' அல்லது 'இனாம்' என்பது - மடங்கள் அல்லது கோயில்களுக்குச் சொந்தமான சகல சொத்து என்றாவது மடங்கள் அல்லது கோயில்களுக்கு ஆதரவாயிருப்பதற்காகவோ அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கைங்கரியம் அல்லது தருமம் நடப்பதற்காகவோ கொடுக்கப்பட்ட அல்லது நிதி ஏற்பாடு செய்யப்பட்ட சகல சொத்து என்றாவது அர்த்தமாகும்; மேலும், மடங்கள் அல்லது கோயில்களின் வளவு என்பதும் யாதொரு மடத்தின் தலைவர் என்ற ஹோதாவில் அவருக்குக் கொடுக்கப்படும் சகல தானங்களும் காணிக்கைகளுமென்பதும் அதில் அடங்கும். [4 (8)].

(12) 'கோயில்' என்பது - அதற்கு எந்தப் பெயர் வழங்கினாலும் சரி, பொது ஜனங்களால் மதசம்பந்தமான ஆராதனைசெய்யும் இடமாக உபயோகிக்கப்பட்டும் ஹிந்து ஜனசமூகத்துக்காவது அதில் ஒரு பிரிவாருக்காவது அவர்களின் பிரயோஜனத்துக்காவது அர்ப்பணம் செய்யப்பட்டு அல்லது அவர்களால் அப்படிப்பட்ட இடமாக உரிமையை முன்னிட்டு உபயோகிக்கப்பட்டும் வருகிற யாதொரு இடம் என்று அர்த்தமாகும். [4 (3)].

(13) 'ட்ரஸ்டி' என்பது - எந்தப் பெயர் வழங்கினாலுஞ்சரி, எந்த நபரிடத்தில் யாதொரு மதசம்பந்தமான இனாமுக்குரிய காரியங்களின் நிர்வாக அதிகாரம் சங்கிரமித்திருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபர் என்று அர்த்தமாகும்; மேலும், ட்ரஸ்டியாயிருந்தால் எப்படி உத்தரவாதியாயிருப்பாரோ அப்படி உத்தரவாதியாயிருக்கும் யாதொரு நபர் என்பதும் அதில் அடங்கும். [4 (9)].

2-ம் அத்தியாயம்.

கம்மிஷனர்களின் போர்டுகள்.

போர்டின் அமைப்பு.

6. (1) பிரதேச கவர்ன்மென்டார் - விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாக,

(a) ப்ரெஸிடென்ஸி முழுவதற்குமாகவாவது அதில் குறிப்பிட்ட யாதொரு பாகத்துக்காகவாவது ஒரு போர்டை ஏற்படுத்தும்படி கட்டளையிடலாம்;

(b) அப்படிப்பட்ட யாதொரு போர்டில் இருக்கவேண்டிய மெம்பர்களின் சங்கியையாவது அது விசாரணை நடிக்கக்கூடிய பிரதேச விஸ்தீர்ணத்தையாவது மாற்றலாம்; அல்லது,

(c) அப்படிப்பட்ட யாதொரு போர்டை எடுத்துவிடலாம்:

ஆனால், ஒரே மடம் அல்லது கோயிலின் விஷயத்திலாவது அதற்குச் சம்பந்தப்பட்ட இனாங்கள் விஷயத்திலாவது பல போர்டுகளுக்கு அதிகாரம் இருக்கக்கூடாது:

மேலும், பிரதேச கவர்ன்மென்டார் இந்த உட்பிரிவின்படி பல போர்டுகளை அமைக்குமாறு கட்டளையிடவோ யாதொரு போர்டை மாற்றவோ அல்லது எடுத்துவிடவோ உத்தேசிக்கும்போது, பிறப்பிக்க உத்தேசித்திருக்கும் விளம்பரத்தின் மசோதா ஒன்றை சட்டநிரூபண சபையின் மேஜையின்மேல் வைக்கவேண்டியதுமல்லாமல், சட்டநிரூபண சபையார் தீர்மான மூலமாக ஷை மசோதாவை அங்கீகரித்தாலன்றி மற்றப்படி அந்த விளம்பரத்தை பிரசுரிக்கக்கூடாது.

(2) மாற்றப்படுகிற அல்லது எடுபட்டுப்போகிற யாதொரு போர்டின் ஆஸ்தியையும் கடன்களையும் ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்தாகிலும் மற்றப்படி ஒருவகை செய்வதைக் குறித்தாகிலும் பிரதேச கவர்ன்மென்டார் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

போர்டில் இத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்பது.

7. யாதொரு போர்டில் ஒரு ப்ரெஸிடென்டும் இரண்டு பேருக்குக் குறையாமலும் நாலு பேருக்கு மேற்படாமலும் பிரதேச கவர்ன்மென்டார் நிச்சயிக்கக்கூடிய இதர கம்மிஷனர்களும் இருக்கவேண்டும்.

கம்மிஷனர்களின் யோக்கியதாம்சங்களும் அவர்களின் நியமனமும்.

8. (1) போர்டிலுள்ள கம்மிஷனர்கள் ஹிந்து மதத்தை அவலம்பிக்கும் நபர்களாயிருக்கவேண்டும்.

(2) ப்ரெஸிடென்டானவர்—

(a) பத்து வருஷத்துக்குக் குறையாமல் இங்லண்ட் அல்லது அயர்லண்டில் பாரிஸ்டராகவாவது ஸ்காட்லண்டிலுள்ள (Faculty of Advocates) பாகல்டி ஆவ் அட்வொகேட்ஸ் என்னும் சங்கத்தைச் சேர்ந்த மெம்பராகவாவது இருக்கவேண்டும்; அல்லது

(b) ஒரு ஸபார்டினேட் ஜட்ஜ் அல்லது ஸ்மால் காஸ் கோர்ட் ஜட்ஜியின் உத்தியோகத்துக்குக் குறையாத நீதி விவகார சம்பந்தமான உத்தியோகத்தை வகித்திருந்த நபராயிருக்கவேண்டும்; அல்லது

(c) பத்து வருஷ காலத்துக்குக் குறையாமல் ஹைகோர்ட்டில் ப்ளீடராய் (நியாயவாதியாய்) இருந்திருக்கும் நபராயிருக்கவேண்டும்.

(3) (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு போர்டின் ப்ரெஸிடென்டும் இதர கம்மிஷனர்களும் பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்படவேண்டும்.

கம்மிஷனர்களின் உத்தியோக கால அளவு.

9. (1) யாதொரு போர்டின் ப்ரெஸிடென்டைத் தவிர இதர கம்மிஷனர் ஒவ்வொருவரும் - அவர் நியமிக்கப்பட்ட தேதி முதல் ஐந்து வருஷத்துக்கு உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்:

(2) ப்ரெஸிடென்டானவர் - தாம் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருஷங்களுக்கு உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்

ஆனால், அவர் - ப்ரெஸிடென்டாக நியமிக்கப்பட்ட தேதியில் கம்மிஷனராயிருந்தால், கம்மிஷனராக அவருடைய (உத்தியோக) காலம் கழிகிற வரையில் மாத்திரமே உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்.

(3) வேலையை விட்டுப்போகும் ப்ரெஸிடென்ட் அல்லது கம்மிஷனர் - மற்றப்படி யோக்கியதை பெற்றவராயிருந்தால், மறுபடியும் நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராவார்.

கம்மிஷனர்களுக்கு சம்பளம்.

10. (1) ஒவ்வொரு கம்மிஷனரும் தம்முடைய உத்தியோகத்தின் கடமைகளைச் செய்வதில் தமது முழுகாலத்தையும் கவனத்தையும் செலுத்தவேண்டும்; மேலும் அவர் - பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியைப் பெறாமல், வேறே யாதொரு தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரத்தில் பிரவர்த்திக்கக்கூடாது.

(2) ஒவ்வொரு கம்மிஷனரும் போர்டாரின் நிதிகளிலிருந்து பிரதேச கவர்ன்மென்டார் நிச்சயிக்கக்கூடிய சம்பளம் பெறவேண்டும்:

ஆனால், அப்படிப்பட்ட சம்பளமானது - ப்ரெஸிடென்ட் விஷயத்தில் மாதமொன்றுக்கு ஆயிரத்து இருநூறு ரூபாய்க்கும் வேறே யாதொரு கம்மிஷனர் விஷயத்தில் எண்ணூறு ரூபாய்க்கும் மேற்படக்கூடாது.

யோக்கியதைக் குறைவுக்காக கம்மிஷனர்களை அப்புறப்படுத்த கவர்ன்மென்டாருக்கு அதிகாரம்.

11. (1) பிரதேச கவர்ன்மென்டார் - யாதொரு கம்மிஷனரை,

(a) பிரதேச கவர்ன்மென்டாரின் அபிப்பிராயப்படி துன்மார்க்கமான நடத்தையைக் காட்டுவதாயுள்ள ஒரு குற்றத்தைச் செய்ததாக யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாலும்,

(b) அவர் புத்தி ஸ்வாதீனமில்லாதவராய்விட்டாலும் செவிட்டு ஊமையாய்விட்டாலும் தொத்திக்கொள்ளத்தக்க குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டாலும்,

(c) அவர் கடன் தீர்க்க வகையில்லாதவரென்றோ கடனிறுக்கச் சக்தியற்றவரென்றோ தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டாலும் அந்தப்படி தீர்மானிக்கப்பட்டாலும்,

(d) லஞ்சம் வாங்கினதற்காகவாவது துர்நடத்தைக்காகவாவது வேறே போதுமான காரணத்துக்காகவாவது

அவருடைய உத்தியோகத்தினின்றும் சிறிதுகாலத்துக்கு நீக்கிவைக்கலாம் அல்லது தள்ளிவிடலாம்.

(2) யாதொரு கம்மிஷனர் ஹிந்து மதத்தை அவலம்பிப்பது நின்றுபோய்விட்டால் அவர் உத்தியோகத்தை வகிப்பது நின்றுபோகும்.

போர்டின் ஆபிஸும் கூட்டங்களும்.

12. (1) ஒவ்வொரு போர்டுக்கும் வேலையை நடத்துவதற்காக பிரதேச கவர்ன்மென்டார் நிச்சயிக்கக்கூடிய ஒரு இடத்தில் ஒரு ஆபிஸ் இருக்கவேண்டும்.

(2) போர்டின் சபைகளில் போர்டின் ப்ரெஸிடென்டாவது அவர் இராவிட்டால் நியமிக்கப்பட்ட வரிசையில் ஸீனியர் (கம்மிஷனர்களுக்குள் முதன்மையானவராயிருக்கும்) கம்மிஷனராவது அக்கிராசனம் வகிக்கவேண்டும்.

(3) குறைந்தது இரண்டு கம்மிஷனர்களாவது வந்திருந்தாலன்றி யாதொரு கூட்டத்தில் எந்த வேலையையும் நடத்தக்கூடாது.

(4) கம்மிஷனர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், போர்டாரின் ஆலோசனையிலிருக்கும் விஷயம் பெரும்பான்மையான வோட்டுகளினால் தீர்மானிக்கப்படும்; மேலும், வோட்டுகள் சரிபாதியாய் பிரிந்திருந்தால், ப்ரெஸிடென்டாவது அக்கிராசனம் வகிக்கும் ஸீனியர் கம்மிஷனராவது இரண்டாவது அல்லது முடிவான வோட் கொடுக்கவேண்டும்.

போர்டின் ஊழியக்காரர்களும், அவர்களை நியமிப்பதும் தண்டிப்பதும்.

13. நிர்ணயிக்கப்படக்கூடிய மேல்விசாரணை அதிகாரத்துக்குட்பட்டு—

(a) போர்டார் - தங்களுடைய ஊழியக்காரர்களின் சங்கியையையும் உத்தியோகப் பெயரையும் தரங்களையும் சம்பளம் அல்லது வேறே பிரதிபலனைக் குறித்த வீதங்களையும் அப்போதைக்கப்போது நிச்சயிக்கலாம் ; மேலும்,

(b) போர்டின் ப்ரெஸிடென்டானவர் - அந்த ஊழியக்காரர்களை நியமிக்கவும் ட்ரான்ஸ்பர் செய்யவும் வேண்டும் ; மேலும், அந்த ஊழியக்காரர்கள் விதிகளை மீறிநடந்தாலும் ஒழுங்கு தவறாக நடந்தாலும் அஜாக்கிரதையாயிருந்தாலும் வேலைக்குத் தகுதியற்றவர்களாயிருந்தாலும் வேலையை அசட்டை செய்தாலும் தகாதபடி நடந்துகொண்டாலும் ப்ரெஸிடென்டானவர் அவர்களுக்கு அபராதம் விதிக்கலாம், உத்தியோக முதலியவைகளைக் குறைக்கலாம், அவர்களை உத்தியோகத்திலிருந்து சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கலாம், எடுத்துவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

பொதுவாக போர்டாரின் அதிகாரங்களும் அலுவல்களும்.

14. (1) யாதொரு போர்டின் அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள்ளிருக்கும் மதசம்பந்தமான சகல இனங்களை மேல்விசாரணை செய்யும் வேலையானது அப்படிப்பட்ட போர்டாரைச் சார்ந்ததாகும்.

(2) இந்த ஆக்டின் நிபந்தனைகளுக்குட்பட்டு, போர்டார் - மடங்களும் கோயில்களும் சரியாய் பராமரிக்கப்பட்டு வரும்படியும் மதசம்பந்தமான சகல இனங்களும் சரியாய்ப் பராமரிக்கப்பட்டுவரும்படியும் அவை எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டனவோ அல்லது இருக்கின்றனவோ அந்தக் காரியங்களுக்கே உபயோகப்படும்படியும் பார்த்துக்கொள்ளும்பொருட்டு நியாயமாயும் அவசியமாயுமுள்ள சகல காரியங்களையும் செய்யலாம்.

போர்டார் சகாயச்சட்டங்கள் செய்யலாமென்பது.

15. (1) போர்டார் - அடியிற்கண்ட விஷயங்களைக்குறித்து இந்த ஆக்டுக்காகிலும் வேறே யாதொரு சட்டத்துக்காகிலும் பொருத்தமற்றவையாயிராத சகாயச்சட்டங்கள் செய்யலாம் :—

(a) போர்டின் ப்ரெஸிடென்டுக்கும் கம்மிஷனர்களுக்குமாக அலுவல்களைப் பிரிப்பது ;

(b) சபைகளிலல்லாமல் வேறே எந்த விதமாய் அவர்களுடைய தீர்மானத்தைக் கண்டறியவேண்டுமென்பது ;

(c) போர்டின் கூட்டங்களில் நடவடிக்கை முறையும் வேலை நடந்தேறுவதும் ;

(d) போர்டின் அதிகாரங்களை கம்மிஷனர்களுக்குத் தனித்தனியாகவாவது கம்மிஷனர்கள் அடங்கிய கம்மிட்டிகளுக்காவது பிரித்துக்கொடுப்பது ;

(e) போர்டின் உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் ஜாமீன் ஏதாகிலும் சவதரிக்கவேண்டியிருந்தால் அந்த ஜாமீன் ;

(f) போர்டின் ஆபிஸில் வைத்திருக்கவேண்டிய புஸ்தகங்களும் கணக்குகளும் ;

(g) போர்டார், கம்மிட்டிகள், ட்ரஸ்டிகள் ஆகிய இவர்களின் நிதிகளைப் பத்திரமாய்ப் பாதுகாப்பதும் வட்டிக்குப் போட்டுவைப்பதும் ;

(h) போர்டாருக்குக் கொடுத்துக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் இன்ன நமூனைப்படியும் இன்னமாதிரியாயும் இருக்கவேண்டுமென்பது ;

(i) கம்மிட்டிகள், மதசம்பந்தமான இனங்கள், ஆகிய இவைகளின் பட்ஜெட்டுகளில் (வரவுசெலவு கணக்குகளில்) இன்ன விவரங்களைச் சேர்க்கவேண்டும் அல்லது அவைகளிலிருந்து இன்ன விவரங்களை விட்டுவிடவேண்டுமென்பது ;

(j) பொதுவாய் ஆக்டின்படிக்கான சகல நடவடிக்கைகளையும் வேலையையும் இப்படி நடத்தவேண்டுமென்பது.

(2) போர்டாரால் செய்யப்பட்ட எந்த சகாயச்சட்டமும் அல்லது அவர்கள் யாதொரு சகாயச்சட்டத்தை ரத்துசெய்ததும் அல்லது மாற்றினதும் அதைப் பிரதேச கவர்ன்மென்டார் ஊர்ஜிதம் செய்கிறவரையில் செலாவணியாகத் தொடங்காது.

(3) சகல சகாயச்சட்டங்களும் - அவை கிரமமாய் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசுரிக்கப்படவேண்டும்; அதன்மேல் அவை சட்டத்தைப்போல் செலாவணியாகும்.

3-ம் அத்தியாயம்.

கோயில் கம்மிட்டிகள்.

கம்மிட்டிகளை ஏற்படுத்துவதும் மாற்றுவதும் எடுத்துவிடுவதும்.

16. (1) பிரதேச கவர்ன்மென்டார் - விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாக,

[5.] (a) யாதொரு கோயில் அல்லது கோயில்களுக்காகவாகிலும் யாதொரு வகையைச் சேர்ந்த கோயில்களுக்காகவாகிலும் ஒரு கம்மிட்டியை அமைக்கும்படி கட்டளையிடலாம்;

(b) அப்படிப்பட்ட யாதொரு கம்மிட்டியில் இருக்கவேண்டிய மெம்பர்களின் சங்கியையையாவது அந்த கம்மிட்டியாரின் அதிகார வரம்பையாவது மாற்றலாம்; அல்லது,

(c) அப்படிப்பட்ட யாதொரு கம்மிட்டியை எடுத்துவிடலாம்:

ஆனால், அடியிற்கண்டபடி இருக்கவேண்டும்:—

(i) ஒரே கோயிலின் விஷயத்திலாவது, அதற்குச் சம்பந்தப்பட்ட இனங்கள் விஷயத்திலாவது பல கம்மிட்டிகளுக்கு அதிகாரம் இருக்கக்கூடாது.

(ii) பிரதேச கவர்ன்மென்டார் - (b) குறிப்பிட்ட பகுதியின்படியாகிலும் (c) குறிப்பிட்ட பகுதியின்படியாகிலும் விளம்பரம் பிறப்பிப்பதற்குமுன்னே, தாங்கள் அந்தப்படி செய்ய உத்தேசிப்பதற்குள்ள காரணங்களை சம்பந்தப்பட்ட போர்டார் அல்லது கம்மிட்டியாருக்குத் தெரிவித்து, உத்தேசித்தபடி ஏன் செய்யக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படி ஷை போர்ட் அல்லது கம்மிட்டியாருக்கு நியாயமான கால அளவு ஏற்படுத்திக்கொடுத்து, அவர்கள் சொல்லும் எவையேனும் சமாதானங்களைப்பற்றியும் ஆட்சேபணைகளைப் பற்றியும் யோசிக்கவேண்டும்.

(2) மாற்றப்படுகிற, எடுபட்டுப்போகிற யாதொரு கம்மிட்டியின் ஆஸ்தியையும் கடன்களையும் ட்ரான்ஸ்பர் செய்வதைக் குறித்தாகிலும் மற்றப்படி ஒருவகை செய்வதைக் குறித்தாகிலும் போர்டார் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

[6.] கம்மிட்டியில் இத்தனை பேர் இருக்கவேண்டுமென்பதும், தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் சங்கியாபரிமாணமும்.

17. (1) யாதொரு கம்மிட்டியில் எத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று பிரதேச கவர்ன்மென்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடுமோ அத்தனை மெம்பர்கள் இருக்கவேண்டும்; அந்த சங்கியையானது-ஆறுக்குக் குறையாமலும் பன்னிரண்டுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

(2) மெம்பர்களின் மொத்த சங்கியையில் இன்ன சங்கியாபரிமாணமுள்ளவர்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்று பிரதேச கவர்ன்மென்டார் விளம்பரம் செய்யலாம்:

ஆனால், அந்த சங்கியாபரிமாணமானது நாலில் மூன்று பாகத்துக்குக் குறைவாயிருக்கக்கூடாது.

(3) மற்ற மெம்பர்களை போர்டார் நியமிக்கவேண்டும்.

[7.] புதிய கம்மிட்டிகளிலுள்ள மெம்பர்களையெல்லாம் நியமிக்கவேண்டுமென்பது

18. 17-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மென்டார் - முதல் தடவையாகவாவது எடுத்துவிடப்பட்டிருக்கும் ஒரு கம்மிட்டிக்கு பர்த்தியாகவாவது ஒரு கம்மிட்டியை அமைக்கும்படி கட்டளையிட்டால், அந்தப் புதிய கம்மிட்டியிலுள்ள மெம்பர்கள் - ஒரு வருஷத்துக்கு மேற்படாமல், பிரதேச கவர்ன்மென்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய கால அளவுக்கு உத்தியோகம் வகிக்கவேண்டும்; மேலும், அந்தக் கால அளவில் ஷை மெம்பர்கள் எல்லோரும் போர்டாரால் நியமிக்கப்படுவார்கள்.

தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணங்களும் ஸர்க்கில்களும்.

19. (1) மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் காரியத்துக்காக, பிரதேச கவர்ன்மென்டார் - ஒவ்வொரு கம்மிட்டிக்காகவும் தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்தை பிரசித்தம் செய்யலாம்.

[8.] (2) யாதொரு கம்மிட்டியார் - போர்டாரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, அதற்குரிய தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்தை, ஸர்க்கில்களாக (வட்டங்களாக) பிரிக்கலாம்; மேலும், அவர்கள் - ஒவ்வொரு ஸர்க்கிலிலிருந்தும் தெரிந்தெடுக்கப்படவேண்டிய மெம்பர்களின் சங்கியையை நிச்சயிக்கலாம்.

தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா.

20. (1) தெரிந்தெடுப்பவர்களின் ஒவ்வொரு விஸ்தீர்ணத்துக்காகவும் வோட் கொடுக்க யோக்கியதை பெற்றிருக்கும் நபர்களின் பெயர்கள் கண்டுள்ள தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா ஒன்று நிர்ணயிக்கப்படக்கூடிய அதிகாரியாலும் நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாகவும் மூன்று வருஷத்துக்கு ஒரு முறை தயார்செய்து பிரசித்தஞ்செய்யப்படவேண்டும். [9.]

(2) தெரிந்தெடுப்பவர்களின் யாதொரு விஸ்தீர்ணமானது ஸர்க்கில்களாகப் பிரிக்கப்பட்டிருந்தால், தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் ஜாபிதாவை பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு ஸர்க்கிலுக்கும் ஒரு பாகத்தை ஏற்படுத்தவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி பிரசித்தஞ்செய்யப்படும் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் யாருடைய பெயர் இருக்கிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - அந்த ஜாபிதா செலாவணியாய்க்கொண்டிருக்கிறவரையில், எலெக்ஷன் நடக்கும்போது வோட் கொடுக்க அர்ஹராவார் ; மேலும், ஷை ஜாபிதாவில் யாருடைய பெயர் இல்லையோ அப்படிப்பட்ட எந்த நபரும் எலெக்ஷன் நடக்கும்போது வோட்கொடுக்கக்கூடாது.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஒரு முறை பிரசித்தஞ்செய்யப்பட்ட தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது - தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா ஒன்று மறுபடியும் பிரசித்தம செய்யப்படுகிறவரையில் செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதாம்சங்களும் யோக்கியதைக் குறைவுகளும்.

21. யாதொரு நபர் ஹிந்துமதத்தை அவலம்பிப்பவராகவும் 1-வது ஷெட்யூலைச் சேர்ந்த 1-ம் பாகத்தில் பிரஸ்தாப விஸ்தீர்ணத்தின் தெரிந்தெடுப்பவருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள யோக்கியதாம்சங்களை உடையவராகவுமிருந்து 1-வது ஷெட்யூலைச் சேர்ந்த 2-ம் பாகத்தில் விவரிக்கப்பட்டுள்ள யோக்கியதைக்குறைவுகளில் எதற்கும் உட்பட்டவராயிராமலிருந்தால், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - ஷை தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்துக்குரிய தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் தம்முடைய பெயரை சேர்க்கும்படிச் செய்ய அர்ஹராவார். [10.]

அபேட்சகர்கள், மெம்பர்கள் ஆகிய இவர்களின் யோக்கியதைக் குறைவுகள்.

22. (1) (a) சம்பந்தப்பட்ட தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்துக்குரிய (தெரிந்தெடுப்பவர்களின்) ஜாபிதாவில் யாதொரு நபரின் பெயர் இராவிட்டாலும், [11.]

(b) நேமகம் செய்யப்படும், தெரிந்தெடுக்கப்படும் அல்லது நியமிக்கப்படும் தினத்திலே அவர்—

(i) புத்தி சுவாதீனமில்லாதவராயிருந்தாலும், செவிட்டு ஊமையாயிருந்தாலும், தொத்திக்கொள்ளத்தக்க குஷ்டரோகியாயிருந்தாலும்,

(ii) கடனிறுக்கச் சக்தியற்றவராயிருந்து அப்படி சக்தியற்றவரென்று விடுதலை பெறாமலிருந்தாலும்,

(iii) ஏற்கனவே ஒரு கம்மிட்டியில் மெம்பராயிருந்து, அவருடைய உத்தியோக கால அளவானது அவர் மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதோ நியமிக்கப்படுவதோ செலாவணியாகக்கூடியதாயிருப்பதற்குமுன்னே முடிவாகாமலிருந்தாலும்,

(iv) எந்த கோயில் விஷயமாய் அந்தக் கம்மிட்டிக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்த கோயிலின் ட்ரஸ்டியாயிருந்தாலும்

அவர்-அந்தக் கம்மிட்டியின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது நியமிக்கப்படுவதற்கோ யோக்கியதை யற்றவராவார்.

(2) யாதொரு நபருக்கு எந்தக் க்ரிமினல் கோர்ட்டாராலாவது தீவாந்தர சிட்சையாகிலும் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட காலஅளவுக்குக் காவல்தண்டனையாகிலும் விதிக்கப்பட்டிருந்து (அந்த தண்டனை மாற்றப்படாமலிருந்தாலும் குற்றம் மன்னிக்கப்படாமலிருந்தாலும்), அவர் அந்த தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும்போதும் அந்த தண்டனை முடிவான தேதிமுதல் ஐந்து வருஷ காலம் வரையிலும் யாதொரு கம்மிட்டியின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது நியமிக்கப்படுவதற்கோ யோக்கியதை யற்றவராவார் :

ஆனால், அப்படிப்பட்ட தண்டனையினால் யோக்கியதைக்குறைவு ஏற்படமாட்டாதென்று பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடலாம்.

(3) யாதொரு கம்மிட்டி மெம்பர்—

(a) (2) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கிற தண்டனையை யாதொரு கோர்ட்டாரால் விதிக்கப்பெற்றாலும்,

(b) புத்தி சுவாதீனமில்லாதவராய்விட்டாலும், செவிட்டு ஊமையாய்விட்டாலும், தொத்திக்கொள்ளத்தக்க குஷ்டரோகியாயிருந்தாலும்,

(c) கடன் தீர்க்க வகையில்லாதவரென்றாவது கடனிறுக்கச் சக்தியற்றவரென்றாவது தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டாலும், அந்தப்படி தீர்மானிக்கப்பட்டாலும்,

(d) எந்த கோயிலின் விஷயமாய்க் கம்மிட்டிக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அப்படிப்பட்ட கோயிலின் ட்ரஸ்டியாய்விட்டாலும்,

(e) ஹிந்து மதத்தை அவலம்பிப்பது நின்றுபோய்விட்டாலும், அல்லது

(f) அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு கம்மிட்டியின் கூட்டங்களுக்கு வராமலிருந்தாலும் அல்லது அந்த கால அளவுக்குள் அடுத்து மூன்று கூட்டங்கள் நடத்தப்படாவிட்டால் அடுத்துவரும் மூன்று கூட்டங்களில் வராமலிருந்தாலும்,

அவர் - தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார் :

ஆனால், (a) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட தண்டனையினால் யோக்கியதைக் குறைவு ஏற்படமாட்டாதென்று பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடலாம் ;

மேலும் (f) குறிப்பிட்ட பகுதியின்படி எவர் மெம்பராயிருப்பது நின்றுபோகிறதோ அந்த நபர் அப்படி மெம்பராயிருப்பது நின்றுபோனதிலிருந்து ஒரு மாதத்துக்குள் மறுபடியும் மெம்பராக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டால், கம்மிட்டியார் அந்த விண்ணப்பம் வரப்பெற்றுக்கொண்ட பிறகு நடக்கும் அடுத்த கூட்டத்தில் அவரை மறுபடியும் உத்தியோகத்துக்கு நியமிக்கலாம் ;

அல்லாமலும், ஒரு கம்மிட்டியின் மெம்பரை அவருடைய உத்தியோக காலத்துக்குள் மூன்று தடவைக்குமேல் அப்படி மறுபடியும் மெம்பராக்கக்கூடாது.

[12 (1).] மெம்பர்களின் உத்தியோக கால அளவு.

23. வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, யாதொரு கம்மிட்டியைச் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும் - அவர் தெரிந்தெடுக்கப்பட்டதோ நியமிக்கப்பட்டதோ செலாவணியாகத் தொடங்கும் தேதிமுதல் ஐந்து வருஷ காலம் வரையில் உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்.

[13.] ப்ரெஸிடென்டும் வைஸ் ப்ரெஸிடென்டும்.

24. (1) ஒவ்வொரு கம்மிட்டியாரும் தங்களுக்குள் ஒரு ப்ரெஸிடென்டையும் ஒரு வைஸ் ப்ரெஸிடென்டையும் தெரிந்தெடுக்கவேண்டும்.

(2) யாதொரு ப்ரெஸிடென்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடென்ட் தெரிந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருஷ காலத்துக்குள் ப்ரெஸிடென்டாகவோ வைஸ் ப்ரெஸிடென்டாகவோ தாம் வகித்திருக்கும் உத்தியோகத்தை ராஜிநாமா செய்தாலும் கம்மிட்டி மெம்பராயிருப்பதனின்றும் நீங்கிவிட்டாலுமன்றி மற்றப்படி, அவர் - மேலேகண்ட மூன்று வருஷ காலம்வரையில் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

(3) ப்ரெஸிடென்ட் உத்தியோகம் காலியானால், புதிய ப்ரெஸிடென்ட் உத்தியோகம் வகிக்கத்தொடங்குகிறவரையில் வைஸ் ப்ரெஸிடென்ட் ப்ரெஸிடென்டுக்குரிய அலுவல்களைச் செய்துவரவேண்டும்.

[12 (2).] கம்மிட்டியின் ப்ரெஸிடென்டும் மெம்பர்களும் ராஜிநாமா செய்வது.

25. (1) ப்ரெஸிடென்டும் வைஸ் ப்ரெஸிடென்டுமல்லாத கம்மிட்டியின் வேறே யாதொரு மெம்பர் - ப்ரெஸிடென்டுக்கு நோடிஸ் கொடுத்து தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம் ; ப்ரெஸிடென்டானவர் கம்மிட்டிக்கு நோடிஸ் கொடுத்து தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம்.

(2) ராஜிநாமாவானது - ஒரு மெம்பர் அல்லது வைஸ் ப்ரெஸிடென்டின் விஷயத்தில் ப்ரெஸிடென்ட் நோடிஸை வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்தும் ப்ரெஸிடென்டின் விஷயத்தில், அது கம்மிட்டியார் முன் வைக்கப்படும் தேதியிலிருந்தும் அமுலுக்கு வரவேண்டும்.

[14.] காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வது.

26. (1) கம்மிட்டியின் தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு மெம்பரின் உத்தியோகத்தில் காலி நேரிடுவதன்மேல், 17-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி இதற்கு விரோதமாக உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படாத பட்சத்திலே, புதிய மெம்பர் ஒருவரை அவருக்கு முன் இருந்தவர் எப்படி தெரிந்தெடுக்கப்பட்டாரோ அதே விதமாகத் தெரிந்தெடுக்க வேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நடத்தப்பட்ட எலெக்ஷனில் எந்த மெம்பரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், மறுபடியும் எலெக்ஷன் நடத்தப்படவேண்டும்.

(3) அப்படி மறுபடியும் நடத்தப்பட்ட எலெக்ஷனில் எந்த மெம்பரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், போர்டார் - அந்த காலி ஸ்தானத்தைப் பூர்த்திசெய்வதற்காக ஒரு நபரை நியமிக்கலாம்.

(4) ப்ரெஸிடென்ட் உத்தியோகம் காலியாயிருந்து வைஸ் ப்ரெஸிடென்ட் எவரும் இராவிட்டால், கம்மிட்டியிலுள்ள எந்த மூன்று மெம்பர்களாவது - மற்ற மெம்பர்களுக்கு நியாயமான நோடிஸ் கொடுத்த பிறகு ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதற்காக ஒரு சபை கூட்டலாம்.

(5) உத்தியோகத்தை விட்டுப்போகும் ஒரு மெம்பர், ப்ரெஸிடென்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடென்ட் - மற்றப்படி யோக்கியதையுள்ளவராயிருக்கிற பட்சத்திலே, மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது மறுபடியும் நியமிக்கப்படுவதற்காவது தகுதியுள்ளவராவார்.

(6) யாதொரு மெம்பர் ப்ரெஸிடென்ட் அல்லது ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதையாகிலும் நியமிப்பதையாகிலும் நிர்ணயிக்கப்பட்டவிதமாய் அறிக்கையிட வேண்டும்.

கம்மிட்டியார் செய்யும் காரியமானது கிரமப்பிசகு காரணமாக சட்ட சம்மத மற்றதாய்ப் போய்விட மாட்டாதென்பது.

27. யாதொரு கம்மிட்டியாராவது அந்தக் கம்மிட்டியின் ப்ரெஸிடென்டாகவோ வைஸ் ப்ரெஸிடென்டாகவோ அல்லது மெம்பராகவோ பிரவர்த்திக்கிற யாதொரு நபராவது செய்யும் எந்தக் காரியமும் - அந்தக் கம்மிட்டியின் ஏற்பாட்டிலாயினும் அமைப்பிலாயினும் குறைவு இருக்கிறதென்னும் ஹேதுவினால் மாத்திரமேயாகிலும், அந்தக் கம்மிட்டியைச் சேர்ந்த யாதொரு மெம்பர் அப்படிப்பட்ட உத்தியோகத்தில் இருப்பதற்கு யோக்கியதை யற்றவராயிருந்தாரென்னும் காரணத்தினாலாகிலும், அப்படிப்பட்ட உத்தியோகத்தை வகிப்பது நின்றுபோய்விட்டதென்னும் காரணத்தினாலாகிலும், அப்படிப்பட்ட கம்மிட்டியின் ப்ரெஸிடென்ட் உத்தியோகமாவது வைஸ் ப்ரெஸிடென்ட் உத்தியோகமாவது மெம்பர் உத்தியோகமாவது எப்போதேனும் காலியாயிருக்கும் காலத்திலே அப்படிப்பட்ட காரியம் செய்யப்பட்டிருக்கிறதென்னும் ஹேதுவினாலாகிலும் சட்டசம்மதமற்றதாய்ப் போய்விடுவதாக எண்ணப்படமாட்டாது. [15.]

கம்மிட்டி சட்டப்படி சேர்ந்த சபையாவது.

28. ஒவ்வொரு கம்மிட்டியும் - பிரதேச கவர்ன்மென்டார் தீர்மானிக்கக்கூடிய பெயரால் சட்டப்படிக்குண்டான ஒரு சபையாயிருப்பதுமல்லாமல், அந்தக் கம்மிட்டியார் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்துகொண்டு பொதுவான முத்திரை உடையவர்களாயும் இருக்கவேண்டும்; மேலும், அந்தப் பெயரால் அவர்கள் பிறர்மேல் வியாஜ்ஜியம் தொடரவும் பிறரால் வியாஜ்ஜியம் தொடரப்பெறவும் வேண்டும். [16.]

கம்மிட்டியின் ஊழியக்காரர்களும் அவர்களை நியமிப்பதும் தண்டிப்பதும்.

29. (1) கம்மிட்டியார் - தங்களுடைய ஊழியக்காரர்களின் சங்கியையையும் உத்தியோகப் பெயரையும் தரங்களையும் சம்பளம் அல்லது வேறே பிரதிபலனைக் குறித்த வீதங்களையும் அப்போதைக்கப்போது நிச்சயிக்கலாம்.

(2) போர்டார் ஏற்படுத்தக்கூடிய மேல்விசாரணை அதிகாரத்துக்குட்பட்டு, கம்மிட்டியின் ப்ரெஸிடென்டானவர்-அந்த ஊழியக்காரர்களை நியமிக்கவும் ட்ரான்ஸ்பர் செய்யவும் வேண்டும்; மேலும், அந்த ஊழியக்காரர்கள் விதிகளை மீறி நடந்தாலும் ஒழுங்குதவறாக நடந்தாலும் அஜாக்கிரதையாயிருந்தாலும் வேலைக்குத் தகுதியற்றவர்களாயிருந்தாலும் வேலையை அசட்டை செய்தாலும் தகாதபடி நடந்துகொண்டாலும், ப்ரெஸிடென்டானவர் அவர்களுக்கு அபராதம் விதிக்கலாம், உத்தியோக முதலியவைகளைக் குறைக்கலாம், அவர்களை உத்தியோகத்திலிருந்து சிறிது காலம் நீக்கிவைக்கலாம், எடுத்துவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

ப்ரெஸிடென்ட் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது.

30. யாதொரு கம்மிட்டியின் தீர்மானங்களை அதன் ப்ரெஸிடென்ட் நிறைவேற்ற வேண்டும்; கம்மிட்டியின் நிர்வாக அதிகாரம் முழுவதும், இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, அவரிடத்திலேயே சங்கிரமிக்கும்.

கம்மிட்டியாருக்கு கோயில்கள் விஷயமாய்ப் பொதுவான மேல் விசாரணை அதிகாரமுண்டென்பது.

31. 14-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு கம்மிட்டியார் - எந்தக் கோயில்களுக்காக தாங்கள் ஏற்படுத்தப்படுகிறார்களோ அந்த கோயில்கள் விஷயமாகப் பொதுவாய் மேல்விசாரணை அதிகாரம் செலுத்த அர்ஹராவார்.

கம்மிட்டியார் ரெகுலேஷன்கள் ஏற்படுத்தவேண்டுமென்பது.

32. நிர்ணயிக்கப்படக்கூடிய மேல்விசாரணை அதிகாரத்துக்குட்பட்டு, யாதொரு கம்மிட்டியார் - அடியிற்கண்ட விஷயங்களைக்குறித்து இந்த ஆக்டுக்காகிலும் அதன்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகள் அல்லது சகாயச் சட்டங்களுக்காகிலும் பொருத்தமற்றவைகளாயிராத ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம்:— [36.]

(a) கம்மிட்டி சபைகூடும் காலமும் இடமும்;
(b) அந்த சபைகளைப்பற்றி நோடிஸ் கொடுக்கவேண்டிய விதம்;
(c) சபைகளில் வேலை நடந்தேறுவதற்கு இருக்கவேண்டிய க்வோரம்;

(d) ஒழுங்கைப் பாதுகாப்பதும், சபைகளில் நடவடிக்கைகளை நடத்துவதும் ப்ரெஸிடென்ட் தம்முடைய தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக செலுத் தக்கூடிய அதிகாரங்களும்.

(e) இன்ன விதமாய் சபைகளின் நடவடிக்கைகளை எழுதிவைத்து பிரசுரிக்க வேண்டுமென்பது.

(f) கம்மிட்டியின் ப்ரெஸிடென்டுக்கும், வைஸ் ப்ரெஸிடென்டுக்கும் மெம்பர் களுக்குமாக அலுவல்களைப் பிரிப்பது.

(g) கம்மிட்டி அல்லது அதன் ப்ரெஸிடென்டின் அதிகாரங்கள், கடமைகள் அல் லது அலுவலகளை—

(i) ப்ரெஸிடென்டுக்காவது வைஸ் ப்ரெஸிடென்டுக்காவது யாதொரு மெம்ப ருக்காவது

(ii) மெம்பர்கள் சேர்ந்த ஒரு ஸப் கம்மிட்டிக்காவது

பிரித்துக்கொடுப்பது.

(h) கம்மிட்டியாரிடத்தில் செலுத்தப்பட்ட பணத்துக்காக ரசீதுகள் கொடுக்கக் கூடிய நபர்கள்;

(i) மதசம்பந்தமான இனுங்களின் ட்ரஸ்டிகள் அனுப்பவேண்டிய கணக்குகளும் ரிடர்ன்களும் ரிபோர்ட்டுகளும்;

(j) சகலமான இதர விஷயங்களும்.

மடங்கள் அல்லது விலக் கப்பட்ட கோயில்களின் மேல் கம்மிட்டியார் விசா ரணையதிகாரம் செலுத் தக்கூடாதென்பது.

33. இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளின்படி ஏற் படுத்தப்பட்ட எந்தக் கம்மிட்டியாரும் - மடங்கள் அல்லது விலக்கப்பட்ட கோயில்கள் அல்லது அவைகளின் ட்ரஸ்டிகளின் மேல் எவ்வகையான விசாரணை அதிகாரமும் செலுத்த அர்ஹ ராகமாட்டார்கள்.

4-ம் அத்தியாயம்.

பொதுவாய் மதசம்பந்தமான இனுங்கள்.

இனுங்களைக் குறித்த ரெஜிஸ்டர் தயார் செய் வது.

34. (1) ஒவ்வொரு மடத்திற்காகவும் கோயிலுக்காகவும் போர்டார் ரெஜிஸ்டர் ஒன்று வைத்துவரவேண்டும்; அதில் பின்வரும் விஷயங்கள் கண்டிருக்கவேண்டும் :—

(a) இதற்குமுன் இருந்த ட்ரஸ்டிகள் இப்பொழுதிருக்கும் ட்ரஸ்டிகள் ஆகிய இவர்களின் பெயர்களும், ட்ரஸ்டி உத்தியோகத்துக்கு உரிமை வழியாய் வருவது சம்பந்த மாக மாமூல் ஏதாவதிருந்தால் அதைக் குறித்த விவரங்களும்;

(b) மடம் அல்லது கோயிலைச் சேர்ந்த சகல இனுங்களையும் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட சகல உரிமை சாஸனங்களையும் இதர தஸ்தவேஜுகளையும் குறித்த விவரங்கள்;

(c) பரிபாலனத்தைப்பற்றிய ஏற்பாட்டையும் திட்டம் அல்லது செலவு விதத் தையும் குறித்த விவரங்கள்;

(d) எந்த உத்தியோகங்களுக்கு யாதொரு சம்பளம், வரும்படி அல்லது மேலா தாயம் ஏற்படுத்தியிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல உத்தியோகங்களின் பெயர்களும், ஒவ்வொரு விஷயத்திலும் ஊழியத்தின் தன்மையும் கால அளவும், அது சம்பந்தமான திட்டங்களும்;

(e) பிரஸ்தாப ஸ்தாபனத்துக்குச் சொந்தமாயுள்ள நகைகளும், பொன்னும், வெள்ளியும், இரத்தினங்களும், சகல பாத்திரங்களும் இதர அசையும் பொருள்களும் அவைகளின் உத்தேச விலை மதிப்புடன்;

(f) போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய இதர விவரங்கள்.

(2) மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியானவர் ஷ ரெஜிஸ்டரைத் தயார் செய்து, சரிபார்த்து, அதில் கையெழுத்து போட்டு அதை, இந்த ஆக்ட் செலாவணியாகத் தொ டங்கின பிறகு போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய கால அளவுக்குள் போர்டாருக்கு அனுப்பவேண்டும்:

ஆனால், யாதொரு கம்மிட்டிக்கு எந்தக் கோயிலின்மேல் விசாரணை அதிகாரம் இருக் கிறதோ அந்தக் கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட ரெஜிஸ்டரை அந்தக் கம்மிட்டியார் மூல மாக அனுப்பவேண்டும்; அவர்கள் - தங்களுக்கு அவசியமாயிருப்பதாகத் தோற்றக்கூடிய விசாரணை செய்தான பிறகு ரெஜிஸ்டரில் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் மாறுதல் களைச் செய்யவேண்டுமென்றாகிலும், அம்சங்களை விட்டுவிடவேண்டுமென்றாகிலும் சேர்க்கவேண்டுமென்றாகிலும் சிபாரிசு செய்யலாம்.

(3) யாதொரு ட்ரஸ்டியிடமிருந்து ரெஜிஸ்டரை வரப்பெற்றுக்கொண்ட பிறகு போர்டார் - தங்களுக்கு அவசியமாகத் தோற்றும் விசாரணை செய்து, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றி உத்தரவு செய்கிறபடி அதில் மாறுதல்கள் செய்தாகிலும் எவையேனும் அம்சங்களை விட்டுவிட்டாகிலும் சேர்த்துக்கொண்டாகிலும் அந்த ரெஜிஸ்டரை அங்கீகரிக்கவேண்டுமென்று கட்டளையிடலாம்.

(4) போர்டாரால் அங்கீகரிக்கப்பட்டபடிக்குள்ள ரெஜிஸ்டரின் ஒரு நகலை ட்ரஸ்டிக்கும் சம்பந்தப்பட்ட கம்மிட்டி எதாகிலும் இருந்தால் அதற்கும் அனுப்பவேண்டும்.

ரெஜிஸ்டரை வருஷவாரியில் சரிபார்ப்பதும் அதற்கு நகல்கள் கொடுப்பதும்.

35. (1) ட்ரஸ்டியானவர் - ரெஜிஸ்டரிலுள்ள பதிவுகளை வருஷா வருஷம் பரிசோதித்துப் பார்த்து, அதில் செய்யவேண்டியதாயிருக்கும் மாறுதல்கள் அல்லது விட்டுவிடவேண்டியதாகவோ சேர்த்துக்கொள்ளவேண்டியதாகவோ இருக்கும் அம்சங்களைக் காட்டும் ஸ்டேட்மென்ட் ஒன்றை உறுதிமொழிகூறி போர்டாரால் அங்கீகரிக்கப்படுவதற்காக அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

(2) போர்டாரும் கம்மிட்டியார் எவர்களாவது இருந்தால் அவர்களும் - ஷை ஸ்டேட்மென்டை வரப்பெற்றுக்கொள்வதன்மேல், தங்களுக்கு அவசியமாயிருப்பதாகத் தோற்றுகிற விசாரணை செய்யலாம் ; மேலும், போர்டார் - ரெஜிஸ்டரில் இன்ன மாறுதல்கள் செய்யவேண்டுமென்றோ அல்லது இன்ன அம்சங்களை விட்டுவிடவேண்டுமென்றோ அல்லது சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றோ உத்தரவு மூலமாய்க் கட்டளையிடலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான உத்தரவுக்கு நகல் ஒன்றை ட்ரஸ்டிக்கும் சம்பந்தப்பட்ட கம்மிட்டி எதாவதிருந்தால் அதன் ப்ரெஸிடென்டுக்கும் அனுப்பவேண்டும் : அதன்மேல் அவர் - தாம் வைத்துவரும் ரெஜிஸ்டரின் பிரதியில் போர்டாரால் உத்தரவு செய்யப்பட்ட மாறுதல்களைச் செய்யவேண்டும் அல்லது அம்சங்களை விட்டுவிடவேண்டும் அல்லது சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(4) போர்டின் ப்ரெஸிடென்டானவர் - போர்டாரால் நிச்சயிக்கப்படக்கூடிய கட்டணங்கள் செலுத்தப்படுவதன்மேல், அந்த ரெஜிஸ்டருக்கு நகல்களாவது அதிலுள்ள எவையேனும் பதிவுகளுக்கு நகல்களாவது கொடுக்கலாம். ஷை நகல்களில் ப்ரெஸிடென்டானவர் - 1872-ம் வருஷத்திய இந்து தேசத்து சாட்சிய ஆக்ட் 76-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாய் ஸெர்டிபை செய்யவேண்டும்.

ட்ரஸ்டி ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்பதும் அவருடைய அதிகாரங்களும்.

36. (1) மதசம்பந்தமான ஒவ்வொரு இனாமின் ட்ரஸ்டியும் - ட்ரஸ்டில் கண்டிருக்கும் ஷரத்துகளையும் பிரஸ்தாப ஸ்தாபனத்தின் மாமூலையும் யோக்கியதைபெற்றிருக்கும் யாதொரு அதிகாரசபையார் இது விஷயமாய்ப் பிறப்பிக்கக்கூடிய சட்டசம்மதமான சகல கட்டளைகளையும் அனுசரித்தும் சாதாரண அறிவுடைய யாதொரு நபர் ஷை இனாமுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்கள், நிதிகள் அல்லது சொத்துக்கள் தம் சொந்தமானவையாயிருந்தால் அவைகள் விஷயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பிரவர்த்திப்பாரோ அவ்வளவு ஜாக்கிரதையாகவும் ஷை விஷயங்களைப் பரிபாலனம் செய்யவும் ஷை நிதிகளையும் சொத்தையும் உபயோகிக்கவும் கடமைப்பட்டவராவார்.

(2) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு யாதொரு ட்ரஸ்டியானவர் - மதசம்பந்தமான இனாமை முன்யோசனையுடனும் பிரயோஜனகரமாகவும் நிர்வாகம் செய்வது சம்பந்தமாய் சகல அதிகாரங்களைச் செலுத்தவும், தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் சரியாய் நிறைவேற்றுவதற்கு அவசியமாயுள்ள சகல காரியங்களைச் செய்யவும் பாத்தியதையுடையவராவார்.

மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டிக்கு குறிப்பிட்ட இனாங்களின் ட்ரஸ்டிகளின் மேலுள்ள அதிகாரம்.

37. யாதொரு மடம் அல்லது கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கைங்கரியம் அல்லது தருமம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட இனாங்களின் ட்ரஸ்டியானவர் - அந்த மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியின் பொது மேற்பார்வைக்குட்பட்டு அந்த கைங்கரியம் அல்லது தருமம் செய்யவேண்டியதுமல்லாமல், அவரால் பிறப்பிக்கப்படும் சட்டசம்மதமான சகல கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளவும்வேண்டும்.

பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டிகள்.

38. (1) யாதொரு மதசம்பந்தமான இனாமின் பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டி உத்தியோகத்தில் காலி ஏற்பட்டு அந்த உத்தியோகத்துக்கு உரிமை வழியாய் வருவது சம்பந்தமாய் விவாதம் ஏற்பட்டாலும், [20.]

அப்படிப்பட்ட காலி ஸ்தானத்தை உடனே பூர்த்திசெய்யக்கூடாவிட்டாலும்,

பரம்பரையாய் எற்பட்ட- யாதொரு ட்ரஸ்டியானவர் மைனராயிருந்து, ட்ரஸ்டியாகப் பிரவர்த்திக்கத் தகுதியடையவரும் விருப்பமுடையவருமான சட்டப்பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட கார்டியன் ஒருவர் அவருக்கு இராமற் போனாலும், அப்படிப்பட்ட கார்டியனைப் பிரவர்த்திக்க அர்ஹராயுள்ள நபர் இன்னாரென்பதைக் குறித்து விவாதம் ஏற்பட்டாலும்,

பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் புத்திசுவாதீனமற்றவராய்விடுவது காரணமாகவோ வேறேவிதமான தேகஅசக்தத்தின் காரணமாகவோ ட்ரஸ்டியின் அலுவல்களைச் செய்ய சக்தியில்லாதவராயிருந்தாலும்,

மடங்கள், விலக்கப்பட்ட கோயில்கள் ஆகிய இவைகளின் விஷயத்தில் போர்டாரும், இதர கோயில்களின் விஷயத்தில் கம்மிட்டியாரும் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த உத்தியோகத்துக்கு வேறொரு ட்ரஸ்டி உரிமைவழியாய் வருகிறவரையிலாவது ஷை ட்ரஸ்டியின் அசமர்த்ததை நிவர்த்தியாகிறவரையிலாவது அந்த இனமின் ட்ரஸ்டியினுடைய அலுவல்களைச் செய்ய தகுந்த நபர் ஒருவரை நியமிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நபரை நியமிக்கும்போது, போர்டார் அல்லது கம்மிட்டியார் - மடங்களின் விஷயத்தில் சிடர்கள் எவராவது இருந்தால் அவர்களுடைய சுதந்தரங்களையும், கோயில்களின் விஷயத்தில் உரிமைவழியாய் வருவதற்கு பாத்தியதை பெற்றிருக்கும் குடும்பத்தார் எவராகிலும் இருந்தால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் சுதந்தரங்களையும் கிரமமாய் கவனிக்கவேண்டும்.

(3) அந்தப்படி நியமிக்கப்பட்ட நபர் - ஷை இனம் சம்பந்தமாக யாதொரு ட்ரஸ்டி செலுத்தக்கூடிய சகல அதிகாரங்களையும் செலுத்த அர்ஹராவார்.

[25.] கணக்குகள் வைத்துவருவதும், ஆடிடடர்களை (தணிக்கை உத்தியோகஸ்தர்களை) நியமிப்பதும்.

39. (1) யாதொரு போர்டாரும், கம்மிட்டியாரும் மதசம்பந்தமான இனமின் யாதொரு ட்ரஸ்டியும் - வரவு செலவுகளுக்கு ஒழுங்காய்க் கணக்குகள் வைத்துவரவேண்டும்.

[27 (1).] (2) அந்தக் கணக்குகளைப் பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட ஆடிட்டர்கள் (தணிக்கை உத்தியோகஸ்தர்கள்) வருஷாவருஷமாகிலும், மற்றப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய காலம் விட்டுவிட்டாகிலும் தணிக்கை செய்யவேண்டும். அந்தப்படி நியமிக்கப்பட்ட ஆடிட்டர்கள் - இந்தியன் பினல் கோட் 21-வது பிரிவின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாக எண்ணப்படுவார்கள்.

தணிக்கை ரிபோர்ட்டுகளை இன்னாருக்கு அனுப்பவேண்டுமென்பது.

40. தணிக்கை வேலை முடிந்த பிறகு ஆடிட்டரானவர்—

(a) யாதொரு போர்டின் கணக்குகள் விஷயத்தில் பிரதேச கவர்ன்மென்டாருக்கும்,

(b) யாதொரு கம்மிட்டி, மடம் அல்லது விலக்கப்பட்ட கோயிலின் விஷயத்தில் போர்டாருக்கும்,

(c) எந்தக் கோயில்களின்மேல் கம்மிட்டியாருக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்தக் கோயில்களின் கணக்குகள் விஷயத்தில் அந்தக் கம்மிட்டியாருக்கும்

ஒரு ரிபோர்ட்டை அனுப்பவேண்டும்.

தணிக்கை ரிபோர்ட்டில் இன்ன விஷயங்கள் அடங்கியிருக்கவேண்டுமென்பது.

41. (1) ஆடிட்டரின் ரிபோர்ட்டில் இதர விஷயங்களுடன்கூட, ஒழுங்கு பிசகாகவாவது சட்ட விரோதமாகவாவது அக்கிரமமாகவாவது பணச்செலவுசெய்த சகல விஷயங்களும், அல்லது பிரஸ்தாப ஸ்தாபனத்துக்குச் சேரவேண்டிய பணத்தொகைகள் அல்லது வேறே சொத்தை வசூலிக்கத் தவறிப்போன சகல விஷயங்களும், அல்லது அசட்டையாயிருந்ததனாலாகிலும் துர்நடத்தை காரணமாகவாகிலும் பிரஸ்தாப ஸ்தாபனத்தின் பணம் அல்லது இதர சொத்து நஷ்டமாயிருக்கும் அல்லது சேதப்பட்டிருக்கும் சகல விஷயங்களும் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

(2) ஆடிட்டரானவர் - குறித்த யாதொரு மதசம்பந்தமான இனம் சம்பந்தமாய் போர்டார் அல்லது கம்மிட்டியார் கேட்கக்கூடிய வேறே யாதொரு விஷயத்தைப்பற்றிகூட ரிபோர்ட் செய்யவேண்டும்.

தணிக்கை செய்வதற்கு பிடிக்கும் செலவை மதசம்பந்தமான இனமிலிருந்து வசூலிக்கவேண்டுமென்பது.

42. (1) மடங்கள், விலக்கப்பட்ட கோயில்கள் ஆகிய இவைகளின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும் செலவு போர்டாரின் நிதிகளிலிருந்தும், இதர கோயில்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும் செலவு கம்மிட்டியின் நிதிகளிலிருந்தும் செலுத்தப்படவேண்டும்.

(2) பிரதேச கவர்ன்மென்டாரால் நிஷ்கரிஷை செய்யப்பட்ட கால அளவுக்குள் ஷை தொகை செலுத்தப்படாவிட்டால், பிரதேச கவர்ன்மென்டார் - அது நிலத்தீர்வை பாக்கியாய் இருந்தால் எப்படியோ அப்படியே அதை வசூலிக்கலாம்.

5 - வது அத்தியாயம்.

கோயில்கள்.

இந்த அத்தியாயம் விலக்கப்பட்ட கோயில்களுக்குப் பிரயோகப்படமாட்டாது.

43. இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகள் விலக்கப்பட்ட கோயில்களுக்காவது அவைகளின் ட்ரஸ்டிகளுக்காவது பிரயோகப்படமாட்டா.

ட்ரஸ்டி ஹிந்துவாயிருக்க வேண்டுமென்பது.

44. எந்த நபரும் - ஹிந்துமதத்தை அவலம்பிப்பவராயிருந்தாலன்றி மற்றபபடி யாதொரு கோயிலின் ட்ரஸ்டி உத்தியோகத்துக்கு உரிமை வழியாய் வரவுங்கூடாது, நியமிக்கப்படவுங் கூடாது.

பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகளும் அவர்களின் சங்கியையும் அவர்களை நியமிப்பதும்.

45. (1) யாதொரு கோயிலுககுப் பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகள் இத்தனை பேர் இருக்கவேண்டுமென்று கம்மிட்டியார் நிஷ்கரிஷை செய்யவேணடும; ஆனால், அந்த சங்கியையானது மூனறுக்கு மேற்படக்கூடாது. [21 (1).]

(2) பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகளைக் கம்மிட்டியார் நியமிக்கவேண்டும்; மேலும், அந்தடபடி நியமிக்கும்போது, கம்மிட்டியார் - மதசம்பந்தமான எந்த வகுப்பாரின் பிரயோஜனத்துக்காக சம்பந்தப்பட்ட கோயில் மூக்கியமாய் பராமரிக்கப்பட்டு வருகிறதோ அந்த வகுப்பைச் சேர்ந்த நபர்களின் சுதந்தரங்களைக் கிரமமாய் கவனிக்க வேண்டும்.

(3) பரம்பரையாய் ஏற்பட்டிராத யாதொரு ட்ரஸ்டியானவர் - அவரை நியமித்திருக்கும உத்தரவின் தேதியிலிருந்து ஐந்து வருஷ காலத்துக்குள் கம்மிட்டியார் அவரை நீக்கிவிட்டாலும் தள்ளிவிட்டாலும், அவருடைய ராஜிநாமாவை அவர்கள் அங்கீகரித்தாலும் அல்லது அவர் ட்ரஸ்டியாயிருப்பதனின்றும் வேறே விதமாய் நீங்கிவிட்டாலுமன்றி மற்றப்படி, மேலேகண்ட ஐந்து வருஷ காலம்வரையில் உத்தியோகம் வகிக்கவேண்டும். [21 (2).]

(4) இந்த ஆக்ட் வழங்கத்தொடங்கும் தேதியில் சட்டப்படி உத்தியோகம் வகித்து வரும் பரம்பரையாய் ஏற்பட்டிராத ஒவ்வொரு ட்ரஸ்டியும் - அந்தத் தேதியில் இந்த ஆக்டின்படி கிரமமாய் நியமிக்கப்பட்ட ட்ரஸ்டியாயிருப்பதாக எண்ணைப்படுவார்; ஆனால், அவர் - அந்தத் தேதிமுதல் மூன்று வருஷகாலம் வரையில் மாத்திரமே உத்தியோகம் வகிக்க அர்ஹராவார். [21 (4).]

ட்ரஸ்டி கமிட்டியாரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப் படிந்து நடந்துகொள்ள வேண்டுமென்பது.

46. யாதொரு கோயிலின் ட்ரஸ்டியானவர் - இந்த ஆக்டுகளின்படி போர்டாலாகிலும், கம்மிட்டியாலாகிலும் அதன் ப்ரெஸிடென்டாகிலும் பிறப்பிக்கப்படும் சட்டப்படிக்கான சகல உத்தரவுகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளக் கடமைபட்டவராவார்.

ட்ரஸ்டிகளை நீக்கிவிடுவதும் தள்ளிவிடுவதும்.

47. (1) யாதொரு கோயிலின் ட்ரஸ்டியானவர்— [22.]

(a) பட்ஜெட்டுகளையாவது கணக்குகளையாவது ரிபோர்ட்டுகளையாவது ரிடர்ன்களையாவது பிடிவாதமாய் அனுப்பாமலிருந்தாலும்,

(b) போர்டாலாவது கம்மிட்டியாலாவது அதன் ப்ரெஸிடென்டாலாவது பிறப்பிக்கப்பட்ட சட்டப்படிக்கான உத்தரவுகளின்படி வேண்டுமென்றே நடந்துகொள்ளாமலிருந்தாலும்,

(c) ட்ரஸ்டுகளின் விஷயமாய்ச் செய்யக்கூடாத யாதொரு காரியத்தைச் செய்தாலும் செய்யக்கூடிய யாதொரு காரியத்தைத் தகாதவிதமாய்ச் செய்தாலும், நம்பிக்கை துரோகம் செய்தாலும், செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் அசட்டையாயிருந்தாலும்,

(d) எந்த கோயிலுக்குத் தாம் ட்ரஸ்டியாயிருக்கிறாரோ அந்த கோயிலுக்குரிய சொத்துக்களை எவ்விதமாகவேனும் அக்கிரமமாய் உபயோகித்துக்கொண்டாலும் தகாதபடி அவைகள் விஷயத்தில் பிரவர்த்தித்தாலும்,

(e) யாதொரு ட்ரஸ்டியின் அலுவல்களைச் செய்வதற்கு அவரைத் தகுதியற்றவராக்கும்படி அவருக்கு புத்திசுவாதீனமிராமற்போனாலும் வேறே தேக அசக்தம் ஏற்பட்டாலும்

கம்மிட்டியார் அவரைச் சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கலாம், நீக்கிவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

(2) கம்மிட்டியார் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நடவடிக்கை நடத்த உத்தேசித்தால், அவர்கள்-சம்பந்தப்பட்ட ட்ரஸ்டியின்பேரில் சாட்டப்படும் குற்றங்களை எழுதி, அவர் அவைகள் விஷயமாய் சமாதானம் சொல்லிக்கொள்வதற்கும் தமக்கு விரோதமாயுள்ள சாக்ஷியத்தைப் பரீக்ஷை செய்வதற்கும் தமக்கு அனுகூலமாயுள்ள சாக்ஷியத்தைக் கொண்டுவருவதற்கும் அவருக்கு அவகாசம கொடுக்கவேண்டும்; மேலும், அவர்கள் - அந்தப்படி சாட்டப்பட்ட குற்றங்கள் பைசலாகிற வரையிலே அந்த ட்ரஸ்டியைச் சிறிது காலத்துக்கு வேலையிலிருந்து நீக்கிவைக்கலாம். அந்த ட்ரஸ்டியின்பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களையும் அவர் சொல்லிக்கொள்ளும் சமாதானத்தையும், ஒவ்வொரு குற்றத்தின் விஷயமாக கம்மிட்டியாருடைய தீர்மானத்தையும் அதற்குள்ள காரணங்களையும் (ஷை ட்ரஸ்டியை)ச் சிறிது காலத்துக்கு நீக்கிவைப்பதற்கான, நீக்கிவிடுவதற்கான அல்லது தள்ளிவிடுவதற்கான உத்தரவில் கண்டெழுதவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கப்பட்ட அல்லது நீக்கிவிடப்பட்ட அல்லது தள்ளிவிடப்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் - தம்மைச் சிறிது காலத்துக்கு நீக்கிவைத்த அல்லது நீக்கிவிட்ட அல்லது தள்ளிவிட்ட உத்தரவின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள்ளாக அப்படிப்பட்ட உத்தரவின்மேல் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

ஆனால், பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் - போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்வதற்கு பர்த்தியாக அதே கால அளவுக்குள் கம்மிட்டியாரின் உத்தரவைத் திருத்தவேண்டுமென்றாவது ரத்து செய்யவேண்டுமென்றாவது கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

(4) இந்தப் பிரிவின்படி கம்மிட்டியாரால் செய்யப்பட்ட உத்தரவின்மேல் (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அப்பீல் செய்துகொள்ளப்படாத பட்சத்திலாகிலும் விண்ணப்பம் செய்துகொள்ளப்படாதபட்சத்திலாகிலும் அந்த உத்தரவு முடிவானதாகும்; மேலும், அந்தப்படி அப்பீல் செய்துகொள்ளப்படுகிறபட்சத்திலே அல்லது விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிறபட்சத்திலே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி போர்டாரின் அல்லது கோர்ட்டாரின் உத்தரவு முடிவானதாகும்.

ட்ரஸ்டிகளின் யோக்கியதைக் குறைவு.

[23.] 48. (1) பரம்பரையாய் ஏற்பட்டிராத யாதொரு ட்ரஸ்டியானவர்—

(a) 22-வது பிரிவிற்கண்ட (2) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரிக்கப்பட்டு அதில் கண்ட விலக்கு நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிற தண்டனை யாதொரு கோர்ட்டாரால் விதிக்கப்பெற்றிருந்தாலும்,

(b) கடன் தீர்க்க வகையில்லாதவரென்றோ கடனிறுக்கச் சக்தியற்றவரென்றோ தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டாலும் அந்தப்படி தீர்மானிக்கப்பட்டாலும்,

(c) ஹிந்து மதத்தை அவலம்பிப்பது நின்றுபோய்விட்டாலும்,

அவர் - தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார்.

(2) பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் ஹிந்து மதத்தை அவலம்பித்து நின்றுபோய்விட்டால், அவர் - தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார்.

(3) பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியிலாவது (b) அடையாளமிட்ட பகுதியிலாவது சொல்லியிருக்கிற எந்த யோக்கியதைக் குறைவுகளுக்காகிலும் உள்ளாகும்பட்சத்தில் கம்மிட்டியார் - அவரை நீக்கிவிட்டு, அந்த ட்ரஸ்டியின் அசமர்த்ததை அவருக்கு இராமல் நின்றுபோகிறவரையிலாகிலும் அந்த உத்தியோகத்துக்கு உரிமை வழியாய் வேறொரு ட்ரஸ்டி வருகிறவரையிலாகிலும், கோயிலைப் பரிபாலனம் செய்வதற்குத் தகுந்த ஒரு நபரை நியமிக்கலாம்.

(4) விவாதம் அல்லது சந்தேகம் ஏற்படுகிற விஷயங்களிலே, போர்டார் - இந்தப் பிரிவின்படி யாதொரு ட்ரஸ்டி தகுதியற்றவரா என்னும் விஷயத்தைத் தீர்மானிக்கவேண்டும்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

மதசம்பந்தமான ஆராதனை நடக்கும் இடங்களில் பரிமாண செலவு திட்டங்களை நிஷ்கரிஷை செய்வது.

[29 (1).] 49. (1) யாதொரு கோயிலின் ட்ரஸ்டியானவர் - அந்தக் கோயிலின் திட்டம் அல்லது செலவு வீதத்தையும் அந்த கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட வெவ்வேறு காரியங்களுக்காவது சடங்குகளுக்காவது பங்கீடு செய்யப்படவேண்டிய தொகைகளை அல்லது ஷை கோயிலின் வரும்படி அல்லது இதர சொத்தானது ஷை காரியங்களுக்காகிலும் சடங்குகளுக்காகிலும் எந்த சங்கியாபரிமாணங்களின்படி உபயோகிக்கப்படலாமோ அந்த சங்கியாபரிமாணங்களையும் நிஷ்கரிஷை செய்வதற்காக அப்போதைக்கப்போது கம்மிட்டியாருக்குப் பிரேரேபணைகள் அனுப்பலாம்.

(2) ட்ரஸ்டியானவர் - அந்த பிரேரேபணைகளைக் கோயிலிலும் கம்மிட்டியார் கட்டளையிடக்கூடிய வேறே மாதிரியாகவும், பிரசித்தம் செய்யவேண்டும்; அந்தப்படி பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் பற்றுள்ள யாதொரு நபரிடமிருந்து யாதொரு ஆட்சேபணை அல்லது அபிப்பிராயக் குறிப்பு வரப்பெற்றுக்கொள்ளப்பட்டால் கம்மிட்டியார் அதைப்பற்றி ஆலோசிப்பார்களென்று கண்டு ஒரு நோடிஸையும் ஷை பிரேரேபணைகளுடன்கூட பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட காலஅளவு கழிந்துபோன பிறகு கம்மிட்டியார் - வரப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய ஆட்சேபணைகள் அல்லது அபிப்பிராயக் குறிப்புகளைப்பற்றி ஆலோசித்து, ஷை பிரேரேபணைகளின்மேல் தங்களுக்குத் தகுதியாய்த் தோற்றுகிற உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

(4) ட்ரஸ்டியாவது பற்றுள்ள யாதொரு நபராவது - நிர்ணயிக்கப்படக்கூடிய கால அளவுக்குள், (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கம்மிட்டியாரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்மேல் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

(5) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கம்மிட்டியார் செய்த உத்தரவின்மேல் அப்பீல் ஒன்றும் செய்துகொள்ளப்படாவிட்டால், அந்த உத்தரவு முடிவானதாகும் ; மேலும், அப்பீல் செய்துகொள்ளப்பட்டால் போர்டாரின் உத்தரவு முடிவானதாகும்.

கோயில்களின் பட்ஜெட்டுகள்.

50. (1) ஒவ்வொரு கோயிலின் ட்ரஸ்டியும் - ஒவ்வொரு வருஷத்திலும், அடுத்த வருஷத்தில் ஷை கோயில், அதனுடன் சம்பந்தப்பட்ட இனுங்கள் ஆகிய இவைகளின் உத்தேசமான வரவுசெலவுகளைக் காட்டும் பட்ஜெட் (வரவுசெலவு திட்டக்கணக்கு) ஒன்றை போர்டார் உத்தரவு செய்யக்கூடிய தேதிக்கு முன்பாகவும் நமூனாப்படியும் அனுப்பவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு பட்ஜெட்டிலும் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் திட்டம் அல்லது செலவு வீதத்துக்காகவும், கடன்கள் விஷயமாயுள்ள சகல பொறுப்புகளையும் கிரமமாய் நிறைவேற்றுவதற்காகவும் போதுமானபடி ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

(3) பட்ஜெட்டை வரப்பெற்றுக்கொண்ட பிறகு போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்குள் கம்மிட்டியார் - பட்ஜெட்டில் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய மாறுதல்கள் செய்யவேண்டுமென்றாவது எவையேனும் அம்சங்களை விட்டுவிடவேண்டுமென்றாவது சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றாவது ட்ரஸ்டிக்குக் கட்டளையிடலாம்.

(4) ட்ரஸ்டியானவர் - போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்குள், (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கம்மிட்டியார் செய்த உத்தரவின்மேல் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம் ; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

விலக்கப்பட்டிராத கோயில்களுக்கு ஏற்பாடுகள் நிஷ்கரிஷை செய்வது.

51. (1) எந்தக் கோயிலின்மேல் யாதொரு கம்மிட்டிக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்தக் கோயிலைச் சேர்ந்த இனுங்கள் நன்றாய்ப் பரிபாலனம் செய்யப்படும்பொருட்டு பரிபாலன சம்பந்தமான ஏற்பாடு ஒன்று நிஷ்கரிஷை செய்யப்படவேண்டுமென்று போர்டார் தெரிந்து திருப்தியடைந்தால், அந்த போர்டார் - ட்ரஸ்டியுடனும் கம்மிட்டியுடனும் பற்றுள்ள நபர்களுடனும் நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய்க் கலந்து ஆலோசித்தபிறகு, அந்தக் கோயிலைச் சேர்ந்த இனுங்களுக்காக ஏற்பாடு ஒன்றை உத்தரவு மூலமாய் நிஷ்கரிஷை செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு ஏற்பாட்டை நிஷ்கரிஷை செய்து போர்டார் பிறப்பிக்கும் உத்தரவானது முடிவானதாகும் ; மேலும், அந்தப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாடானது கம்மிட்டியாரையும் ட்ரஸ்டியையும் பற்றுள்ள சகல நபர்களையும் கட்டுப்படுத்துவதாகும் :

ஆனால், ட்ரஸ்டியாவது பற்றுள்ள யாதொரு நபராவது - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி போர்டார் செய்த உத்தரவின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள், ஷை ஏற்பாட்டைத் திருத்தவேண்டுமென்றாகிலும் சரிப்படுத்தவேண்டுமென்றாகிலும் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம் ; மேலும், அந்தப்படி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் கோர்ட்டாரின் உத்தரவை அனுசரித்து திருத்தப்பட்டபடிக்குள்ள ஏற்பாடானது முடிவானதாயிருப்பதுமல்லாமல், சம்பந்தப்பட்ட நபர்களைக் கட்டுப்படுத்துவதுமாகும்.

(3) இந்தப் பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு ஏற்பாட்டை, பிரதம ஏற்பாட்டை நிஷ்கரிஷை செய்வதற்காகவும் (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட விலக்கு நிபந்தனைக்குட்பட்டும் (1) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாக எந்தக் காலத்திலாகிலும் போர்டார் திருத்தலாம் அல்லது ரத்து செய்யலாம்.

கோயில்களின் ஊழியக்காரர்களை நியமிப்பதும் அவர்களுக்கு தண்டனை விதிப்பதும்.

52. (1) யாதொரு கோயிலைச் சேர்ந்த அல்லது கோயிலிலிருந்து யாதொரு வரும்படி அல்லது மேலாதாயம் பெறுகிற சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் ட்ரஸ்டியின் மேல்விசாரணைக்கு உட்பட்டு அவருடைய உத்தரவுகளின்படி நடந்துகொள்ளவேண்டும் ; மேலும், ட்ரஸ்டியானவர் - அவர்களில் எவரையாகிலும் நம்பிக்கை துரோகம், அசமர்த்ததை, சட்டப்படிக்கான உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாமற் போவது, அலுவலை அசட்டை செய்வது, துர்நடத்தை அல்லது போதுமான வேறே காரணத்துக்காக சிறிது காலத்துக்கு வேலையிலிருந்து நீக்கிவைக்கலாம், நீக்கிவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தண்டனை விதிக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது - போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்

குள் கம்மிட்டியாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம் ; பரம்பரையாய் ஏற்பட்டிராத உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரின் விஷயத்தில் கம்மிட்டியாரின் தீர்மானம் முடிவானதாகும்.

(3) பரம்பரையாய் ஏற்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் - போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்குள், (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்துகொண்ட அப்பீலில் கம்மிட்டியார் பிறப்பித்த உத்தரவின்மேல் போர்டாருக்குப் பின்னும் அப்பீல் செய்துகொள்ளலாம் ; அதன்மேல், போர்டாரின் தீர்மானம் முடிவானதாகும்.

உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களில் காலி ஸ்தானங்கள் ஏற்பட்டால் அவைகளைப் பூர்த்தி செய்வது.

53. (1) யாதொரு கோயிலைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களுக்குள் ஏற்படும் காலி ஸ்தானங்களை, அந்த உத்தியோகமாவது ஊழியமாவது பரம்பரையாய் ஏற்பட்டிராததாயிருக்கும் பட்சத்தில், ட்ரஸ்டி பூர்த்திசெய்ய வேண்டும்.

(2) உத்தியோகம் அல்லது ஊழியம் பரம்பரையாய் ஏற்பட்டதாயிருக்கும் விஷயங்களில, உரிமை வழியில் அடுத்தவராயிருப்பவர் உரிமை வழியாய் அந்த உத்தியோகம் அல்லது ஊழியத்துக்கு வர பாத்தியதை யுடையவராவார் :

ஆனால், அப்படிப்பட்ட உத்தியோகம் அல்லது ஊழியத்துக்கு உரிமை வழியாய் வரும் பாத்தியதையைக் குறித்து விவாதம் ஏற்பட்டிருக்கிறபட்சத்திலாவது, அப்படிப்பட்ட காலி ஸ்தானத்தை உடனே பூர்த்தி செய்யமுடியாத விஷயங்களிலாவது, உரிமை வழியாய் வர அர்ஹராயிருக்கும் நபர் மைனராயிருந்து அவருக்கு சட்டப்படிக்கான கார்டியனைப் பிரவர்த்திக்கத் தகுந்தவராகவும் விருப்பமுடையவராகவுமுள்ள சட்டப்படிக்கான கார்டியன் ஒருவர் இராமலிருக்கும் விஷயங்களிலாவது, பரம்பரையான உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது புத்திசுவாதீனமற்றவராயிருப்பது காரணமாகவோ வேறே தேக அசக்தம் காரணமாகவோ அந்த உத்தியோகத்துக்குரிய அலுவல்களைச் செய்யவாயினும் ஊழியத்தைச் செய்யவாயினும் சக்தியற்றவராயிருக்கும் விஷயங்களிலாவது, ட்ரஸ்டியானவர் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த உத்தியோகம் அல்லது ஊழியத்துக்கு உரிமை வழியாய் வேறொரு நபர் வருகிறவரையிலாவது, ஷை உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரின் அசமாத்ததை நீங்கிப்போகிறவரையிலாவது ஷை உத்தியோகத்துக்குரிய அலுவல்களைச் செய்யவோ ஊழியத்தைச் செய்யவோ தகுந்த நபர் ஒருவரை நியமிக்கலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட விலக்கு நிபந்தனையின்படி யாதொரு நபரை நியமிக்கும்போது, ட்ரஸ்டியானவர் - உரிமை வழியாய் வர பாத்தியதையுடைய குடும்பத்தார் எவராகிலுமிருந்தால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் சுதந்தரங்களைக் கிரமமாய் கவனிக்கவேண்டும்.

இனாமானது சொத்தின் மேல் ஏற்பட்ட பொறுப்பாயிருக்கும்போது ஊழியம் செய்யும்படி இன்ன விதமாய் நிர்ப்பந்தப்படுத்தலாமென்பது.

54. கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட தருமத்தையாவது கைங்கரியத்தையாவது நடத்துவதற்கான யாதொரு இனாமானது சொத்தின்மேல் ஏற்பட்ட பொறுப்பாக மாத்திரமேயிருந்து, அந்த தருமம் அல்லது கைங்கரியத்தைச் செய்ய உத்தரவாதியாயிருக்கும நபா அதைக் கிரமப்படி நடத்தத் தவறிப்போகும் பட்சத்திலே, அந்தக் கோயிலின் ட்ரஸ்டியானவர் - மற்றப்படி அந்த தருமத்தையாகிலும் கைங்கரியத்தையாகிலும் நடத்துவிப்பதற்குப் பிடித்த அல்லது வெகுசாய்ப் பிடிக்கக்கூடிய செலவுகளைச் செலுத்தும்படி பிரஸ்தாப இனாம் எந்த சொத்தின்மேல் ஏற்பட்ட பொறுப்பாயிருக்கிறதோ அந்த சொத்தை சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபரைக் கேட்கலாம். ட்ரஸ்டி கேட்கிறபடி அந்த நபர் தொகை செலுத்தத் தவறிப்போகும்பட்சத்தில், ட்ரஸ்டி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல கோர்ட்டார் - ஷை தொகையை வசூலிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கவேண்டும் ; மேலும், அந்த உத்தரவை அது கோர்ட்டாரின் டிக்ரியாயிருந்தால் எப்படியோ அப்படியே நிறைவேற்றலாம்.

[26.]

ட்ரஸ்டிகள் கம்மிட்டியாருக்குக் கணக்குகள் முதலியவை சவதரிக்கவேண்டுமென்பது.

55. ஒவ்வொரு கோயிலின் ட்ரஸ்டியும் - தம்முடைய விசாரணையிலுள்ள கோயிலின் பரிபாலன சம்பந்தமாக கம்மிட்டியார் கேட்கக்கூடிய கணக்குகளையாவது ரிடர்ன்களையாவது ரிபோர்ட்டுகளையாவது இதர சமாசாரங்களையாவது அவர்கள் கேட்கக்கூடிய காலத்திலும் நமூனாப்படியும் சவதரிக்கவேண்டும்.

[28.]

ப்ரெஸிடென்டாவது மெம்பராவது இனங்களைப் பார்வையிடுவது.

56. கம்மிட்டியின் ப்ரெஸிடென்டாவது அவரால் இது விஷயத்துக்கென்றே நியமித்து அனுப்பப்பட்ட யாதொரு மெம்பராவது - யாதொரு கோயிலுக்குச் சொந்தமாயிருக்கும் சகல அசையும் பொருளையும் அசையாப் பொருளையும் அந்த கோயிலுக்குச் சம்பந்தப்பட்டவைகளாயுள்ள சகல ரெகார்டுகளையும் கடிதங்களையும் நக்ஷாக்களையும் கணக்குகளையும் இதர தஸ்தவேஜுகளையும் பார்வையிடலாம் ; மேலும், அந்தக் கோயிலின் ட்ரஸ்டியும் அவரிடத்தில் வேலையாயிருக்கும் சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் அந்த ப்ரெஸிடென்ட் அல்லது மெம்பருக்கு அவசியமாயிருக்கக்கூடிய உதவி செய்யவேண்டும்.

6-ம் அத்தியாயம்.

மடங்களும் விலக்கப்பட்ட கோயில்களும்.

பட்ஜெட்டுகளையும் வருஷாந்தர கணக்குகளையும் அனுப்புவது.

57. ஒவ்வொரு மடத்தின் ட்ரஸ்டியும் விலக்கப்பட்ட கோயிலின் ட்ரஸ்டியும் ஒவ்வொரு வருஷத்திலும் போர்டார் உத்தரவு செய்யக்கூடிய தேதிக்கு முன்பாகவும் நமூனாப்படியும்—

(a) அடுத்த வருஷத்தின் உத்தேச வரவு செலவுகளைக் காட்டும் பட்ஜெட் ஒன்றையும்,

(b) முந்திய வருஷத்தின் வாஸ்தவமான வரவு செலவுகளைக் காட்டும் ஸ்டேட்மென்ட் ஒன்றையும்

போர்டாருக்கு அனுப்பவேண்டும்.

இனாம் சரிவர நிர்வாகம் செய்யப்படாவிட்டால் போர்டார் விசாரணை செய்யலாமென்பது.

58. யாதொரு மடம் அல்லது விலக்கப்பட்ட கோயிலின் ட்ரஸ்டியானவர் அந்த மடம் அல்லது கோயிலைச் சேர்ந்த இனாங்களை சரிவர நிர்வாகம்செய்து வரவில்லையென்றாகிலும், அக்கிரமமான காரியங்களுக்காக அவைகளைச் செலவழித்துக் கொண்டிருக்கிறாரென்றாகிலும் பராதீனப் படுத்திக் கொண்டிருக்கிறாரென்றாகிலும், போர்டார் நம்புவதற்கு முகாந்தரமிருந்தாலும், ஷை இனாங்களைச் சரியாய்ப் பரிபாலனம் செய்யும்பொருட்டு பரிபாலன ஏற்பாடு ஒன்று தயார் செய்யப்படவேண்டுமென்று கண்டு பற்றுள்ள நபர்கள் இருபது பேருக்குக் குறையாமல் விண்ணப்பம் செய்துகொண்டாலும், போர்டார்-விசாரணை நடத்தலாம் ; அந்த விசாரணை நிர்ணயிக்கப்படக்கூடியபடி நடத்தப் படவேண்டும்.

மடங்களுக்காகவும் விலக்கப்பட்ட கோயில்களுக்காகவும் ஏற்பாடுகள் தயார் செய்வது.

59. (1) 58-வது பிரிவில் கண்டபடி விசாரணை நடத்தின பிறகு, சம்பந்தப்பட்ட ட்ரஸ்டி ஷை மடம் அல்லது கோயிலைச் சேர்ந்த இனாங்களைச் சரிவர நிர்வாகம் செய்து வரவில்லையென்றாவது, அவைகளை அக்கிரமமான காரியங்களுக்காக செலவழித்திருக்கிறாரென்றாவது பராதீனப்படுத்தியிருக்கிறாரென்றாவது, ஷை இனாங்கள் சரியாய்ப் பரிபாலனம் செய்யப்படும்பொருட்டு பரிபாலன ஏற்பாடு ஒன்று தயார் செய்யப்படவேண்டுமென்றாவது போர்டார் தெரிந்து திருப்தியடைந்தால், போர்டார் - நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் ஷை ட்ரஸ்டியுடனும் பற்றுள்ள நபர்களுடனும் கலந்து ஆலோசித்த பிறகு, ஷை மடம் அல்லது கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட இனாங்களைப் பரிபாலனம் பண்ணுவதற்காக ஏற்பாடு ஒன்றைத் தயார்செய்து, இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாய் அதைக் கோர்ட்டில் தாக்கல் செய்விக்க வேண்டும்.

(2) யாதொரு மடத்துக்கு சம்பந்தப்பட்ட இனாங்களின் பரிபாலனத்துக்காக ஏற்பாடு ஒன்றைத் தயார் செய்யும்போது, அப்படிப்பட்ட இனாங்களைப் பரிபாலனம் பண்ணும் காரியத்தில் யாதொரு நபரைச் சேர்ப்பதாகிலும் அந்தப் பரிபாலனத்தில் சம்பந்தப்படும்படியோ அல்லது அதற்கு உதவி செய்யும்படியோ யாதொரு பிரத்தியேகமான சபையை ஏற்படுத்துவதாகிலும் அவசியமென்று போர்டாருக்குத் தோற்றினால், அப்படிப்பட்ட சபையில் ஷை மடத்தில் பற்றுள்ள நபர்கள் மாத்திரமேயிருக்கவேண்டும்.

கோர்ட்டார் யாதொரு ஏற்பாட்டை டிக்ரிமூலமாய்த் தீர்மானிக்கவேண்டுமென்பது.

60. (1) 59-வது பிரிவின்படி தயார் செய்யப்பட்ட ஏற்பாட்டில் போர்டின் ப்ரெஸிடென்ட் கிரமமாய்க் கையெழுத்து போட்டு, அதை போர்டாரால் நடத்தப்பட்ட விசாரணை சம்பந்தமான ரெகார்டுகள் சகிதமாகக் கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டும்.

(2) ஷை கோர்ட்டார் - அப்படிப்பட்ட ஏற்பாடு தாக்கல் செய்யப்பட்டதைப்பற்றி பற்றுள்ள சகல நபர்களுக்கும் தங்களுக்கு அவசியமாயிருப்பதாகத் தோற்றுகிறபடி நோடிஸ் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட நோடிஸ் பிரசித்தம் செய்யப்பட்ட அல்லது சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் பற்றுள்ள யாதொரு நபரிடமிருந்து எழுத்துமூலமாய் யாதொரு ஆட்சேபனை அல்லது அபிப்பிராயக் குறிப்பு வரப்பெற்றுக்கொள்ளப்பட்டால், கோர்ட்டார் அந்த ஆட்சேபனை அல்லது அபிப்பிராயக் குறிப்பைப்பற்றி ஆலோசனை செய்வார்களென்று ஷை நோடிஸில் கண்டிருக்க வேண்டும்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் நோடிஸில் நிஷ்கரிஷை செய்யப்பட்ட கால அளவு கழிந்துபோன பிறகு, கோர்ட்டார் - வரப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய ஆட்சேபனைகளையும் அபிப்பிராயக் குறிப்புகளையும்பற்றி ஆலோசித்து, போர்டாரால் தயார் செய்யப்பட்ட ஏற்பாட்டைத் திருத்தலாம் அல்லது சரிப்படுத்தலாம் ; அதன்மேல், திருத்தப்பட்ட அல்லது சரிப்படுத்தப்பட்ட படிக்குள்ள ஏற்பாட்டில் கண்டிருக்கும் ஷரத்துகளை அனுசரித்து டிக்ரி ஒன்று பிறப்பிக்கப்படவேண்டும்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான டிக்ரியின்மேல் அப்பீல் எதுவும் செய்துகொள்ளலாகாது.

ஏற்பாடுகளை மாற்றுவது.

61. 60-வது பிரிவின்படி டிக்ரி செய்யப்பட்டிருக்கும் யாதொரு பரிபாலன ஏற்பாட்டை போர்டார் கேட்டுக்கொள்வதன்மேல் கோர்ட்டார் எப்போதாகிலும் திருத்தலாம் அல்லது ரத்து செய்யலாம்.

7-ம் அத்தியாயம்.

இனாம் நிதிகளை உபயோகிப்பது.

யாத்திரைக்காரர்கள் ஆராதனை செய்பவர்கள் ஆகிய இவர்களின் தேகாரோக்கியம் முதலியவைகளுக்காக பணம் செலவழிக்க ட்ரஸ்டிக்கு அதிகாரம் உண்டென்பது.

62. யாதொரு மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியானவர் - அந்த மடம் அல்லது 'கோயிலு' க்குப் போகும் சீடர்கள், யாத்திரைக்காரர்கள் அல்லது ஆராதனை செய்பவர்களின் தேகாரோக்கியத்துக்காவது பந்தோபஸ்துக்காவது சௌகரியத்துக்காவது ஹானி உண்டாகாதபடி காப்பதற்காக ஏற்பாடுகள் செய்யத் தம்முடைய விசாரணையிலிருக்கும் இனாங்களைச் சேர்ந்த நிதியிலிருந்து செலவு செய்யலாம் :

ஆனால், மடங்கள், விலக்கப்பட்ட கோயில்கள் ஆகிய இவைகளின் விஷயத்திலே போர்டாரும், இதர கோயில்களின் விஷயத்திலே கம்மிட்டியாரும் - இந்தப் பிரிவின்படி ட்ரஸ்டி தமக்கு யுக்தமாகத் தோற்றும் காரியங்களைச் செய்யும் விஷயத்தில் நிர்ப்பந்தம் ஏற்படுத்தலாம் ; மேலும், தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய மேல்விசாரணைக்குட்பட்டு ட்ரஸ்டி அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும்படி ஏற்பாடு செய்யலாம்.

[33 (3).]

மிகுதியாயிருக்கும் பணத்தை உபயோகிப்பது.

63. (1) யாதொரு மதசம்பந்தமான இனாம் எந்தக் காரியத்துக்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்தக் காரியமானது ஆதியிலிருந்து நிறைவேற முடியாததாயிருந்தாலும் பிற்பாடு நிறைவேற முடியாததாய்ப் போய்விட்டாலும், ஷை இனாம் பிரதமத்தில் எந்தக் காரியங்களுக்காக உத்தேசிக்கப்பட்டதோ அந்தக் காரியங்களை நிறைவேற்றுவதற்கான சாதனங்கள் தவறிப் போய்விட்டாலும் இராமற்போய்விட்டாலும், ஷை இனாம் எந்தக் காரியங்களுக்காக உத்தேசிக்கப்பட்டதோ அந்தக் காரியங்களைப் போதுமானமட்டில் நிறைவேற்றின பிறகு, அந்த காரியங்களுக்கு வேண்டியிராத ஒரு தொகை மிகுதியாய் நின்றாலும், சம்பந்தப்பட்ட மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியாவது போர்டாராவது - சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை இனாம் பணத்தையாகிலும் மிகுதி ஏதாவது கிடைக்குமானால் அந்தத் தொகையையாகிலும் ஷை மடம் அல்லது கோயிலின் நோக்கங்களுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத மதசம்பந்தமான அல்லது வித்தியாசம்பந்தமான அல்லது வேறே தருமசம்பந்தமான காரியங்களுக்கு உபயோகிக்க அனுமதி வேண்டுமென்று கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

(2) அந்தப்படி உபயோகிப்பது நியாயமாகுமென்று கோர்ட்டார் தெரிந்து திருப்தியடையும்பட்சத்தில், அப்படிப்பட்ட தொகை அல்லது மிகுதித் தொகையில் இன்ன பாகத்தை ஷை மடம் அல்லது கோயிலுக்கு சேமநிதியாய் வைத்துக்கொள்ளவேண்டுமென்று நிச்சயிக்கவும், மீதியைத் தங்களால் அங்கீகரிக்கப்பட்ட மதசம்பந்தமான அல்லது வித்தியாசம்பந்தமான அல்லது வேறே தருமசம்பந்தமான யாதொரு காரியத்துக்கு உபயோகிக்கும்படி கட்டளையிடவும் ஷை கோர்டாருக்கு அதிகாரமுண்டு.

(3) சம்பந்தப்பட்ட மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியாவது பற்றுள்ள யாதொரு நபராவது விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கோர்ட்டார் - இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை அப்போதைக்கப்போது புனர் விமரிசை செய்யலாம், ரத்துசெய்யலாம் அல்லது மாற்றலாம்.

8-ம் அத்தியாயம்.

திரவிய விஷயம்.

போர்டாராகிலும் கம்மிட்டியாராகிலும் சட்டசம்பந்தமான நடவடிக்கைகளுக்காக செய்த செலவை இனாமிலிருந்து வசூலிப்பது.

64. யாதொரு மதசம்பந்தமான இனாம் விஷயமாய் நடத்தப்பட்ட சட்டசம்பந்தமான நடவடிக்கைகளில் போர்டாராகிலும் கம்மிட்டியாராகிலும் ஒரு கக்ஷியாயிருந்தால் அந்த நடவடிக்கைகள் விஷயமாய்ப் பிடித்த கோர்ட் செலவு முதலிய சகல செலவுகளும் - 70-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அந்த இனாம் நிதியிலிருந்து செலுத்தப்படத்தக்கவையாகும்.

[30.]

போர்டுகளுக்கும் கம்மிட்டிகளுக்கும் இனாம்களிலிருந்து வருஷவாரி சகாயத் தொகை கொடுப்பது.

65. (1) போர்டாருக்கு ஏற்படும் செலவுகளின் நிமித்தம் ஒவ்வொரு மடமும் கோயிலும் - அதன் வரும்படியில் நூற்றுக்கு ஒன்றரைக்கு மேற்படாமல் போர்டார் நிச்சயிக்கக்கூடியபடி சகாயத்தொகையைப் பிரதி வருஷமும் செலுத்திவரவேண்டும்.

(2) விலக்கப்பட்ட கோயிலல்லாத ஒவ்வொரு கோயிலும் - கம்மிட்டியாருக்கு ஏற்படும் செலவுகளின் நிமித்தம், அதன் வரும்படியில் நூற்றுக்கு ஒன்றரைக்கு மேற்படாமல் போர்டாருடைய அங்கீகாரத்தைப் பெற்று கம்மிட்டியார் நிச்சயிக்கக்கூடிய சகாயத்தொகையைப் பிரதிவருஷமும் செலுத்திவரவேண்டும்.

(3) எந்த மதசம்பந்தமான இனுங்களின் பரிபாலனமானது இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும்போது 1908-ம்௵த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 92-வது பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு ஏற்பாட்டுக்கு உட்பட்டிருக்கிறதோ அந்த மதசம்பந்தமான இனுங்கள் - அப்படிப்பட்ட ஏற்பாட்டில் இதற்கு விரோதமாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்தப் பிரிவின்படி சகாயத்தொகை செலுத்துவதற்கு உட்பட்டவையாகும்.

சகாயத்தொகைகள் செலவுகள் முதலியவை விதிப்பதும் அவைகளை வசூலிப்பதும்.

66. (1) 64-வது, 65-வது பிரிவுகளின்படி செலுத்தப்படத்தக்க கோர்ட் செலவு முதலிய செலவுகளும் சகாயத் தொகைகளும் ஒவ்வொரு மடம் கோயில் ஆகிய இவைகளின் ட்ரஸ்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் விதிக்கப்படவேண்டியதல்லாமல் அவருக்கு நோடிஸ்மூலமாய்த் தெரிவிக்கப்படவும்வேண்டும்.

(2) ஷை நோடிஸ் வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் அப்படிப்பட்ட ட்ரஸ்டியானவர் - அந்தப்படி கேட்கப்பட்ட தொகையை சந்தர்ப்பத்துக் கேற்றபடி போர்ட் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்டினிடத்திலாகிலும் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபரிடத்திலாகிலும் செலுத்தவேண்டும்; மேலும், அவர் அந்தப்படி செய்யத் தவறிப்போகும்பட்சத்தில், ஷை போர்ட் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்ட் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கோர்ட்டார் - ஷை தொகைக்காக சம்பந்தப்பட்ட மதசம்பந்தமான இனுமின்மேல் கோர்ட்டாரால் யாதொரு டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே அந்தத் தொகையை வசூலிக்கவேண்டும்:

ஆனுல், நியாயமான காரணமிருந்தால், கோர்ட்டார் - ஷை தொகை வசூலிப்பதைத் தள்ளிவைக்கலாம் அல்லது அதைத் தவணைகளாகச் செலுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

9-ம் அத்தியாயம்.

பலவகைப்பட்டவை.

விதிகள் செய்யப் பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

67. (1) இந்த ஆக்டிற்கண்ட சகல காரியங்களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக இந்த ஆக்டுக்குப் பொருத்தமற்றதாயிராமல் பிரதேச கவர்ன்மென்டார் விதிகள் செய்யலாம். [34.]

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு பாதகமில்லாமலும், அடியிற்கண்ட விஷயங்களுக்காக விதிகள் செய்ய அவர்களுக்கு அதிகாரமுண்டு:—

(a) இந்த ஆக்டில் நிர்ணயிக்கப்படவேண்டுமென்று வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிற அல்லது நிர்ணயிக்கப்படுவதற்கு வெளிப்படையாய் அனுமதி கொடுத்திருக்கிற சகல விஷயங்களும்;

(b) தெரிந்தெடுப்பவர்களை ரெஜிஸ்டர் செய்வது;

(c) அபேக்ஷகர்களின் நேமகங்கள், எலெக்ஷன் நடக்கும் காலம், வோட்டுகளைப் பதியும் விதம், கணக்கெடுக்கும் விதம், எலெக்ஷன் முடிவுகளை நிர்ணயித்துப் பிரசித்தம் செய்வது ஆகிய இவைகள்;

(d) எலெக்ஷன் சம்பந்தமான விசாரணைகள் நடத்துவதும், எலெக்ஷன் விஷயமாய் ஏற்படும் விவாதங்களை முடிவுசெய்வதும்,

(e) விசாரணைகள் நடத்தவும், சாக்ஷிகளுக்கு ஸம்மன் அனுப்பி அவர்களைப் பரிசீலனை செய்யவும், தஸ்தவேஜுகளை ஹாஜர்ப்படுத்தும்படி நிர்ப்பந்திக்கவும் யாதொரு போர்டின் ப்ரெஸிடென்டுக்கும் கம்மிஷனர்களுக்கும் உள்ள அதிகாரங்கள்;

(f) யாதொரு போர்டின் ப்ரெஸிடென்டுக்கும் கம்மிஷனர்களுக்கும் ரஜாவும், ரஜாவர்த்தனையும் பிரயாணவர்த்தனையும் கொடுப்பதும், பொதுவாய் அப்படிப்பட்ட ப்ரெஸிடென்ட் கம்மிஷனர்கள் ஆகிய இவர்களின் ஊழிய சம்பந்தமான திட்டங்களும்;

(g) போர்டுகள் அனுப்பவேண்டிய பட்ஜெட்டுகள், ரிபோர்ட்டுகள், கணக்குகள், ரிடர்ன்கள் அல்லது இதர சங்கதி;

(h) யாதொரு போர்டின் உத்தியோகஸ்தர்கள் ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களுக்கு இருக்கவேண்டிய யோக்கியதாம்சங்களும், அவர்களுக்கு ரஜாவும், ரஜாவர்த்தனை

யும் பிரயாண வர்த்தனையும் கொடுப்பதும், அவர்களுக்காக ப்ராவிடென்ட் பண்ட் என்னும் எதிர்கால சகாய நிதிகள் ஏற்படுத்துவதும், பொதுவாய் அவர்களுடைய ஊழிய சம்பந்தமான திட்டங்களும் ;

(i) ஆடிட்டர்களாகிய சிப்பந்தியை ஏற்படுத்துவதும், அவர்களுடைய சம்பளங்களும் வர்த்தனைகளும், அந்த சிப்பந்தியின் மேல்விசாரணையும், அவர்களுக்கும் போர்டுகளுக்கும் கமமிட்டிகளுக்கும் ட்ரஸ்டிகளுக்குமுள்ள சம்பந்தங்களும், பொதுவாய் ஆடிட்டர்களின் ஊழிய சம்பந்தமான திட்டங்களும் ;

(j) தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும் செலவைக் கணக்கிடுவதும், அதை போர்டுகளுக்குள்ளும் கம்மிட்டிகளுக்குள்ளும் பங்கிடுசெய்வதும் ;

(k) போர்டுகள், கம்மிட்டிகள் அல்லது இனுங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து பிரசித்தம் செய்யவேண்டிய விதமும், தணிக்கை செய்யவேண்டிய காலமும் இடமும், ஆடிட்டருடைய ரிபோர்ட்டின் நமூனுவும் அதில் அடங்கியிருக்கவேண்டிய விஷயங்களும் ;

(l) யாதொரு மதசம்பந்தமான இனுமின் வரும்படியைக் கணக்கிடும் முறை.

[35.] **ஷெட்யூல்களை மாற்றுவது.**

68. (1) பிரதேச கவர்ன்மென்டார் - இந்த ஆக்டிற்கண்ட ஷெட்யூல்களில் எதையாவது மாற்றுவதற்காகிலும் அதனுடன் யாதொன்றைச் சேர்ப்பதற்காகிலும் அதை ரத்து செய்வதற்காகிலும் விதிகள் செய்யலாம்.

(2) மேலேகண்ட ஷெட்யூல்களில் எதையாவது இந்த ஆக்டில் குறிப்பிட்டிருக்கும் இடங்களில் அந்தக் குறிப்புகளெல்லாம் - (1) அடையாளமிட்ட உட்பிரிவினுல் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைக் கொண்டு திருத்தப்பட்டபடியுள்ள ஷெட்யூல்களைக் குறிப்பதாக அவைகளுக்கு அர்த்தம் பண்ணவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி செய்ய உத்தேசிக்கும் விதிகளின் மசோதாவை சட்ட நிருபண சபை முன் வைக்கவேண்டும் ; மேலும், சட்டநிருபண சபையார் அந்த மசோதாவைத் திருத்தாமல் அல்லது அதனுடன் யாதொன்றைச் சேர்க்காமலாவது, திருத்தங்களுடன் அல்லது அதனுடன் எவைகளையேனும் சேர்த்தாவது தீர்மானமூலமாய் அங்கீகரித்தாலொழிய ஷை விதிகளைச் செய்யக்கூடாது ; ஆனுல், அப்படிப்பட்ட அங்கீகாரம் கொடுக்கப்படுவதன்மேல், அந்த விதிகளை அவை அங்கீகரிக்கப்பட்டிருக்கும் மாதிரியாய்ச் செய்யலாம் ; மேலும், அப்படிப்பட்ட விதிகளை அந்தப்படி செய்ததும் அவைகளைப் பிரசித்தம் செய்யவேண்டும் ; அதற்குப் பிறகு அவை பூர்த்தியாய்ச் செலாவணியாகி அமுலுக்கு வரும்.

[37.] **வியாஜ்ஜியங்கள்.**

69. (1) யாதொரு மடம் அல்லது கோயிலின்மேல் விசாரணை அதிகாரமுடைய போர்டாராவது கம்மிட்டியாராவது அதில் பற்றுள்ளவராய் போர்டாரின் அனுமதியைப்பெற்று யாதொரு நபராவது—

(a) யாதொரு மடம் அல்லது விலக்கப்பட்ட கோயிலின் ட்ரஸ்டியை நியமிப்பதற்காக அல்லது நீக்கிவிடுவதற்காக, அல்லது

(b) ஒரு ட்ரஸ்டியிடத்தில் யாதொரு சொத்து சங்கிரமிக்கும்படிச் செய்வதற்காக, அல்லது

(c) இனுமாய் ஏற்படுத்தப்பட்ட சொத்தில் அல்லது அதிலுள்ள உரிமையில் எவ்வளவு பாகம் இனுமின் குறித்த யாதொரு நோக்கத்துக்காக பங்கிடுசெய்யப்படவேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்காக, அல்லது

(d) பிரஸ்தாப கேஸின் தன்மையை நோக்கும்போது பின்னும் செய்யவேண்டியிருக்கிற அல்லது வேறே வகையான பரிகாரம் செய்துகொடுப்பதற்காக,

டிக்ரி பெறும்பொருட்டு கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரலாம்.

(2) 1908-ம்௵த்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 92-வது, 93-வது பிரிவுகளும் அதன் முதல் ஷெட்யூலைச் சேர்ந்த 1-ம் அதிகாரத்திற்கண்ட 8-வது விதியும் - மதசம்பந்தமான யாதொரு இனுமின் பரிபாலன அல்லது நிர்வாக சம்பந்தமாய் எவ்வித பரிகாரமாகிலும் செய்துகொடுக்கவேண்டுமென்று கொண்டுவரும் யாதொரு வியாஜ்ஜியத்துக்குப் பிரயோகப்படமாட்டா ; மேலும், அப்படிப்பட்ட பரிபாலனம் அல்லது நிர்வாக சம்பந்தமாய்க் கொண்டுவரப்படும் எந்த வியாஜ்ஜியத்தையும் இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படிக்கன்றி மற்றப்படி தொடரலாகாது.

வியாஜ்ஜியச் செலவுகளையாவது விண்ணப்பச் செலவுகளையாவது இனும் நிதியிலிருந்து கொடுக்கும்படி கோர்ட்டார் உத்தரவுசெய்யலாமென்பது.

70. இந்த ஆக்டின்படிக்கான யாதொரு வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்துக்காகவும் அல்லது அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்திலாகிலும் விண்ணப்பத்தின்மேலாகிலும் பிறப்பிக்கப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவின்மேல் செய்துகொள்ளும் யாதொரு அப்பீலுக்காகவும் அவைகள் சம்பந்தமாகவும் பிடிக்கும் கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாகவும் கட்டணங்கள் விஷயமாகவும் கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமாகத்தோற்றுகிறபடி உத்தரவு செய்யவேண்

டும்; அந்தக் கோர்ட்டார் - ஷை செலவுகள் கட்டணங்கள் முழுவதுமாயினும் அவைகளில் எவ்வளவு பாகமாயினும் சம்பந்தப்பட்ட இனாமைச் சேர்ந்த சொத்து அல்லது வரும்படியிலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்றாவது, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் மாதிரியாயும் நபர்களாலும் கொடுக்கப்படவேண்டுமென்றும் செலுத்தப்படவேண்டுமென்றுமாவது கட்டளையிடலாம்.

இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும்போது ஏற்பாடுகளின்படி நிர்வாகம் செய்யப்பட்டுவரும் இனாங்கள்.

71. யாதொரு மதசம்பந்தமான இனாமானது இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும் காலத்தில் 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 92-வது பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாட்டை அனுசரித்து நிர்வாகம் செய்யப்பட்டுவரும்பக்ஷத்தில், அந்த ஏற்பாடானது - இந்த ஆக்டில் அந்த ஏற்பாட்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் எவையேனும் நிபந்தனைகள் ஏற்பட்டிருந்தும் பாதகமில்லாமலே, இந்த ஆக்டின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட அல்லது டிக்ரி செய்யப்பட்ட ஏற்பாடாகக் கருதப்படும்; மேலும், அப்படிப்பட்ட ஏற்பாட்டை இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கும் மாதிரியாகத் திருத்தலாம் அல்லது ரத்து செய்யலாம்.

அசையாப் பொருளாகவுள்ள ட்ரஸ்ட் சொத்தைப் பராதீனப்படுத்துவது.

72. (1) யாதொரு மடத்துக்கு அல்லது கோயிலுக்குச் சொந்தமாயிருக்கும் யாதொரு அசையாப் பொருளைப் பரிவர்த்தனை செய்வதும் விற்பனை செய்வதும் அல்லது கொதுவை வைப்பதும் ஐந்து வருஷத்துக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்கு குத்தகைக்கு விடுவதும் - அந்தப்படி செய்வது ஷை மடம் அல்லது கோயிலுக்கு அவசியமாகவாவது பிரயோஜனகரமாகவாவதிருந்து, மடங்கள், விலக்கப்பட்ட கோயில்கள் ஆகிய இவைகளின் விஷயத்தில் போர்டாராலும், இதர கோயில்களின் விஷயத்தில் கம்மிட்டியாராலும் அனுமதிக்கப்பட்டாலன்றி மற்றப்படி, சட்ட சம்பந்தமானவைகளுமல்ல, செலாவணியாகத்தக்கவைகளுமல்ல.

(2) ஷை மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியாகிலும் பற்றுள்ள யாதொரு நபராகிலும் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்படும் பரிவர்த்தனை, விற்பனை, கொதுவை அல்லது குத்தகைக்கு அனுமதி கொடுத்து யாதொரு போர்டாராலாவது கம்மிட்டியாராலாவது பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவையாகிலும் திருத்தவேண்டுமென்றாயினும் ரத்து செய்யவேண்டுமென்றாயினும் நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; மேலும், அப்படிப்பட்ட விண்ணப்பத்தின்மேல் கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு முடிவானதாகும்.

சிறிதுமட்டில் மதசம்பந்தமாயும் சிறிதுமட்டில் லௌகிக சம்பந்தமாயுமுள்ள இனாங்களுக்கு இந்த ஆக்ட் பிரயோகப்படுவது.

73. (1) சிறிதுமட்டில் மதசம்பந்தமான தன்மையும் சிறிதுமட்டில் லௌகிக சம்பந்தமான தன்மையுமுள்ள யாதொரு ஸ்தாபனத்தின் சம்ரக்ஷணைக்காகவாவது அதற்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கைங்கரியம் அல்லது தருமம் செய்வதற்காகவாவது யாதொரு இனாம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் சொத்து கொடுக்கப்பட்டிருந்தாலும்,

ஏற்படுத்தப்பட்ட யாதொரு இனாமாவது கொடுக்கப்பட்ட யாதொரு சொத்தாவது சிறிதுமட்டில் மதசம்பந்தமான காரியங்களுக்கும் சிறிதுமட்டில் லௌகிக சம்பந்தமான காரியங்களுக்கும் உபயோகிக்கப்பட்டாலும்,

போர்டார் - 1817-ம் வருஷத்திய சென்னபட்டணத்து 7-வது ரெகுலேஷனில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அப்படிப்பட்ட இனாம் அல்லது சொத்து அல்லது அதிலிருந்து கிடைக்கும் வரும்படியில் எவ்வளவு பாகம் மதசம்பந்தமான காரியங்களுக்குப் பங்கீடு செய்யப்படவேண்டுமென்பதை நிச்சயிக்கவேண்டும். அதன்பிறகு, அந்த பாகமானது - மதசம்பந்தமான இனாமாயிருப்பதாகக் கருதப்படுவதுமல்லாமல், அதன் பரிபாலனமும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான உத்தரவினால் பாதிக்கப்படும் யாதொரு நபர் - அப்படிப்பட்ட உத்தரவைத் திருத்தவேண்டுமென்றாகிலும் ரத்துசெய்யவேண்டுமென்றாகிலும் நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; ஆனால், அப்படிப்பட்ட விண்ணப்பத்தின் முடிவுக்கு உட்பட்டு போர்டாரின் உத்தரவு முடிவானதாகும்.

ட்ரஸ்டிக்குச் சுவாதீனப்படுத்துவது.

[24 (2).]

74. யாதொரு கம்மிட்டியார் யாதொரு கோயிலின் பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டியாக எந்த நபரையாகிலும் நியமித்தோ அல்லது யாதொரு போர்டாராவது கம்மிட்டியாராவது பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டியின் அலுவல்களைச் செய்ய எந்த நபரையாகிலும நியமித்தோ இருந்து, அந்த நபர் ஷை மடம் அல்லது கோயிலையாயினும் அதனுடன் சம்பந்தப்பட்ட இனாங்களையாயினும் சுவாதீனப்படுத்திக்கொள்ளாதபடி எதிர்க்கப்பட்டாலும் தடுக்கப்பட்டாலும், கோர்ட்டார் - அந்தப்படி நியமிக்கப்பட்ட நபர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலும் அவரை நியமிப்பதற்காக போர்டார் அல்லது கம்மிட்டியார் பிறப்பித்த உத்தரவை ஹாஜர்ப்படுத்துவதன்மேலும், அதில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய சொத்தை ஷை நபருக்கு சுவாதீனப்படுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

[42.] 75. இந்த ஆக்டிலாகிலும் அதன்படியாகிலும் வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, யாதொரு கோயிலில் ஸ்திரமாய் அனுசரிக்கப்பட்டுவரும் யாதொரு மாமூலுக்காவது, அப்படிப்பட்ட கோயில் ஆசாரத்தின்படியாயினும் மற்றப்படியாயினும் யாதொரு நபருக்கு ஏற்பட்டுள்ள பாத்தியதைகளுக்கும் மரியாதைகளுக்கும் வரும்படிகளுக்கும் மேலாதாயங்களுக்குமாவது இதிற்கண்டதெதனாலும் பாதகம் உண்டாகமாட்டாது.

ஸ்திரமாய் ஏற்பட்டுள்ள ஆசாரங்களுக்கும் மாமூல்களுக்கும் பாதகமில்லையென்பது.

[43.] 76. இந்த ஆக்டிலாகிலும் வேறே யாதொரு ஆக்டிலாகிலும் நிபந்தனை கண்டபடிக்கன்றி மற்றப்படி, பிரதேச கவர்ன்மென்டாராவது தம்முடைய உத்தியோக ஹோதாவில் பிரதேச கவர்ன்மென்டைச் சேர்ந்த யாதொரு நிர்வாக உத்தியோகஸ்தராவது யாதொரு மடத்தின் அல்லது கோயிலின் சம்ரக்ஷணைக்காகக் கொடுக்கப்பட்டாயினும் மற்றப்படி அதைச் சேர்ந்ததாகவாயினுமுள்ள யாதொரு நிலத்தின் அல்லது வேறே சொத்தின் மேல்விசாரணையை ஏற்றுக்கொள்வதோ அல்லது வகிப்பதோ, அல்லது அதன் பராமரிப்புக்காக ஏற்பாடு செய்திருக்கும் யாதொரு இனாமை நிர்வாகம் செயவதிலாகிலும் உபயோகப்படுத்திக்கொள்வதிலாகிலும் எவ்விதமாகவேனும் சம்பந்தம் வைத்துக்கொள்வதோ, அல்லது யாதொரு மதசம்பந்தமான இனாமின் ட்ரஸ்டியை நேமகஞ் செய்வதோ அல்லது ஏற்படுத்துவதோ, அல்லது யாதொரு மதசம்பந்தமான இனாமில் மற்றப்படி எவ்விதமாகவேனும் சம்பந்தப்படுவதோ சட்டசம்மதமாகமாட்டாது.

இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி மதசம்பந்தமான இனாங்களின் விஷயத்தில் கவர்ன்மென்டார் பிரவேசிக்கக்கூடாதென்பது.

77. (1) 1922-ம்௵த்திய சென்னபட்டணத்து கோர்ட் கட்டண திருத்த ஆக்ட் முதல் ஷெட்யூலிலாவது இரண்டாவது ஷெட்யூலிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, 2-வது ஷெட்யூலின் 1-ம், 2-ம் கலங்களில் விவரிக்கப்பட்ட தஸ்தவேஜுகளுக்கு அதன் 3-ம் கலத்தில் கண்டிருக்கும் கட்டணங்கள் சரியான கட்டணங்களாகும்.

இந்த ஆக்டின்படிக்கான தஸ்தவேஜுகளின் மேல் விதிக்கத்தக்க கோர்ட் கட்டணங்கள்.

(2) 1922-ம்௵த்திய சென்னபட்டணத்து கோர்ட் கட்டண திருத்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் - மற்றப்படி கூடுமானவரையில், 2-வது ஷெட்யூலில் சொல்லியிருக்கும் தஸ்தவேஜுகளுக்குப் பிரயோகப்படும்.

[44 .] 78. (1) 1863-ம்௵த்து 20-வது ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்டு இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் இருந்துவருகிற ஒவ்வொரு கம்மிட்டியும் - இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி கிரமமாய் அமைக்கப்பட்டிருப்பதாக எண்ணப்படும்.

இப்போதுள்ள கம்மிட்டிகளைத் திருத்தி அமைப்பதற்கு முன்னே அனுசரிக்க வேண்டிய அங்காமியான நிபந்தனைகள்.

(2) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்திலே உத்தியோகத்தில் இருந்துவருகிற கம்மிட்டி மெம்பர்களுக்கும் ப்ரெஸிடென்டுகளுக்கும், இந்த ஆக்டை அனுசரித்து அந்தக் கம்மிட்டிகளை முதல் தடவையாய்த் திருத்தி அமைப்பதற்கும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படுகையில், அந்த நிபந்தனைகளுக்கு 3-வது ஷெட்யூலில் கண்ட விதிகளுக்குட்பட்டு அர்த்தம் பண்ணவேண்டும்

[45.] 79. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கின பிறகு யாதொரு கம்மிட்டியை முதல் தடவையாய் அமைப்பது விஷயமாகவாகிலும் திருத்தி அமைப்பது விஷயமாகவாகிலும், மற்றப்படி இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை முதலில் அமுலுக்குக் கொண்டுவருவது விஷயமாகவாகிலும் யாதொரு கஷ்டம் உண்டானால், பிரதேச கவர்ன்மென்டார் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி, அந்தக் கஷ்டத்தை நிவர்த்திசெய்வதற்காகத் தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிற யாதொரு காரியத்தை உத்தரவு மூலமாய்ச் செய்யலாம்.

இந்த ஆக்டை அமுலுக்குக் கொண்டுவரும்போது ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திசெய்வது.

1-வது ஷெட்யூல்.

1-ம் பாகம்—தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதாம்சங்கள்.

[21-வது பிரிவைப் பார்க்கவும்.]

யாதொரு நபர் யாதொரு தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்திலே முந்திய வருஷத்தில் 120 தினங்களுக்குக் குறையாமல் வாசஞ் செய்திருந்து, அவர்—

(a) முந்திய வருஷத்தில் யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸிலாராலாவது லோகல் போர்டாராலாவது

சொத்து வரி,
கம்பெனிகளுக்கு வரி, அல்லது
தொழில் வரி

ஆகிய இந்த வரிகளில் ஒன்று அல்லது பல வரிகளின் நிமித்தம் மொத்தத்தில் இருபது ரூபாய்க்குக் குறையாமல் வரி விதிக்கப் பெற்றிருந்தாலும்,

(b) முந்திய வருஷத்தில் வருமான வரி விதிக்கப்பெற்றிருந்தாலும்,

(c) யாதொரு நிலத்தின் ரயத்துவாரி பட்டாதாரராகவாவது இனம்தாரராகவாவது ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்து, அந்த நிலத்தின் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

(d) யாதொரு ரயத்துவாரி பட்டாதாரரிடத்திலாவது இனம்தாரரிடத்திலாவது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட குத்தகை மூலமாய் நிலத்தை கைப்பற்றில் வைத்திருந்து, அந்த நிலத்தின் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

(e) நிலத்தின் அனுபோகதாரராக, மலையாளத்தில் நிலங்களை ரெஜிஸ்டர் செய்வதைக்குறித்த 1895-ம் ௵த்து ஆக்ட் 14-வது பிரிவின்படி சொந்தக்காரருடன் கூட்டாக ரெஜிஸ்டர் செய்யபபட்டிருந்து, அந்த நிலத்தின் வருஷவாரி வாடகைமதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

(f) யாதொரு பூஸ்திதியைக் கைப்பற்றில் வைத்திருந்து அதன் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

(g) ரயத்தாகவோ யாதொரு நிலத்துக்குடையவரின் கீழ் பாயக்காரியாகவோ யாதொரு நிலத்தை கைப்பற்றில் வைத்திருந்து, அதன் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

அவர் - ஷை விஸ்தீர்ணத்தில் தெரிந்தெடுப்பதற்கு யோக்கிதையுடையவராவார்.

2-ம் பாகம்.—தெரிந்தெடுப்பவரின் யோக்கியதைக் குறைவுகள்.

அடியிற்கண்ட யோக்கிதைக் குறைவுகளில் எதற்காவது உட்பட்டிருக்கும் யாதொரு நபர், அதாவது—

(a) ப்ரிடிஷ் குடியாயிராத, அல்லது,

(b) புத்தி சுவாதீனமில்லாதவரென்று யோக்கியதைபெற்ற யாதொரு கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிற, அல்லது

(c) இருபத்தொரு வயதுக்குக் குறைந்தவராயிருக்கிற

யாதொரு நபர் - யாதொரு தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்தின் (எலெக்டொரல்) தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் தம்முடைய பெயரை ரெஜிஸ்டர் செய்வித்துக் கொள்ள பாத்தியதையுடையவராகமாட்டார் :

2-வது ஷெட்யூல்.

[77-வது பிரிவைப் பார்க்கவும்.]

பிரிவு.	தஸ்தவேஜின் விவரம்	சரியான கட்டணம்.
47 (3)	கம்மிட்டியார் யாதொரு ட்ரஸ்டியை சிறிதுகாலத்துக்கு நீக்கிவைத்தாவது தள்ளிவிட்டாவது நீக்கிவிட்டாவது செய்த உத்தரவின்மேல் போர்டாருக்கு அப்பீல்செய்து கொள்வது அல்லது கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது	ரூ. 10
51 (2)	(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி போர்டாரால் நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு ஏற்பாட்டைத் திருத்தவேண்டுமென்றாவது சரிபடுத்தவேண்டுமென்றாவது ட்ரஸ்டியாகிலும் பற்றுள்ள யாதொரு நபராகிலும் போர்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்வது	50
52 (2)	(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ட்ரஸ்டி தண்டனை விதித்து பிறப்பித்த யாதொரு உத்தரவின்மேல் யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது கம்மிட்டியாருக்கு அப்பீல் செய்துகொள்வது	2
52 (3)	பரம்பரையாய் ஏர்பட்ட யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அப்பீலில் கம்மிட்டியார் பிறப்பித்த உத்தரவின்மேல் போர்டாருக்குப் பின்னும் அப்பீல் செய்துகொள்வது ...	2
54	சொத்தை சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு தருமம் அல்லது கைங்கரியம் முதலியவைகளைச் செய்யத் தவறிப்போன நபரிடமிருந்து தொகையை வசூலிக்க ட்ரஸ்டி கோர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது ...	தாவா செய்யப்படும் தொகைக்காக கொடுத்துக் கொள்ளப்படும் ப்ளெய்ன்டுக்கு 1922-ம் ௵த்திய சென்னபட்டணத்து கோர்ட் கட்டண திருத்த ஆக்டின்படி விதிக்கத்தக்க கட்டணம்.
58	யாதொரு மடம் அல்லது விலக்கப்பட்ட கோயிலின் பரிபாலன ஏற்பாட்டைத் தயார் செய்ய வேண்டுமென்று பற்றுள்ள நபர்களில் 20 பேருக்குக் குறையாதவர்கள் போர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது	50
60 (1)	பரிபாலன ஏற்பாட்டின் நகலைக் கோர்ட்டில் தாக்கல் செய்வதற்கான விண்ணப்பம்	10
61	யாதொரு பரிபாலன ஏற்பாட்டைத் திருத்தவேண்டுமென்றாகிலும் ரத்து செய்யவேண்டுமென்றாகிலும் போர்டார் கோர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது ...	2

பிரிவு.	தஸ்தவேஜின் விவரம்.	சரியான கட்டணம்.
63 (1)	மொத்த தொகையையாவது கிடைக்கக்கூடிய மிகுதித் தொகையையாவது மதசம்பந்தமான அல்லது வித்தியா சம்பந்தமான அல்லது தரும சம்பந்தமான இதர காரியங்களுக்கு உபயோகப்படுத்த அனுமதி வேண்டுமென்று யாதொரு ட்ரஸ்டியாகிலும் போர்டாராகிலும் பிரஸ்தாப பிரிவின்படி கோர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது	ரூ. 20
63 (3)	இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவைப் புனர்விமரிசை செய்ய வேண்டுமென்றாவது ரத்து செய்யவேண்டுமென்றாவது மாற்றவேண்டுமென்றாவது ட்ரஸ்டியாகிலும் பற்றுள்ள நபராகிலும் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்வது	20
66 (2)	போர்டாராவது கம்மட்டியாராவது விதிக்கக்கூடிய சகாயத் தொகையை இனாமின் நிதிகளிலிருந்து வசூலிக்கவேண்டுமென்று கோர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது	2
69	இந்தப் பிரிவின்படிக்கான வியாஜ்ஜியங்கள்	50
72 (2)	(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அசையாப் பொருளாயுள்ள சொத்தைப் பராதீனப்படுத்த அனுமதிகொடுத்து போர்டார் பிறப்பித்திருக்கும் யாதொரு உத்தரவைத் திருத்தவேண்டுமென்றாவது ரத்து செய்யவேண்டுமென்றாவது யாதொரு மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியாகிலும் பற்றுள்ள யாதொரு நபராகிலும் கோர்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்வது	1922-ம்௵த்திய சென்னபட்டணத்து கோர்ட் கட்டண திருத்த ஆக்ட் 2-வது ஷெட்யூலிற்கண்ட 17-வது பகுதியின்படி யாதொரு ப்ளெய்ன்டுக்கு விதிக்கப்படத்தக்க கட்டணம்.
74	கம்மிட்டியாரால் நியமிக்கப்பட்ட ட்ரஸ்டியிடத்தில் இனாங்களைச் சுவாதீனப்படுத்தவேண்டுமென்று கோர்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்வது	2

[2-வது ஷெட்யூல்.]

3-வது ஷெட்யூல்.

[78-வது பிரிவைப் பார்க்கவும்.]

அங்காமியான நிபந்தனைகள்.

1. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் உத்தியோகம் வகித்துவரும் கம்மிட்டி மெம்பர்களின் உத்தியோக கால அளவு முடிவாவதற்காக, இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதிலிருந்து இரண்டு வருஷங்களுக்குக் குறையாமலும் மூன்று வருஷங்களுக்கு மேற்படாமலுமுள்ள ஒரு தேதியைப் பிரதேச கவர்ன்மெண்டார் நிஷ்கரிஷை செய்ய வேண்டும் :

ஆனால், யாதொரு கம்மிட்டியின் ப்ரெஸிடெண்டாகவும் இருக்கும் ஒரு மெம்பர்-4-வது விதியின்படி புதிய ப்ரெஸிடெண்ட் தெரிந்தெடுக்கப்படுகிற வரையிலே ப்ரெஸிடெண்டுக்குரிய அலுவல்களைச் செய்துவரவேண்டும்.

2. யாதொரு கம்மிட்டியின் ப்ரெஸிடெண்ட் உத்தியோகத்தில் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியில் யாதொரு காலி நேரிட்டிருந்தாலும், 4-வது விதியின்படி புதிய ப்ரெஸிடெண்ட் தெரிந்தெடுக்கப்படுகிற தேதிக்குமுன் யாதொரு காலி நேரிட்டாலும், அதை இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி பூர்த்திசெய்யவேண்டும் ; மேலும், யாதொரு கம்மிட்டி மெம்பர் உத்தியோகத்தில் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியில் யாதொரு காலி நேரிட்டிருந்தாலும், 1-வது விதியின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிக்கு முன்னே யாதொரு காலி நேரிட்டாலும், அதைப் பிரதேச கவர்ன்மெண்டார் நேமக மூலமாய்ப் பூர்த்திசெய்யவேண்டும் :

ஆனால், இந்த விதியின்படி ப்ரெஸிடெண்டாகவோ மெம்பாகவோ தெரிந்தெடுக்கப்படுகிற அல்லது நியமிக்கப்படுகிற யாதொரு நபர் 1-வது விதியில் குறிப்பிடப்பட்ட தேதி வரையில் மாத்திரமே உத்தியோகம் வகிக்கவேண்டும்.

3. புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட மெம்பர்கள் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் உத்தியோகம் வகித்துவரும் மெம்பர்களின் உத்தியோக கால அளவுகள் முடிவாவதற்காக [illegible]-வது விதியின்படி நிஷ்கரிஷை செய்யப்படும் தேதியன்றைக்கு உத்தியோகம் வகிக்க ஆரம்பிக்கும்படியாக, மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைக் கம்மிட்டியின் ப்ரெஸிடெண்ட். செய்விக்கவேண்டும்.

4. அந்தத் தேதியன்றைக்காவது அதற்குப் பிறகு கூடிய சீக்கிரத்திலாவது, புதிய ப்ரெஸிடெண்டைத் தெரிந்தெடுப்பதற்காக ப்ரெஸிடெண்டால் நிஷ்கரிஷை செய்யப்படும் தினத்திலும் காலத்திலும் ஒரு சபை கூட்டப்படவேண்டும்.

பி. எல். மூர்,
கவர்ன்மெண்ட் ஆக்டிங் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

N DURAISWAMI RAO,
Acting Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.